சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை -

நக்கீரர்

கழக வெளியீடு: ௬௩௪

சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை - III

நக்கீரர்

ஆசிரியர்:
புலவர், கா. கோவிந்தன், எம். ஏ.,

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Jan., 1953.
Reprint: Nov., 1956.

Sangath Thamizhp Pulavar Varisai—Book III

NAKKEERAR

[All Rights Reserved]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1—C. 1200.

பதிப்புரை

நக்கீரர் சங்கப்புலவர்களுள் தலைமணியாகத் திகழ்பவர். இவர்தம் நூல்கள் அரிய கருத்து நயங்களும் நுட்பதிட்பங்களும் செறிந்தவை. இவர் புலமைப் பெருமிதத்தால் அஞ்சாநெஞ்சம் படைத்த அருந்திறல் வீரரும் ஆவர். இவர்தம் வரலாற்றைத் தமிழ்மக்கள் யாவரும் அறிந்து இன்புற விழைவர்.

அவ்விழைவுக்கு விருந்தாக நக்கீரர் வரலாற்றைப் புலவர் திரு. கா. கோவிந்தன் அவர்கள், அவர்தம் பாநயங்களின் ஆய்வுடன் நன்முறையில் ஆக்கித் தந்துள்ளார்கள்.

இதனைச் சங்கத் தமிழ்ப்புலவர் வரிசையில் மூன்றாவதாக வெளியிட்டுள்ளோம். நம் தமிழக நன்மக்கள் யாவரும் இதனை வாங்கிக் கற்று எம்மை ஊக்குவிப்பார்களென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

		பக்கம்
க.	தோற்றுவாய்	1
உ.	பிறப்பு, குலம், சமயம்	2
ங.	வாழ்க்கைநிலை	8
ச.	பெருமை	10
ரு.	குணநலம்	13
சு.	நக்கீரர் காலமும் அவர்காலப் புலவர்களும்	24
எ.	நக்கீரர் பாராட்டிய அரசர்கள்	29
அ.	நக்கீரரைப்பற்றிக் கூறும் கதைகள்	43
கூ.	நக்கீரர் இயற்றிய நூல்கள்	62
க0.	களவியல் உரை	71
கக.	திருமுருகாற்றுப்படை	82
கஉ.	நெடுநல்வாடை	94

நக்கீரர்

க. தோற்றுவாய்

உலக உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்று என்ற உறுபுகழ் பெற்ற பெருமொழி, நம் செந்தமிழ் மொழி; அது, அப் புகழ் பெறுவதற்குக் காரணமாய் விளங்குவன, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு, ஐம்பெருங் காப்பியம், ஐஞ்சிறு காப்பியம் போன்ற பேரிலக்கியங்களும், தொல்காப்பியம் போன்ற ஒல்காப் புகழ் கொண்ட இலக்கண நூல்களும் ஆம்.

இத்தகைய இலக்கிய இலக்கணப் பெருஞ்செல்வங்களைப் பெற்றுப் பேணித்தந்தவர், கடல்கொண்ட மதுரையிலும், கபாடபுரத்தும், மதுரையிலும் இருந்து தமிழாய்ந்த புலவர்பெருமக்களாவர்; மதுரையில் அமைந்த கடைச் சங்கத்து இருந்து தமிழாய்ந்த புலவர்கள் நாற்பத்தொன் பதின்மர் என்ப; ஆனால் அவர்கள் தொகை, நானூற்றுத் தொண்ணூறுக்கும் மேலாம். அவர்களுள் தலைமைக்கண் நின்றார் நக்கீரர், கபிலர், பரணர் என்ற முப்பெரும் புலவராவர்; இவர்கள் மூவருள்ளும் முதற்கண் வைத்துப் போற்றப்பெறும் பெருமையுடையாரும், தமிழ்ச்சங்கத் தலைவர் என்ற தகுதிப்பாட்டினைப் பெற்றாரும் ஆய பெரும்புலவர் நக்கீரர் ஆவர். தமிழ்ப்புலவர்களுள் தலைமைக்கண் நின்று தமிழ் வளர்த்த அவர்தம் வரலாற்றை அறிந்து மகிழ்வோமாக.

உ. பிறப்பு, குலம், சமயம்

தமிழ் வளர்த்த புலவர்களுள் பலர் தம் வரலாறு அறியப் பெறுவதில்லை; இயற்பெயர் தாமும் அறியப்பெறாப் புலவர்களும் உளர்; அத்தகைய குறைபாடு, நக்கீரர் பால் இல்லை; அவர் பெயர், மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார் என அழைக்கப் பெறுவதினாலேயே, அவர் மதுரையில் பிறந்தவர்; கணக்காயனார் என்பார்தம் அருமை மகனார்; நக்கீரனார் என்ற இயற்பெயருடையார் என்ற வரலாறுகள் உணர நிற்கும் பேறு நக்கீரர்க்கு உண்டு.

மதுரை, தமிழ்வளர்த்த பெருமை உடையது; "கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்" எனப் போற்றுவர் மணிவாசகப் பெருந்தகையார்; தமிழகத்தின் புலவரெல்லாம் தன்பால் வந்துகூடித் தமிழாய்ந்த பெருமையுடையது; அதுவேயன்றி, ஐம்பதின்மர்க்கு மேற்பட்ட புலவர்களின் பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும் விளங்கிய பெருமையுடையது; புலவர்கள் தமிழ்வளர்க்கப் பேரவை அமைத்துப் பெருந்துணைபுரிந்த பாண்டிய மன்னர்களின் தலைநகராம் தகுதியும் மதுரைக்கே உண்டு.

இத்தகைய மாண்புமிக்க மதுரை மாநகரில், கணக்காயர் ஒருவர் இருந்தார்; இந்நகர், கணக்காயர் பலர் வாழத் தக்க மாபெரும் நகரமாகும். ஆதலின், ஆங்கே, கணக்காயர் பலர் வாழ்ந்திருப்பர். எனினும் அவர்களுள் நக்கீரனாரின் அருமைத் தந்தையார் பெரும்புகழ் பெற்று விளங்கிய காரணத்தால், மதுரைக் கணக்காயனார் என்ற சிறப்பினை அவர் ஒருவரே பெற்று விளங்கினார்; தமிழ்எழுத்துக்களைத் தமிழ்க்கணக்கு, தமிழ்நெடுங்கணக்கு எனப் பெயரிட்டு அழைப்பர்; இளஞ்சிறார்கட்கு எழுத்துக்களைக் கற்பிக்கும் ஆசிரியரைக் கணக்காயர் என அழைப்பது வழக்கம்; அதனால், நக்கீரனாரின் தந்தையார், தமிழ்எழுத்துக்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியராவர் என்பர் சிலர்; ஆனால், கணக்கு என்பதற்குத் தமிழ் எழுத்துக்கள் என்ற பொரு

ளும் உண்டு எனினும், அஃது ஒன்று மட்டுமே பொருளாகாது; வேறு பொருள்களும் உண்டு.

தமிழ்நூல்களுள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, ஆகிய நூல்களைப் பதினெண் மேற்கணக்கு என்றும், நாலடி, நான்மணி, நாலுற்பது, நாலைந்திணை, முப்பால், கடுகம், கோவை, பழமொழி, மாமூலம், கைந்நிலை, காஞ்சி, ஏலாதி என்ற பதினெட்டு நூல்களையும் பதினெண் கீழ்க்கணக்கு என்றும் வழங்குவர். ஆதலால், கணக்கு என்பது நூல் எனப் பொருள் பட்டு, கணக்காயர் என்ற சொல், நூல் உணர்த்தும் ஆசிரியர் எனப் பொருள்படும் ஆதலாலும், மணிமேகலையில் வரும் சமயக் கணக்கர் என்ற சொல், சமயநூல்வல்ல ஆசிரியர் எனப் பொருள்படும் ஆதலாலும், நிகண்டுகள், கணக்காயர் என்ற சொற்கு ஓத்துரைப்போர், நூலுரைப்போர் எனப் பொருள்தருகின்றன ஆதலாலும், பிங்கலத்தில், 'எழுத்தும் எண்ணும் கணக்கென்றாகும்' என வருதலின், இலக்கியமேயன்றி இலக்கணமும் கணக்கென அழைக்கப் பெறும் என்பது புலனும்; ஆதலாலும், மதுரைக் கணக்காயர், எழுத்தெழுதக் கற்பிக்கும் ஆசிரியர் அன்று, தொல் கேள்வித்துறைபோகிய நல்லாசிரியர் ஆவர் என்பது புலனும்; மதுரைக் கணக்காயனர் பாடிய பாடல்கள் அகத்திலும் புறத்திலும் இடம் பெற்றிருப்பதொன்றே அவர் புலமைக்கு எடுத்துக் காட்டாதல் காண்க.

இவ்வாறு, வழிவழித் தமிழ்வளர்த்த குடியிலே வந்தவர் நக்கீரர்; நக்கீரரைப் பெற்றெடுத்த தந்தை யார்? அவர் பிறந்த பொன்னாடு எது? என்பதை அறியும் வாய்ப்புக் கிடைத்தது; ஆனால் அவர் பிறந்த குலம்யாது என்பதை, அறியும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. கபிலர், அந்தணர் குலத்தினர் என்பதை, "யானே, பரிசிலன்; மன்னும் அந்தணன்," "அந்தணன் புலவன் கொண்டு வந்தனனே," என்ற அவர் பாடலும், "புலனழுக் கற்ற அந்தணாளன்" என்ற மாறோக்கத்து நப்பசலையார் பாட்டும் அறிவிப்பதைப் போலவும், "உறையூர் ஏணிச்சேரி முடமோசி, பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகன், கடியலூர் உருத்

திரங் கண்ணன் என்பன அந்தணர்க்குரியன," எனப் பேராசிரியர், அறிவிப்பதைப் போலவும், தன் குலம் யாது என்பதை நக்கீரரோ, அவர் குலம்யாது என்பதைப் பிறரோ அறிவித்தார் அல்லர்; கோவூர்கிழார், ஆவூர்கிழார் முதலியோர், வேளாளர்க்குரிய கிழார் என்னும் அடையாளப்பெயர் பெற்றிருப்பதைப்போல், தம்குலம் அறிவிக்கும் அடையாளப்பெயர் எதையும் நக்கீரர் பெறவில்லை.

இவ்வாறாகவும், நக்கீரர், வேள்வி இயற்றாது, சங்கறுக்கும் தொழில் மேற்கொண்ட பார்ப்பனர் குலத்தைச் சேர்ந்தவர் என்றும், விசுவப்பிராமணர் குலத்தினர் என்றும் கொள்ளும் வழக்கொன்று நிலவுகிறது; அவ்வாறு கொள்வதற்கு ஆதாரமாய் நிற்பன, "கொங்கு தேர் வாழ்க்கை" என்னும் செய்யுட் பொருள்பற்றி இறையனார்க்கும், நக்கீரனார்க்கும் நிகழ்ந்த சொற்போரில், இறைவன் நக்கீரரை நோக்கி,

"அங்கம் குலுங்க அரிவாளில் நெய்தடவிப்
பங்கம் படஇரண்டு கால்பரப்பிச் — சங்கதனைக்
'கீர் கீர்' என அறுக்கும் கீரனோ என்கவியை
ஆராயும் உள்ளத் தவன்?"

என்று கூறி எள்ளி நகையாடினராக, அது கேட்டு வெகுண்ட நக்கீரர்,

"சங்கறுப்பது எங்கள் குலம்; தம்பிராற்கு ஏது குலம்
பங்கமறச் சொன்னால் பழுதாமே — சங்கை
அரிந்துண்டு வாழ்தும்: அரனாரைப் போல
இரந்துண்டு வாழ்வதில் லை."

என்று எதிருரைத்துப் பழித்தார் என வழங்கும் ஒரு கதையும்,

"வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த
வளைகளைந் தொழிந்த கொழுந்து." (அகம். ௨௪)

என்ற அகநானூற்றுச் செய்யுளில் வரும் வேளாப்பார்ப்பான், யாகம் பண்ணாத ஊர்ப்பார்ப்பான், இவர்களுக்குச் "சங்கறுக்கையும் தொழில்" என்ற பழைய உரையும் ஆகும்.

"'பார்ப்பான்' என்பது ஒரு காரணப் பொதுச்சொல்; இச்சொல் அடையின்றிக் கூறுங்கால், இடுகுறி மாத்திரையாய் ஒரு சாதியுட் பிறந்தானைக் குறிக்கும்; அடையொடு படுக்குங்கால், வேறு பிறரைக் குறிப்பதுமாகும்.... 'வேளாப்பார்ப்பார்' என்பது கொற்றொழில் புரியும் மரபினரைக் குறிப்பதாகும்.... பொற் கொல்லராகிய கம்மாளர்கள் தம்மை 'விசுவப் பிராமணர்' எனக் கூறிக்கொள்வதற்கு ஆதாரம் இருத்தல் வேண்டும்; அகப்பாட்டுரைகாரர், 'ஊர்ப்பார்ப்பான்' எனக் கூறுவதும் இக் கருத்துப் பற்றியே போலும். விசுவப்பிராமணன் எனினும் ஊர்ப் பார்ப்பான் எனினும் ஒக்கும். விசுவம்: உலகம்," என்று கூறி, நக்கீரர் பார்ப்பாராகார்; வேண்டுமானால், விசுவப் பிராமணர் குலத்தினர் எனக்கொள்ளுதல் கூடும் என்பதை ஒருவாறு ஒப்புக் கொள்வாரும் உளர்.

இக் கூற்றுக்கள் எல்லாம், இறையனார்க்கும், நக்கீரர்க்கும் சொற்போர் நடைபெற்றது என்ற கதையினை அடிப்படையாகக் கொண்டுள்ளன; அக் கதை ஆதாரமற்றது என்பது, பின்னர் நக்கீரரைப் பற்றிய கதைகளின் ஆராய்ச்சியின்போது அறிவிக்கப்படும். அக் கதை ஆதாரமற்றது; எனவே, குடமுடையான் வீழ்ந்தக்கால் குடமும் விழுந்தவாறு போல அக் கதையினை அடிப்படையாகக் கொண்டு கூறப்படுவன எல்லாம் தள்ளப்படும் என உணர்க. அக் கதையினை நம்பி, நக்கீரர் தொழில் சங்கறுப்பது என்பதை ஏற்றுக்கொண்ட பின்னரே, சங்கறுப்போர் எக்குலத்தினர் என்பதை ஆராய்தல் வேண்டும்; அக் கதையினையே ஏற்றுக் கொள்ளாதவழி, சங்கறுப்போர் யார்? அவர்குலம் யாது? என்பதை ஆராய்தல் அறிவுடைமை ஆகாது; ஆகவே, சங்கறுப்போர் எக்குலத்தினர் என்பதற்கு

விளக்கம் அளிக்கும், அகநானூற்று அடிகளும், அதன் உரையும், நக்கீரர் குலம் அறிவார்க்குத் துணைபுரியா என்க.

கீர் என்ற சொல், வடமொழியில், சொல் அல்லது கலைக்கடவுள் எனப் பொருள்படும்; அக்கால மக்களுள், மதுரைக் கணக்காயனார் மகனார் பெரும்புலமை பெற்றுப் புலவர்க்கெல்லாம் தலைவராய் விளங்கியமை கண்டு "சொல் வல்லான்" என்ற பொருள் தோன்ற கீரன் எனப் பெயரிட்டனர் எனவும், அவர் புலமையும் பெருமையும் அறிந்து அறிஞர்கள், 'ந' என்ற சிறப்புப்பொருள் உணர்த்துவதோர் இடைச் சொல்லையும், உயர்வுகுறித்து வரும் உயர்திணை ஒருமைப்பன்மை உருபாகிய 'ஆர்' என்பதையும், அவர் பெயர்க்கு முறையே முன்னும் பின்னும் கொடுத்து நக்கீரனார் என வழங்கினர் எனவும் கூறுவாரும் உளர். அவர் தொழிலும், குலமும், அறிவிக்கும் பாட்டு என வழங்கும் அப் பாட்டுள், 'கீர் கீர் என அறுக்கும் கீரன்' என்ற தொடரில் வரும், "கீர் கீர்" என்ற சொற்கள், சங்கறுக்குங் கால் உண்டாகும் 'கீர் கீர்' என்ற ஒலி எனப்பொருள் படுவதும் காண்க. கீர் = ஒலி; மொழி = ஒலிவடிவம். மொழிவல்லோன் = கீரன்; இவ்வாறு, கீரன் என்ற பெயர்க் குத் தாம் கொண்ட காரணத்தை அவர்கள் நிலைநாட்டுவர்.

நக்கீரர் வாழ்ந்த சங்ககாலத் தமிழர்களிடையே சமயப்பூசல் இடம் பெறவில்லை; கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற இயற்கைக் கடவுளரையே வழிபட்டு வந்த தமிழர்கள், காலம் செல்லச் செல்ல சிவன், திருமால், முருகன் போன்ற வைதீகக் கடவுளர்களையும் வணங்கத் தொடங்கி விட்டனர்; சைவமும், வைணவமும் அல்லாமல் வேறுபிற சமயங்களும் அவர்களிடையே பரவியிருந்தன; தமிழர்கள், தாங்கள் விரும்பிய சமயத்தை மேற்கொண்டு வாழஉரிமை பெற்றிருந்தனர்; ஒரு சமயத்தை மேற்கொண்டு வாழ்ந்த ஒருவர், சின்னாள் கழித்து அச் சமயத்தை விட்டு வேறு சமயத்தை மேற்கொள்வதை அக்காலச் சமயவிதிகள் தடை செய்வதில்லை. இவ்வாறு சமய வாழ்வில் சமரசம் நிலவிய காலத்தில் வாழ்ந்தவர் நக்கீரர்.

ஆகவே, அவர் தாம் விரும்பி வழிபடு கடவுளாக முருகனை மேற்கொண்டார்; அவன்பால் கொண்ட அன்பின் பெருக்கால், தம் புலமை நலமெல்லாம் தோன்றி விளங்கும் திருமுருகாற்றுப்படை பாடிப் பரவியுள்ளார்; திருமுருகாற்றுப்படை, சங்ககாலத் தமிழர்களிடையே நிலவிய சமயநிலையினைத் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டும் இயல்புடையது; நக்கீரர், முருகனை வழிபடு கடவுளராகக் கொண்டு வாழ்ந்தவரே எனினும், பிறசமய வெறுப்பாளர் அல்லர்; இஃது, அவர் இயற்றிய ஆற்றுப் படையில் பிறகடவுளரைப் போற்றிப் புகழ்வதாலும், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனைப் பாடிய பாட்டில், சீற்றத்தில் சிவனையும், வலியில் வாலி யோனையும், புகழில் மாயோனையும், முன்னியது முடித்த லில் முருகனையும் ஒத்தவன் என்று கூறிச் சிவன், பலதேவன், திருமால், முருகன் ஆகியோரைப் பாராட்டி யிருப்பதாலும் தெளிவாகும். நக்கீரர் சமயம் இஃது என் பதை, இத்தகைய அவர் பாடல்களாகிய அகச்சான்று களே அல்லாமல், நம்பியாண்டார்நம்பி இயற்றிய திருத் தொண்டர் திருவந்தாதியும், அவர் வரலாறு குறித்து வழங்கும் பிறபுராணங்களும் விளங்கக் கூறியுள்ளன.

௩. வாழ்க்கைநிலை

புலவர்கள் வரலாற்றினை அறிவதற்கு வழித்துணையாய் விளங்குவன அவர் இயற்றிய பாடல்களே; அவர் பாடல்கள் எல்லாம் அகப்பாடல்கள், புறப்பாடல்கள் என இருவகைப் படும்; அகப்பாடல்கள், அன்பின் ஐந்திணை தழுவி, சுட்டி ஒருவர் பெயர் குறியாது வருவன ஆதலின், அவை வரலாறு அறியத் துணைபுரிவன அல்ல; தங்கள் அன்பிற்குரிய அரசர்களை, தங்கள் வறுமைபோக வழங்கிய வள்ளல்களைப் பாடிய பாக்கள் புறப்பாக்களே ஆதலின், அப் புறப்பாக்களே வரலாறு உணர்த்துவதில் பெருந் துணைபுரியும்.

நக்கீரர் பாடிய பாக்களுள் புறத்துறை தழுவிய பாடல்கள் ஐந்தே; அவற்றுள்ளும், இரண்டு பாடல்கள் வரலாற்றுச் சிறப்பில்லாதன: ஒன்று பொருண்மொழிக் காஞ்சியாம் பொருளுரை கொண்டது; மற்றொன்று முருகனைப் பாராட்டிய திருமுருகாற்றுப்படை. ஆக இவ்வாறு, அவர் பாடிய பாக்கள் எல்லாம் புறப்பொருளுரைக்கும் பெருமை இலவாய்க் காணப்படுதலால், அவர் வரலாற்றினை நம்மால் நன்கு அறிந்துகொள்ள முடியவில்லை. நக்கீரர், எந்த அரசன் அவையிலும் இருந்து பாடியவர் அல்லர்; இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனுக்கும், நக்கீரனார்க்கும் உள்ள தொடர்புயாது என்பதை, அவனை அவர் பாடிய பாட்டு புலப்படுத்தவில்லை; தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாராட்டிய நெடுநல்வாடையும் அவர் வரலாறுபற்றி ஏதும் குறிப்பிடவில்லை; பிடவூர்கிழான் பெருஞ்சாத்தனைப்பாடிய புறநானூற்றுப் பாட்டில், அவனைக் காண்பதற்கு முன்னாள் நண்பகலில் சுரனுழந்து வருந்தியதாகவும், மாலையில் அவன் வாயில் முன் நின்று வாழ்த்தியதாகவும், அவன் இவரை அன்புடன் ஏற்றுத் தன் மனைவியை அழைத்து, "என்னைப் போற்றுவதுபோல் இவனையும் போற்றுக," என்றான் எனவும், அன்று முதல் "அவனை மறந்ததும்

இலன்; பிறரை உள்ளியதும் இலன்," எனவும் கூறி யுள்ளார். இதனால், நக்கீரரும் ஏனைய புலவர்களைப் போன்றே வறுமையால் வாடி, வழிபல கடந்து வள்ளி யோரை உள்ளிச் சென்றவராவர் என உணரலாம்.

நக்கீரர், மக்களோடு துவன்றி மனையறம் காத்த மாண்புடையாளராவர்; மங்கலம் எனப்படும் மாட்சிமிகு மனையாளையும், நன்கலம் எனப்படும் நன்மக்கட் பேற்றை யும் பெற்றவர். தந்தை மதுரைக்கணக்காயர் எனவும், மகன் கீரங்கொற்றனார் எனவும் தம்குடிவழி உரைத்த நக்கீரர், தம் சான்றாண்மை கேட்டுப் பெரிதுவக்கும் பேறு பெற்ற தாய் யார்? தம் மனைவி யார்? என்பதை அறிவித் தாரல்லர். தந்தை கணக்காயனார் ஒரு பேராசிரியர்; தன் பால் வந்து பயின்றார் பலர்க்கும் தமிழ் அறிவித்த தகை மைசால் ஆசிரியர்; மகன் மாபெரும் புலவனார். இவ்வாறு, வழி வழியாகத் தமிழ்மொழிக்குத் தொண்டு செய்த தொல்குடியில் தோன்றிய வாழ்வினராவர்.

நக்கீரர், சங்கறுக்கும் தொழிலுடையார் என்ப; அது பொருந்தாப் பொய்யுரை என்பது முன்னரே அறிவிக்கப் பட்டது; அவர் தம் தந்தையார் மேற்கொண்ட கணக்காயர் தொழிலுடையார் என்றும் கூறுவதற்கில்லை; சங்கத் தமர்ந்து தமிழாராய்வதையே, அவர், தம் தொழில் என மேற்கொண்டார் போலும்!

௩. பெருமை

நக்கீரர், தமிழ்ச்சங்கப் புலவர்களுள் தலைவராம் தகுதியுடையார் என்பதும், சங்கப்புலவர்களைக் குறிப்பிடும் நூல்கள் எல்லாம் நக்கீரரை முதற்கண் கூறியே, பிறபுலவர்களைக் கூறுகின்றன என்பதும் அவர் பெருமைக்குரியனவாகும். தொல்காப்பியம் பொருளதிகாரத்திற்கு உரை கண்ட பேராசிரியர், "கடைச்சங்கத்தாருட் களவியற் பொருள் கண்ட கணக்காயனார் மகனார் நக்கீரர்," எனப் பெயர் கூறிப்போற்றி, அவர்கள், "புலவுத்துறந்த நோன்புடையராகலாற் பொய்கூறார்," எனப் புகழ்வதாலும் நக்கீரர் பெருமை நன்கு வெளியாகும்.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த,
மறைமொழி தானே மந்திரம் என்ப."

என்ற தொல்காப்பியம் செய்யுளியல் நூற்பா உரையில், நக்கீரர், 'ஒன்னார்த்தெறலும், உவந்தாரை ஆக்கலும் வல்ல தவம் வரப்பெற்றவராவர்,' எனப் பேராசிரியர் போற்றுவதும் இவர் பெருமைக்கோர் எடுத்துக்காட்டாம் சங்கத்தமர்ந்து தமிழாய்ந்துவரும் நக்கீரர்முன், ஆரியம்வல்ல கொண்டான் என்னும் பெயருடைக் குயவன் ஒருவன் வந்து நின்று, வடமொழியை வாழ்த்தி, தமிழை இழித்துக்கூற, அதுகேட்ட நக்கீரர் ஆறுச்சினம் கொண்டு, 'எம் தாய் மொழியை இழித்துக்கூறிய நின்னை இன்னே இறக்கும்படிச் செய்கிறேன்', என்று கூறி,

"முரணில் பொதியில் முதற்புத்தேள் வாழி!
பரண கபிலரும் வாழி! — அரணிலா
ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கொண்டான்
ஆனந்தம் சேர்கசுவா கா!"

என்ற பாட்டைப்பாட, அவ்வேட்கோ, அவ்விடத்திலேயே வீழ்ந்து மாண்டான்; பின்னர் பலர்வந்து 'அவன் பிழை பொறுத்து உயிர்தருக' என்று வேண்டிக்கொள்ள,

"'ஆரியம் நன்று ; தமிழ்தீது' என உரைத்த
காரியத்தால் காலக்கோட் பட்டானைச்—சீரிய
அந்தண் பொதியில் அகத்தியனார் ஆணையால்
செந்தமிழே தீர்க்கசுவா கா."

என்று பாடி அவனைப் பிழைப்பித்தார். பேராசிரியர், இவ்விரு பாக்களையும் எழுதி, "இவை தெற்கண் வாயில்திற வாத பட்டிமண்டபத்தார் பொருட்டு நக்கீரர், ஒருவன் வாழவும், ஒருவன் சாவவும் பாடிய மந்திரம் அங்கதப் பாட்டாயின," என்று எழுதுவர். இதனால், நக்கீரர், பேராசிரியர் காலத்திலேயே, ஆக்கவும் அழிக்கவும் வல்ல நிறைமொழி மாந்தராகப் பெருமை செய்யப் பெற்றார் என்பது புலனாம்.

மேலும், கற்பனைக் களஞ்சியமாகிய துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், இவரை, "இனைவறு குறுமுனி இலக்கணம் பெறப்புனை தரும் இலக்கியப் புலவர் சிங்கம்," எனப் போற்றுவதும், கந்தபுராண ஆசிரியராகிய கச்சியப்ப சிவாசாரியரும், இவரைப், "பொய்யற்ற கீரன் முதலாம் புலவோர்," எனப் புகழ்வதும், இவர் பெருமை உணர்த்து வன காண்க.

மதுரை மேலைமாசி வீதியின் மேல்சிறகில் அமைந்து, சங்கத்தார் கோயில் என வழங்கும் நக்கீரர் கோயிலும், திருப்பரங்குன்றத்தில் நடைபெறும் பங்குனித் திருவிழா நான்காம் நாளன்று நடைபெறும் நக்கீரனைச் சிறை மீட்டருளிய திருவிழாவும், அன்று நிகழும் நக்கீரர் திருவுருவ உலாவும், நக்கீரர்தம் தெய்வத்தன்மைக்குச் சான்றாதலும் காண்க. இவ்வாறு, புலவருட் புலவர், மறை மொழிவல்ல நிறைமொழிப் புலவர் என்றெல்லாம் போற்றப்படும் பெருமை உடையவர் நக்கீரர்.

௫. குண நலம்

'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.' (குறள். ௫௦௫)

என்பர் ஆதலின், ஒருவர் செய்த செயல்களை அறிந்தே, அவருடைய குணங்குற்றங்களை மதிப்பிடல் இயலும். நக்கீரனார் பால் அமைந்து கிடக்கும் குணநலங்களை அறிய விரும்புகிறோம்; ஆனால், அவர் வாழ்க்கையினையோ, வாழ்வில் அவர் மேற்கொண்ட செயல்களையோ நம்மால் அறியமுடியவில்லை. நக்கீரனார் உள்ளார்; அவர் பாக்கள் உள்ளன; நக்கீரனார் பாக்களில்தான் நக்கீரனாரை நாம் காண்கிறோம்; பாக்கள், பாடுவோர் தம் மனத்தைப் படம்பிடித்துக் காட்டும் என்ப; ஆகவே, நக்கீரனார் தம் பாடல்களைப் பார்த்து அவர் பண்பை அறிதலே நன்று; அவர் பாடலைப் பயின்று பார்ப்பார்க்குப் புலப்படும் நக்கீரனார் பண்புகள் பற்பலவாம்.

"பொறாமை புலவர்க்கு அணிகலன்" என்ற பொய்யுரைக்கு எடுத்துக்காட்டாய் நிற்பவர் நக்கீரர். "நக்கீரன் பொறாமை உடையவன்" என ஆலவாயின் அவிர்சடைக் கடவுளே கூறினர் எனின், அவர் பொறாமைக்கோர் எல்லையுண்டோ? என்றெல்லாம் பேசுவர் சில இழிமக்கள். நக்கீரர், புலவர் பலர்க்குத் தலைவராம் தகுதியுடையவர் எனக் கூறுவோரே, அவர் பொறாமையே உருவாக்கொண்டவர் எனக்கூறுகின்றனர்; பொறாமையின் பொல்லாங்குகளை உணர்ந்த புலவர்கள், பொறாமை உடையான் ஒருவனைத் தங்கள் தலைவராகக் கொண்டனர் என்பது எவ்வாறு பொருந்துமோ அறியேம்!

நக்கீரனார் நூல்களை நுணுகி நோக்கினார்க்கு, அவர், அழுக்காறு இலாத இயல்பினை ஒழுக்காறுக் கொண்ட உயர் பேராளர் என்பது புலனும்; நக்கீரர் தம்மையொத்த புலவர்களைப் போற்றும் பண்புடையவராவர். "புலவருட் புலவனாய்ப் போற்றப் படுவோன் யான்; நான் பிற புலவர்களைப் புகழ்வதா? புலவர்களன்றோ என்னைப் புகழ்தல் வேண்டும்" என்று எண்ணியவரல்லர். தம் காலத்தும்,

அதற்கு முன்னும் வாழ்ந்து பெரும்புகழ் பெற்ற புலவர் பெருமக்களை நக்கீரர் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

பாரி, பறம்பாண்ட பெருவீரன்; சிறந்த கொடையாளன்; அவன் புகழ் பரவுவது கண்டு அழுக்காறு கொண்டு, அவனை அழிக்க எண்ணிய மூவேந்தர்கள் அவன் பறம்பரணை முற்றுகையிட்டனர்; முற்றுகை பலநாள் நீடித்தது; உள்ளிருப்போர்க்கு உணவுக்குறை யொன்றும் உண்டாக வில்லை எனினும், அரிசி உணவு இல்லாக்குறை யொன்று மட்டு மிருந்தது; அதைப் பாரியின் நண்பரும் பெரும்புலவரும் ஆய கபிலர் உணர்ந்தார்; பறம்பிற்குள்ளே நெல்லரிசி கிடைத்தல் அரிது; அரிசி அரணிற்கு வெளியிலிருந்தே வருதல் வேண்டும்; அதற்கு ஓர் உபாயங் கண்டார்; பறம்பு மலைக் கிள்ளைகளைப் பிடித்துப் பழக்கினர்; கோட்டையைக் கடந்து வெகுதொலைவு சென்று, ஆங்குள்ள வயல்களினின்றும் கதிர்களை வாயிற் கௌவிக்கொணருமாறு பணித்தார்; அவையும் அவ்வாறே செய்தன; அகவாழ் வீரர் அரிசி உணவு பெற்றனர்; அதனால் ஆற்றல் மிகுந்து விளங்கிய அவர்கள் துணையால், பாரி, பறம்பரணைக் கடந்து வெளிப் போந்து வேந்தரை வென்று துரத்தினன். இவ்வாறு பாரி பெற்ற வெற்றிக்குக் காரணமாய கபிலரின் செய்கையைக் கேட்ட நக்கீரர் அவர்தம் இவ்வரும்பெரும் செயலைப் போற்றினர். அவர் செயலைப் போற்றியதோடு அவரையும், "உலகெலாம் பரவிய புகழுடையார்; பலரும் புகழும் புகழுடையார்; வாய்மை வழுவாப் பெரும்புலவன்," என்றெல்லாம் போற்றிப் போற்றிப் புகழ்ந்துள்ளார்;

> "உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை
> வாய்மொழிக் கபிலன் சூழச், சேய் நின்று
> செழும்செய் நெல்லின் விளைகதிர் கொண்டு,
> தடந்தாள் ஆம்பல் மலரொடு கூட்டி,
> யாண்டுபல கழிய வேண்டுவயின் பிழையாது,
> தாளிடூஉக் கடந்து, வாளமர் உழக்கி
> ஏந்து கோட்டு யானை வேந்தர் ஓட்டிய
> கடும்பரிப் புரவிக் கைவண் பாரி." (அகம். எஅ)

ஊணூர் என்றோர் ஊர்; அவ்வூர்க்குரியோன் தழும்பன் என்பவன்; அவன் வழுதுணைத் தழும்பன் என்ற காரணப் பெயராலும் அழைக்கப் பெறுவான்; அவனையும் அவன் ஊணூரையும், அவ்வூணூருக்கு அப்பாலுள்ள மருங்கூர்ப் பட்டினத்தையும் பாராட்டிய நக்கீரர், "தழும்பன், வாட்போர் வல்லவன்; தமிழ்நாடு முழுதும் வென்றவன்; புகழ்ந்து நிற்பார்க்குப் பெரும்பொருள் கொடுக்கும் நாளோலக்கச் சிறப்பினன்," என்றெல்லாம் அவனைப் பாராட்டினர்; இவ்வாறு அவனைத் தாம் பாராட்டியதால், பாராட்டவேண்டிய அளவு, அவனைப் பாராட்டியதாக அவர் உள்ளம் அமைதி கொள்ளவில்லை; அவனை மேலும் பாராட்ட விரும்பினர். உடனே, "தழும்பன், தூங்கல் ஓரியார் பாராட்டைப் பெற்ற உயர்ந்த பெரும்புகழ் உடையான்" என்று பாராட்டினர்; பின்னரே அவர் உள்ளம் அமைதியுற்றது; இவ்வாறு தாம் பாராட்டியது பெருமையன்று: தூங்கலோரியார் பாராட்டியதே பெரும்புகழாம் எனக் கூறும் நக்கீரர்தம் உள்ள உயர்வே உயர்வு!

"வாய்வாள்,
தமிழகப் படுத்த, இமிழிசை முரசின்,
வருநர்க்கு வரையாப் பெருநா ளிருக்கைத்,
தூங்கல் பாடிய ஓங்குபெரு நல்லிசைப்
பிடிமிதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன்."

(அகம். உஉஎ)

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி,
வேளாண்மை செய்தற் பொருட்டு." (குறள். அக)

என்றும்,

"சுற்றத்தால் சுற்றப் படஒழுகல், செல்வந்தான்,
பெற்றத்தால் பெற்ற பயன்." (குறள். ருஉச)

என்றும் கூறுவர் வள்ளுவர். "செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்" என்பர் பிறரும். "நாடெலாம் வாழக்

கேடொன்றும் இல்லை" எனவுங் கூறுவர்; உலகில் நாம் மட்டும் தனித்து வாழ்கிறோம் இல்லை; நம்மைச் சூழப் பலரும் வாழ்கின்றனர்.

ஆகவே, அவர்கள் எல்லாம் கெட, நாம் மட்டும் வாழ எண்ணுதல் கூடாது; அது நடவாது; ஆகவே, வாழ விரும்புவோர் ஒவ்வொருவரும் தம்மைச் சூழ இருப்போரும் நன்கு வாழவேண்டும் என்று எண்ணுதல் வேண்டும்; எண்ணுவது மட்டும் அன்று; அதற்கு ஆவனவும் ஆற்றுதல் வேண்டும்; இன்றேல் அவர் தாழ்வு, நம் வாழ்வைப் பாழாக்கும். ஆகவே, உலகில் உயர்ந்து வாழ விரும்புவோர், கெட்டுப்போன கேளிர்தம் கேடுபோக்கிப் போற்றுவனவும், உணவின்றிப் பசித்த உறவினர், ஒன்றும் குறைவின்றி உண்டுவாழவும், கேளும் கிளைஞரும் அல்லராய், ஊரில் வாழ்வோர் பேரன்பு கொள்ளப் பழகி வாழவும் வழி செய்தல் வேண்டும். இத்தகைய வாழ்விற்குப் பெருஞ் செல்வம் வேண்டும்; அப் பெரும்பொருள் பெறுவது ஆண்மகன் கடனும்; இல்லறத்தில் நின்றார் நல்லறம் இது என்பதை நக்கீரர் நன்கு உணர்ந்தவர்; இந்த உண்மையினைத் தாம் உணர்ந்ததோடு உலகிற்கு உணர்த்தவும் விரும்பினார்; அன்பும், அறிவும், அருளும், ஆற்றலும் அமையப் பெற்ற ஆண்மகன் ஒருவனை ஆக்கிக் கொண்டு, அவன் இவ்வுண்மையை உணர்ந்து, அதன்வழியே நாடு கடந்து சென்று நற்பொருள் பலசேர்த்துக் கொண்டு வீடு நோக்கி வருங்கால், தாம் அறிந்த உண்மையினை உலகோர்க்கு உணர்த்துவதாகப் பாடி வழிகாட்டியுள்ளார்:

"கேள்கேடு ஊன்றவும், கிளைஞர் ஆரவும்,
கேளல் கேளிர் கெழீஇயினர் ஒழுகவும்,
ஆள்வினைக்கு எதிரிய ஊக்கமொடு புகல்சிறந்து
....
பெறலரும் நன்கலன் எய்தி, நாடும்
செயலரும் செய்வினை முற்றினம்," (அகம். ௩௮௯)

செல்வம் உடையார்பால் கல்வி நில்லாமையும், கல்வி உடையார்பால் செல்வம் நில்லாமையும் உலகில் இயல்பாகி விட்டது ;

" இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு;
தெள்ளிய ராதலும் வேறு." (குறள். ௩எச)

இந்நிலை உலகில் வாழும் எவர்க்கும் நன்மை விளை விப்பதாகாது ; மக்களிடையே பணம் வளருகின்ற அளவு, மனமும் வளர்தல் வேண்டும் ; மனம் வளர்தலின்றித் தான் மட்டும் வளர்ந்த பணம், பாழ்பல செய்யும். இன்றைய உலகின்நிலை இதுதான் ; செல்வம் நில்லா இயல்பினை உடையது ; நில்லாத செல்வத்தை நிலையுடைத்து என்று உணர்தல் புல்லறிவு ; அப் புல்லறிவால், அதைப் பெருகப் பிடித்துப் பேணிவைத்தல் பெருங்கேடாம் ; எங்கும் நில்லாது இயங்கிக்கொண்டே இருக்கும் இயல்புடைய செல்வத்தைச் சேர்த்துப் பிணித்துவைப்பதால் உலகில் கேடுறுவார், அதைப் பெறமாட்டாப் பல்கோடி மக்கள் மட்டும் அன்று ; அதைப் பேணிவைத்திருக்கும் தனக்கும் கேடாம். "ஆழ அமுக்கி முகக்கினும் நாழிமுகவாது நானாழி" என்ப. பெரும்பொருளைச் சேர்த்துவைத்தார், அச் செல்வத்தாலாய முழுப்பயனையும் பெற்றுவிடுவர் என எண்ணுவது இயலாது ; செல்வம் குறைந்துவிடுமே என்ற அச்சம் அவரை அனுபவிக்கவிடாது ; நுகர விரும்பிய வழி, இடையூறுகள் பல வந்துநேரும்.

" வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி,
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது." (குறள். ௩எஎ)

என்பர் வள்ளுவர்; இஃது இயற்கைமுறை; இவ்வியற்கைக்கு மாறாகச் சென்றால் எண்ணற்ற துயர் உற வேண்டும். இந்த உண்மைகளைச் செல்வம் படைத்தோர் உணர்தல்வேண்டும்; அவர்கள் உணர்ந்துவிட்டால், உலகிற்குக் கேடே இல்லை யாம். ஆனால், திருவினை உடையராகிய அவர்கள், தெள்ளிய ரல்லர் ; அதனால் அதை உணரமுடியவில்லை; இந்நிலையில் அறியாத அவர்க்கு அறிவூட்டும் நல்லோர் நாட்டிற்குத்

தேவை: அந் நல்லோர் கூறும் அறிவுரையே, நாட்டிற்கு உண்டாகும் கேடுகளைப் போக்க வல்லது.

இவ்வுண்மைகளை உணர்ந்தவர் நக்கீரர்; தம் காலத்தே நாடாண்ட அரசர்கள் பெரிய நாட்டை ஆளவேண்டும்; உலகம் அனைத்தையும் ஒரு குடைக்கீழ்க் கொணர்ந்து தாம் ஒருவராகவே ஆளவேண்டும் என்ற பேராசை கொண்டவராவர்; அதற்காக அவர்கள் ஆற்றிய போர்களும், ஆற்றும் போர்களும் எண்ணில; அப் போரால் நேர்ந்த அழிவுகள் அளவற்றன என்பதை உணர்ந்தவர்; அவர்களின் இவ் வாசையைப் போக்க நக்கீரர் பெரிதும் விரும்புகிறார். அதை நிறைவேற்றும் வழி யாது என்பதை எண்ணுகிறார். அரசர்களின் இவ்வாசைக்குக் காரணம், பெரும் பொருளைப் பெற்றால் பேரின்பம் எய்தலாம் என்ற பேதைமையே என்பதை உணர்ந்தார்; ஆகவே, அச் செல்வத்தின் இயல் பையும், கோடிதொகுத்தார்க்கும், கொள்ளத்தக்கன ஒரு பிடியே என்ற உண்மையையும் எடுத்து இயம்பிச் செல்வம் படைத்தோர்க்குச் செவியுணவு அளித்துத் தொண்டாற்று கிறார்; நக்கீரர்தம் இவ் வுள்ளத்தின் விளைவே "தெண் கடல் வளாகம்" என்ற பொருண்மொழிக் காஞ்சிப்பாடல். இஃது அவர் அறவுரை.

"குளிர்ந்த கடல்நீரால் சூழப்பெற்ற இவ்வுலகம் முழுவதையும், பிறர் எவர்க்கும் உரிமை இன்றித் தான் ஒருவனாகவே நின்று, ஓர் அரசின் கீழ்வைத்து ஆளும் பேரரசனுக்கும், இரவும் பகலும் உறங்காது, உணவிற்காக என்று உயிர்களை வேட்டையாடுவதையே தொழிலாகக் கொண்ட ஒருவனுக்கும் உண்ணும் உணவு ஒருநாழி அளவு உணவே; பெரும் பொருள் சேர்த்தமையால், பேரரசன் வயிறு நானாழி உணவை உட்கொள்வதில்லை; அதைப் போலவே, அரசன் அணியும் ஆடைகள் இரண்டே; வேட்டை ஆடுவோனுக்கு வேண்டப்படுவதும் இரண்டே; பிறப்பு, இறப்பு முதலிய பிறவும் இருவர்க்கும் ஓர் இயல் பினவே; பெரும்பொருள் பெற்றுவிட்டமையால், பிறவா யாக்கையும், இறவாநிலையும் பெற்றவனல்லன்; வாழ்வின்

இயல்பு இஃது என உணர்ந்த மக்காள்! செல்வத்துப் பயன் இல்லார்க்குக் கொடுத்து உதவுதலாம்; செல்வத்தின் அவ் வியல்பை மறுத்துத் தாமே தனித்து உண்ண விரும்புவாராயின், அவரால் அதை உண்டு தீர்த்தல் இயலாது; அவர்கள் நுகர்ச்சிக் கிடையூறாய் நூறாயிரம் வந்துசேரும்," என்று கூறியுள்ளார்.

"தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி,
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்,
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்,
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்,
உண்பது நாழி; உடுப்பவை இரண்டே;
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே;
செல்வத்துப் பயனே ஈதல்;
துய்ப்பேம் எனினே தப்புந பலவே." (புறம். கஅக)

'செல்வத்துப் பயனே ஈதல்' என்ற இவ்வுண்மையினை மற்றும் பல இடங்களிலும் எடுத்துரைத்துச் செல்கிறார்; கணவன்மார் கடத்தற்கரிய வழிபல கடந்து பொருள் பெற்று வருதல், தம்வாயிலில் வந்து இருகை ஏந்தி நிற்பார்க்குப் புதிய பொருள்களை அவர் வேண்டும் அளவும் விரும்பி அளிப்பதற்காகவே என்ற உண்மையை மகளிர் உணர்ந்து மற்றையோர்க்கு உரைப்பதாகவும் உணர்த்தியுள்ளார்:

"இரப்போர் ஏந்துகை நிறையப் புரப்போர்
புலம்பில் உள்ளமொடு புதுவதந் துவக்கும்
அரும்பொருள் வேட்டம்." (அகம். ௩அக)

இவ்வாறு "செல்வத்துப் பயனே ஈதல்; செல்வத்துப் பயனே ஈதல்," என எங்கும் எடுத்து இயம்புவது, தமக்குப் பொருள் வேண்டும் என்ற புன்மையாலன்றி, ஏழைகளாகி இரப்போர் உள்ளம் எரிமலையாகி இன்னல் பல நேராமல் நாடுவாழ வேண்டும் என்ற நல்லெண்ணத்தாலாம்.

உலகில், ஒருவர்க்கு நண்பர்போல் நல்லன செய்வார் வேறு எவரும் இலர்; ஆகவே, ஒவ்வொருவரும் தக்கார் ஒருவரைத் தம் உயிர் நண்பராகக் கொள்ளுதல் வேண்டும்; ஆனால், அந் நண்பர்களை மேற்கொள்ளுங்கால் மிகவும் விழிப்புடையராதல் வேண்டும்; ஒருவர் தோற்றத்தைக் கண்டே அவர்கள் இயல்பினை உணர்தல் எவர்க்கும் இயலாது; உள்ளுறுப்புக்களையும், உயிர்த் துடிப்பினையும் படம் பிடித்துக் காட்ட வல்ல அறிஞர்கள், உள்ளத் துடிப்பினை உள்ளவாறு உணர்ந்து அறிவிக்கும் ஆற்றலைப் பெற்றாரல்லர்; தோற்றத்தால் நல்லவர் எனப்பட்டார் இயல்பால் தீயராதலையும், இயல்பால் நல்லவர், தீயார் போல் தோன்றலையும் உலகில் காண்கிறோம். ஆதலின், நண்பர்களை மேற்கொள்வோர், தோற்றப் பொலிவு கண்டு நல்லார் எனக் கொண்டுவிடுதல் கூடாது; நண்பர்கள் உள்ளுணர்வு ஒத்தவராதல் வேண்டும்; உள்ளத் தூய்மை உடையராதல் வேண்டும்; இவ்வாறன்றி, அற்ற குளத்தில் அறுநீர்ப்பறவைகளைப்போல் 'உற்றுழி நட்டு அற்றுழி ஒருஉம் ஒப்பிலா'ரையும், 'வினைவேறு சொல்வேறு பட்டா'ரையும் நண்பராகக் கொள்ளுதல் கூடாது; ஒருவரை நண்பராகக் கொண்ட பின்னர் அவரைப் பிரிதல் அத்துணை எளிய செயல் அன்று; பேயொடு பழகினும் பிரிவரிது. ஆகவே, ஆராயாது மேற்கொண்ட நண்பர்கள் நல்லரல்லராயின், அவரால் பலகோடி துன்பம் உண்டாம். அதனால் நண்பர்கள் தொன்மையான குடியிலே வந்தவராய், உயிர் ஒத்துப் பழகும் உயர்வுடையராய், குற்றத்தின் நீங்கிய உள்ள முடையராய் இருத்தல் வேண்டும்; அத்தகைய நண்பர்களைப் பெற்றார் பெரும்பேறு பெற்றவராவர். நாட்டு மக்களுக்கு நல்லன கூறி, நன்னிலையில் வைக்க எண்ணும் நக்கீரர், நட்பின் இயல்பினை நன்கு விளக்கி உள்ளார்.

"உயிர்கலந்து ஒன்றிய தொன்றுபடு நட்பில்,
செயிர்தீர் நெஞ்சமொடு செறிந்தோர்." (அகம். உ00)

நக்கீரர், கடவுளரிற் சிவனையும், மக்களிற் செழியனையும் தவிர பிறர் எவரையும் பாடார் என்ற குற்றச்

சாட்டினைச் சிவபுராணமுடையார் கூறுவர்; ஆனால், நக்கீரர் பாக்களைப் பயின்றவர் எவரும் அவர்க்கு அத்தகைய குற்றச்சாட்டினைக் கூற அஞ்சுவர். பிறைமுடிச்சடையானையன்றிப் பிறரைப் பாடார் என்ற குற்றச்சாட்டு பிழையுடையது என்பது திருமுருகாற்றுப்படை ஒன்றினாலேயே உறுதி செய்யப்படும்; இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைச், சிவன், திருமால், பலதேவன், முருகன் ஆகிய நாற்பெருந் தெய்வங்களோடு ஒப்பிட்டுப் பாடிய நக்கீரர்பால் பிறதெய்வ வெறுப்பு உண்டு எனக் கூறுவது எவ்வாறு பொருந்தும்? நக்கீரர், சமயநெறியில் சமரச உணர்வுடையவராவர் என்பது முக்காலும் உறுதி, சமயநெறியில் அவர்பால் காணப்படும் இச் சமரச உணர்வு, உலக நெறியிலும் இருக்கக் காணலாம். நெடுஞ்செழியனைப் பாராட்டி 'நெடுநல்வாடை' பாடினார் என்பது உண்மை; ஆனால், அவனைத் தவிரப் பிறர் எவரையும் பாடினாரல்லர் எனல் பொருந்தாது.

இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனைப் பாராட்டியுள்ளார்; சோழநாட்டுப் பிடவூர்கிழான் பெருஞ்சாத்தனை "மறவலேனே;" அவனையன்றிப் "பிறர் உள்ளேனே" என்று பாராட்டியுள்ளார்; அகநானூற்றுப் பாடல் ஒன்றிலேயே,

> "ஆரங் கண்ணி அடுபோர்ச் சோழர்,
> அறங்கெழு நல்லவை உறந்தை."

எனச் சோழரையும், அவர் உறந்தை நகரையும்,

> "அரண்பல கடந்த முரண்கொள் தானை,
> வாடா வேம்பின் வழுதிகூடல் நாளங்காடி."

எனப் பாண்டியரையும், அவர் கூடலையும்,

> "ஆள்கோட் பிழையா அஞ்சுவரு தடக்கைக்
> கடும்பகட் டியானை நெடுந்தேர்க் கோதை
> திருமா வியனகர்க் கருவூர் முன்துறைத்
> தெண்ணீர் உயர்கரைக் கவைஇய தண்ணான் பொருநை."
>
> (அகம். கங)

எனச் சேரனையும், அவன் கருவூரையும், ஆன்பொருனை ஆற்றையும் குறிப்பிட்டுப் பாராட்டியுள்ளார். இவ்வாறு ஒரே பாட்டில் மூவரையும் பாராட்டும் பண்பினராகிய நக்கீரர்பால், பாண்டியனைத் தவிரப் பிறர் எவரையும் பாடாப் பிழையுண்டு எனல் எவ்வாறு பொருந்தும்?

கூறிய குணங்கள் எல்லாவற்றினும் நக்கீரர்பால் அமைந்துள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழும் உணர்வு பெரிதும் பாராட்டற்குரியதாம். இயற்கைக் காட்சிகளை ஆழ்ந்துணரும் அவர் அறிவின் பயனுலன்றோ, முருகனை நீலக்கடல் மீதெழும் செஞ்ஞாயிறு எனக்கூறி மகிழ்வாராயினர்; நீலக்கடல் மீது எழும் செஞ்ஞாயிற்றுக் காட்சியினைக் கண்டு மகிழ்ந்தார்க்கு அல்லால் அக் காட்சியைக் கோலக்கலாப மயில்மீது அமரும் குமரனுக்கு உவமை கூறல் இயலாதன்றோ? நக்கீரர் பாக்களில் வரும் ஒவ்வொரு தொடரும் அவர்தம் இயற்கையுணர் அறிவைப் புலப்படுத்தும் இயல்பினவே எனினும், திருமுருகாற்றுப் படையில் இறுதி அடிகள் குறிக்கும் அருவிவீழ்ச்சியின் அழகும், நெடுநல்வாடையின் முதல் அடிகள் சில குறிக்கும் கூதிர்காலக் கொடுமையும் அவர்தம் அப் பண்பிற்குச் சாலச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாம்.

மிக உயர்ந்த மலை உச்சியினின்றும் அருவிவிழுகிறது; சேய்மைக்கண்நின்று நோக்குவார்க்கு அவ் அருவி, "வானத்திடத்தே பறக்கும் பல்வேறு துணிக்கொடிகளைப் போலத்தோன்றுகிறது; அருவி ஓடிவருகிறது; வழியில், அகிலை அடித்துக்கொண்டுவருகிறது; பெரிய சந்தன மரத்தைச் சாய்த்துவருகிறது; சிறுமூங்கில்கள் அலையுமாறு அவற்றின் வேரைப் பிளந்துவருகிறது; அருவி ஓடிவரும் வேகத்தால், உயர்ந்த மலையிடத்தே ஈக்கள் மொய்க்க இருந்த தேனடை உடைந்துகெடுகிறது; ஆசினிப் பலாப்பழங்கள் சிதைந்து அவற்றின் சுளைகள் அருவியில் சிதறுகின்றன; மலையுச்சியில் உள்ள சுரபுன்னையின் மலர்கள் உதிர்கின்றன; ஆசினியையும் புன்னையையும் இருப்பிடமாகக்கொண்டு வாழும் முசுக்கலைகள் நடுங்குகின்றன;

இவ்வாறு நடுங்கவரும் அருவி, பெண்யானைகள் நடுங்குமாறு எடுத்தெறிந்து, ஆண்யானைகளின் வெள்ளிய தந்தங்களை வேண்டும் அளவு வாரிக்கொண்டு, பொன்னையும் மணியை யும் வாரி இறைத்துக்கொண்டு, பொன்னின் பொடிகளைத் தூவிக்கொண்டு, வாழைமரத்தையும் தெங்கின்குலைகளையும் மோதிக்கொண்டு, மிளகுக்கொடிகள் சாய, மயிலும் கோழி யும் அஞ்சி ஓட, காட்டுப் பன்றிகளும் கரடிகளும் முழை களினுள்ளே ஓடிஒளிய, காட்டுப்பசுக்கள் 'அம்மா!' என்று அலற, இழும் எனும் ஓசை எங்கும் பரவ விழுந்து ஓடு கிறது,' என்று கூறும் அத்தொடர்கள், அருவிக்காட்சியை அகங்கொள்ளக் காட்டுவதோடு, தொடர்களின் சொல் லோசை அருவியோசையை ஒலிக்கவும் செய்யும் அருமையே அருமை!

"பலவுடன்
வேறுபல் துகிலின் நுடங்கி, அகில்சுமந்து,
ஆரம் முழுமுதல் உருட்டி, வேரல்
பூவுடை அலங்குசினை புலம்ப வேர்கீண்டு,
விண்பொரு நெடுவரைப் பரிதியில் தொடுத்த
தண்கமழ் அலர்இறால் சிதைய, நன்பல
ஆசினி முதுசுளை கலாவ, மீமிசை
நாக நறுமலர் உதிர, யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப், பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப், பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத், தத்துற்று,
நன்பொன், மணி நிறம் கிளரப், பொன்கொழியா,
வாழை முழுமுதல் துமியத், தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்,
கறிக்கொடிக் கருந்துணர் சாயப், பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்,
கோழி வயப்பெடை இரியக், கேழலொடு
இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன
குரூஉமயிர் யாக்கைக் குடாவடி உளியம்
பெருங்கல் விடரளைச் செறியக், கருங்கோட்டு
ஆமா நல்லேறு சிலைப்பச், சேணின்று
'இழும்' என இழிதரும் அருவி."

(திருமுருகு. உகூ௬-௩௧௬)

என்றும் பொய்யாது பெய்யும் இயல்பினதான மேகம், புதுமழை பெய்து விட்டது; வெள்ளம் பாயும் பள்ள இடங்களில் இனியும் இருப்பின் தங்கள் ஆடு மாடுகளுக்கு ஆகாது என்பதறிந்த இடையர், மேட்டுநிலங்களைத் தேடிச்சென்று தங்குவாராயினர்; ஊருக்கு அணித்தே உள்ள இடங்களில் மேய்த்து, ஊரில் தங்கிப் பழகிய அவர்கள், இனி அவ்வாறு செய்வதற்கில்லையே என்று ஏங்குவாராயினர்; இவ்வருத்தத்தோடு குளிரின் கொடுமையும் அவர்களை வருத்துவதாயிற்று; பல் பறைகொட்டும் தங்கள் குளிர்போக்க, தீயை எழுப்பிக் கைகளைக் காய்ச்சிச் சூடேறிய கைகளைக் கன்னங்களிலே வைத்துக் குளிரைத் தாங்கிக்கொண்டு வேற்றூர்களில் வாழலாயினர்; குளிரின் கொடுமையால், விலங்குகள் தங்கள் தொழிலாகிய மேய்தலையும் மறந்து மடியலாயின; குரங்குகள் குளிரால் உடல் குன்றி வருந்தலாயின; மரங்களில் வாழும் பறவைகள் குளிர்காற்றால் அலைப்புண்டு தரைமிசை வீழ்ந்து துன்புறலாயின; கறவைப்பசுக்கள் குளிரின் கொடுமையால், பால் உண்ணவரும் தம் கன்றுகளுக்கும் பால்கொடாமல் உதைக்கலாயின; குன்றுகளும் குளிரால் நடுங்கலாயின; அத்தகைய கொடுமை மிக்க 'கூதிர்க்காலம்' என்று கூதிர்காலத்தில், காலமாறுபாட்டால் கொடுந்துன்பம் கொள்ளும் உயிர்களின் இயல்பை உள்ளவாறே உணர்த்துகின்றார்.

"வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென,
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக், கோடல்
நீடிதழ்க் கண்ணி நீரலைக் கலாவ,
மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க,
மா, மேயல் மறப்ப, மந்தி கூர,
பறவை படிவன வீழக், கறவை
கன்றுகோள் ஒழியக் கடிய வீசிக்
குன்று குளிர்ப்பன்ன கூதிர்." (நெடுநல். க-கஉ)

சா. நக்கீரர் காலமும் அவர்காலப் புலவர்களும்

கடைச்சங்க காலத்தைக் காண முயன்றவர் பலர்; சங்க இலக்கியங்கள் அளிக்கும் வரலாற்றுக்குறிப்புக்கள், அப் பாக்களால் பாராட்டப்பெற்ற அரசர்கள் ஆகியோரைக்கொண்டு, சங்ககாலம், பாரதகாலம், என்பார் சிலர்; சங்ககாலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு என்பார் பலர்; சங்ககாலம், கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு என்பார் மற்றும் சிலர்; சங்ககாலம், கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு என்பார் வேறுசிலர்; இவ்வாறு கடைச்சங்கம் நிலவிய காலத்தைப் பற்றிப் பலர் பலவாறு கூறினும், அது, கி. பி. முதல், இரண்டு நூற்றாண்டுகளில் நிலவிற்று என்ற உண்மையினையே வரலாற்றுநூற்பேராசிரியர் பலரும் ஒப்புக்கொள்வர். சங்ககாலம் இரண்டு நூற்றாண்டுக்காலம் வரை நீண்டு இருந்தது ஆதலின், சங்ககாலப்புலவர்களை எல்லாம் ஒரே காலத்தில் ஒப்ப வாழ்ந்தோராகக் கொள்ளுதல் இயலாது; ஒரு சிலர் தொடக்கத்திலும், ஒரு சிலர் இடைப்பட்ட காலத்தும், மற்றும் சிலர், அதன் இறுதிக் காலத்தும் வாழ்ந்திருந்தனர் என்றே கொள்ளுதல் வேண்டும். அந்நிலையில், இக் கட்டுரைத் தலைவராகிய நக்கீரர், சங்கத்தொடக்கத்தில் இருந்தவரன்று; சங்கத்தின் இடைப்பட்ட காலத்தின் இறுதியிலும், இறுதிக் காலத்தின் தொடக்கத்திலும் இருந்தவராவர் என்பதையே உள்ள சான்றுகள் உறுதி செய்கின்றன; அவ்வாறு கொண்டால் அவர் காலம், கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியாம் என்று துணியலாம்.

தமிழகம், உலகமக்கள் உள்ளத்தில் உயரிய இடத்தைப் பெற்றிருந்த பெருமைமிக்க காலத்தில் நக்கீரர் வாழ்ந்திருந்தார்; நக்கீரர், தாம் கண்ட தமிழுலகத் தனிச் சிறப்புக்களை எல்லாம் தாம்பாடிய பாக்களில் வைத்துப் பாராட்டிப் பின்னுள்ளோரும் பார்த்து மகிழ வழிசெய்துள்ளார். தமிழரசர்கள் உலகெலாம் ஒரு குடைக்கீழ் ஆள வேண்டும் என்ற உயர்பேருள்ளமுடையராய் விளங்

கினர்; அதற்கான படையும் பண்பும் அவர்கள்பால் இருந்தன; போரில் புறங்காட்டிப் பிழைக்கும் பீடிலாரை ஆடவர் எனக் கொள்ளாது பெண்டிர் எனக் கொண்டு பழித்தனர்; தோற்ற வீரர்கள் கையில் வாளும் வேலும் தாங்கற்கு உரியர் அல்லர்; பெண்களைப்போல் பந்தும், பாவையும் கொண்டு ஆடற்குரியர் என அறிவிக்கும் முகத்தான், தம் அரண்களின் தலைவாயிலில் பந்தையும், பாவை யையும் கட்டிவைத்தனர். தமிழ்நாட்டுப் பேரூர்களில் எல்லாம் கொடிபல நுடங்கும் நாளங்காடிகளும், அறங்கூர் அவைகளும், அரசரும் செல்வரும் வேனிற்காலத்தே இருந்து மகிழும் இலவந்திகைப் பள்ளிகளும் நிறைந்து காணப்படும்; தமிழகம் வெளிநாட்டு வாணிபத்தால் வளம் பெற்றுத் திகழ்ந்தது.

"வேறுபல் நாட்டின் கால்தர வந்த
பலவுறு பண்ணியம் இழிதரும் நிலவுமணல்."

வெளியிலே மகிழ்ந்து ஆடுகிறார் நக்கீரர். வீடுகளில் போட்ட சோற்றுப் பலியினைத் தின்ற காக்கைகள், கடலிடையே நிற்கும் கப்பல்களின் பாய்மரங்கள்மீது சென்று தங்கும் சிறப்பினையும் காட்டுகிறார்.

"காக்கை, அங்கல் வங்கத்துக் கூம்பிற் சேக்கும்
மருங்கூர்ப் பட்டினம்."

பிறநாட்டு வாணிபத்தால் வளம் பெற்றதோடு, தமிழகம் பிறநாட்டுத் தொழில் வல்லார் பலரையும் பெற்றுத் திகழ்ந் தது; யவனர் கொணர்ந்த மதுவையும், அவர்கள் செய் தளித்த பாவைவிளக்குகளையும் பெற்று மகிழ்ந்தனர் தமிழர்கள்;

"யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்."

"யவனர் இயற்றிய வினைமாண் பாவை
கையேந்து ஐஅகல்." (நெடுநல். க0உ)

தமிழர்க்கு நீர் உண்ணும் கலம் பொன்னாலாயது; அவர் கள் வேனிற்காலத்தே குளிர்ந்த சந்தனம் பூசவேண்டும்;

கூதிர்காலத்தே வெப்பம்தரும் கத்தூரி அணியவேண்டும் என்றும், கோடையின் வெம்மை போக்க விசிறியும், குளிரின் கொடுமை போக்கப் புகைதரும் கனற்சட்டியும், கோடையில் குடிக்கக் குளிர்நீர்தரும் வாய்குவிந்த கலங்களும் தேவை என்றும் அறிந்திருந்தனர். தம்மீது வீரர்கள் ஏந்திவரும் வெற்றிக் கொடியோடு யானைகள் நுழையும் அளவு உயர்ந்த வாயில்களையுடைய கோட்டைபோன்ற மாளிகைகளைக் கட்டி வாழ்ந்தனர். தமிழர் புகைபோல் மெல்லிய ஆடைகளையும் பெற்று, அவற்றை மாசுபோகத் துவைத்துக் கஞ்சியிட்டுப் பெறவும் அறிந்திருந்தனர்! தமிழ்நாட்டுப் பாண்மகள், வாளைமீனுக்கு விலையாக நெல்லைப்பெற மறுத்து முத்தும் பொற்கலமும் பெற்று விற்கும் வாணிப வாழ்வை மேற்கொண்டு விளங்குகிறாள். தமிழர்கள் செல்வமதிப்பிட்டு முறையினை நக்கீரர் ஒரு பாட்டில் விளக்குகிறார்: தமிழ்நாட்டுத் தாய் ஒருத்தி தன் மகள் வறியவன் ஒருவனை மணந்துகொண்ட நிலை கண்டு வருந்துகிறாள்; அவன் வறுமை வாழ்வினன் என்பதை, அவன் வீட்டிற்கு ஒரே தூண்தான் உண்டு என்றும்; அவன் வீட்டில் ஒரே பசுதான் உண்டு என்றும் கூறுகிறாள்; "ஓர் ஆ யாத்த ஒரு தூண்முன்றில்." வீட்டு அமைப்பு முறையினையும், வீட்டில் வாழ் பசுக்களின் எண்ணிக்கையினையுங் கொண்டே, தமிழர்கள் ஒருவரின் செல்வநிலையினை மதிப்பிட்டு வந்தனர்.

தமிழர்கள், மணமாகா மகளிர்க்குக் காலில் சிலம்பணிந்து, அவர்கள் மணமாகாதவர்; மணக்க விரும்புவோர் மணக்க முன் வரலாம் என அறிவித்து, அவர்கள் மணம் செய்துகொள்ளும் முன்னாள், அச் சிலம்பைக் கழித்துவிட்டு, அவர்கள் மணம்பெற்ற மகளிராயினர்; இனி வேறு ஆடவர் எவரும் அவர்களை மணநோக்குடன் பார்த்தல் கூடாது என அறிவித்து வாழ்ந்தனர்; மணநாளன்று முன்னாள் நிகழும் இச் சடங்கைச் 'சிலம்புகழி நோன்பு' எனப் பெயரிட்டுப் போற்றினர்; கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நாளன்று, தமிழர்கள், தெருக்களில்

பல விளக்குகளை வரிசையாக ஏற்றி, மாலைகள் அணிந்து விழாக் கொண்டாடினர்.

"மதிநிறைந்து,
அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்
மறுகுவிளக் குறுத்து மாலை தூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய விழவு."

தமிழகப் புது மணமகளிர், இளமகளிர் பலர் துணை செய்ய, அடுப்பில் பால்உலைஏற்றித் தங்கள் நிலத்தில் விளைந்த நெற்கதிர்களை முறித்துப் போட்டுச் சோறாக்கியும், அவலிடித்தும் மகிழ்வர்; தமிழர்கள் கருணைக்கிழங்கைச் செந் நெல்லாலாகிய வெண்சோற்றோடு கலந்து உண்பர்; தங்கள் குதிரைகளுக்கு அரிசிமாவைத் தயிரிட்டுப் பிசைந்த கூழினைக் கொடுப்பர். இத்தகைய செல்வ வாழ்வினராய அவர்கள், "செல்வத்துப் பயனே ஈதல்; துய்ப்பேம் எனினே தப்புந பலவே" என்ற நல்லறிவுடையராய்க்,

"கேள்கே டூன்றவும், கிளைஞர் ஆரவும்
கேளல் கேளிர் கெழீஇயினர் ஒழுகவுமே."

செல்வம் ஈட்டிச் செழிக்க வாழ்ந்தனர். நக்கீரர் பாக்களின் துணைகொண்டு நாம் காணும் தமிழகத்தின் காட்சி இது.

நக்கீரர் பாராட்டிய அரசர்களுள் சிறப்புடையோர், தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன், கிள்ளிவளவன், பிடவூர்கிழான் பெருஞ்சாத்தன் முதலியோராவர். இவ்வரசர்களைப் பாராட்டிய புலவர்கள் எல்லாம் நக்கீரர் காலத்தில் வாழ்ந்தோராவர் என்று கொள்ளலாம். அவ்வாறு நோக்கியவழி, ஆலத்தூர் கிழார், ஆலம்பேரி சாத்தனார், இடைக்குன்றூர்கிழார், எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார், ஒளவையார், கல்லாடனார், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், குடபுலவியனார், குறுங்கோழியூர் கிழார், கூடலூர் கிழார், கோவூர் கிழார், பொதும்பில் கிழார் மகனார், மருதனிள நாகனார், மாங்குடி மருதனார், வடம் வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் முதலிய புலவர்

பெருமக்கள் நக்கீரர் காலத்தவராவர் என்று கொள்ளலாம். நக்கீரர், கபிலர், பரணர் முதலியோரைக் கொண்ட தமிழ்ச் சங்கத்திற்குத் தலைவராவர்; சங்கப் பலகைமீது கபிலரும், பரணரும் அமர்வதற்குமுன் அமர்ந்தவர் நக்கீரரே எனப் புராணங்கள் கூறுகின்றன எனினும், புலவர்கள் பாடிய சங்கச் செய்யுட்களைத் துணைகொண்டு நோக்கியவழி நக்கீரர், பரணர் கபிலராய பெரும்புலவர்கள் காலத்தில் வாழ்ந்தவரல்லர்; அவர்களுக்குப் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்தவரே என்ற முடிபே கொள்ளக் கிடக்கிறது. நக்கீரர், கபிலரைப் பாராட்டியுள்ளார் என்பதும் ஈண்டு நினைவூட்டற்பாலது; நக்கீரர் பாராட்டிய நெடுஞ்செழியன், பரணர் பாராட்டிய செங்குட்டுவனுக்கு ஒரு தலைமுறை பிற்பட்டவன் என்றே அறிஞர்கள் கருதுவர்.

எ. நக்கீரர் பாராட்டிய அரசர்கள்

ஔவையார், அதியமான் நெடுமானஞ்சியின் அவைக்களப் புலவராகவும், கபிலர், பறம்பிற் கோமான் பாரியின் அவைக்களப் புலவராகவும், பரணர், கடல்பிறக்கோட்டிய வெல்புகழ்க்குட்டுவன் அவைக்களப் புலவராகவும் அமர்ந்து, அவ்வவ்வரசர்களைப் பாராட்டினார்கள் என்பதைப்போல், நக்கீரர், இன்ன அரசன் அவைக்களத்தே வாழ்ந்தார் என்று கூறுதற்கில்லை. நக்கீரர் பாராட்டைப் பெற்ற அரசர்களுள், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனே, முதன்மை பெற்றுளான் எனினும், அவர், அவன் அரசவைசென்று கண்டு பாராட்டியுள்ளார் எனக் கொள்வதற்கில்லை; அவ்வரசர்களுள் பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன் ஒருவனையே, அவர் நேர்நின்று பாராட்டியுள்ளார்; தாம் இருந்து வாழ்ந்த அரசவை என நக்கீரர் கூறுவது, சோழநாட்டுப் பிடவூர்கிழான் பெருஞ்சாத்தன் அரசவை ஒன்றையே; ஏனைய அரசர்கள் எல்லாம், நக்கீரர் பாடலில் இடம்பெறும் பேறுபெற்றவர்களே; அவர் தம் முன்னின்று தம்மைப் பாடிய பேற்றினைப் பெற்றவரல்லர்.

இவ்வாறு, நக்கீரரால் பாராட்டைப் பெற்றவராகவும், அவர் பாக்களில் இடம்பெற்றோராகவும் உள்ள அரசர்கள், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன், பிடவூர் கிழான் பெருஞ்சாத்தன், பாண்டியன் நெடுஞ்செழியன், கரிகாலன், கிள்ளிவளவன், தித்தன், திதியன், எவ்வி, அன்னி, திரையன், பழையன், எருமையூரன், தழும்பன், முசுண்டை, முதலியோராவர்.

இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன், சங்கப் புலவர்களுள் சிறந்தார் எனப்படும் மதுரை மருதன் இளநாகனார், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், ஆவூர் மூலங்கிழார், வடமவண்ணக்கன் பேரிசாத்தனார் முதலியோராலும் பாராட்டப் பெற்றோனவன்; மக்கள் பலரும்,

மனைவியும் உடன்வாழ வாழ்ந்தோன்; ஆனால், தன்பால் வந்து பாராட்டிய புலவர்க்கு அவர்கள் வேண்டும்போதே அளிக்கும் அருங்குணம் அமையப்பெறாதவனாய்க் காணப் படுகின்றான். தன் குறைகண்டு திருத்தி நல்வழிப்படுத்தப் புலவர்கள் கூறும் பொருளுரைகளைப் பொன்னேபோல் ஏற்றுப் போற்றும் இயல்பினனாவன்; நக்கீரர், இவனைப் பாராட்டிய பாட்டில், நன்மாறன், சினத்தால் சிவனையும், வலியால் பலராமனையும், புகழால் திருமாலையும், முன்னியது முடித்தலால் முருகனையும் ஒத்துள்ளான்; ஆகவே, அவனுக்கு அரியது என எதுவும், எப்போதும் இருந்த தில்லை; அதனால், அவன், யவனர் தந்த தண்கமழ் தேறலைப் பெண்கள் பொற்கலத்தே வார்த்துத்தர உண்டு மகிழ்ந்து வாழ்வான் என்றுகூறி, "அவன் அம் மகிழ்ச்சியிற் சிறிதும் குறையாது காலைக்கதிரோனும், மாலைமதியோனும் போல் நெடிது வாழ்க!" என வாழ்த்தியுள்ளார்:

"தோலா நல்லிசை நால்வருள்ளும்
கூற்றொத் தீயே, மாற்றரும் சீற்றம்;
வலியொத் தீயே, வாலி யோனை;
புகழ்ஒத் தீயே, இகழுநர் அடுநனை;
முருகொத் தீயே, முன்னியது முடித்தலின்;
ஆங்காங் கவரவர் ஒத்தலின், யாங்கும்,
அரியவும் உளவோ நினக்கே; அதனால்,
இரவலர்க்கு அருங்கலம் அருகாது ஈயா;
யவனர், நன்கலம் தந்த தண்கமழ் தேறல்,
பொன்செய் புனைகலத்து ஏந்தி, நாளும்
ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கினிது ஒழுகுமதி! ஓங்குவாள் மாற!"

(புறம். ருக)

சோழநாட்டுப் பிடவூர்கிழான் பெருஞ்சாத்தன், முடியுடை வேந்தர்க்கு மகட்கொடுக்கும் உரியாராய உழு வித்து உண்ணும் வேளாளரில் பிறந்தோன் என்ப. இஃது, "உழுவித்துண்போர் மண்டிலமாக்களும், தண்டத்தலைவரு

ாய்ச் சோழநாட்டுப் பிடவூரும், அழுந்தூரும், நாங்கூரும், ாவூரும், ஆலஞ்சேரியும், பெருஞ்சிக்கலும், வல்லமும், ழாரும் முதலிய பதியில் தோன்றி வேள்எனவும், ரசு எனவும் உரிமை எய்தினோருமாய்.... ...முடியுடை 'வந்தர்க்கு மகட்கொடைக்கு உரிய வேளாளராகுப" ன்ற தொல்காப்பிய உரையால் தெளிவாகும். பிடவூர், சாழநாட்டில் உறையூர்க்குக் கீழ்ப்பால் உள்ளதொரு வைப்புத்தலம். அதில் மாசாத்தனார் கோயிலொன்றும் ளது; அச்சாத்தனார் பெயரே, இப்பாட்டுடைத் தலைவ னுக்கும் பெயராயிற்று போலும்.

பெருஞ்சாத்தனைப் பாடிய பாட்டில், நக்கீரர், "அவன் பாயிலின்முன் தடாரிப் பறையோடு நின்ற என்னைக்கண்ட ாத்தன், நெடுதுநேரம் அங்கேயே நின்றுவிடாமலும், மிக்க நேரத்தைப் பேசியே கழித்துவிடாமலும் விரைந்து ட்சென்று அருங்கலம்பல கொணர்ந்து தந்தான்; தந்த தாடு அமையாது, என்னை அரண்மனையுள்ளே அழைத்துச் சென்று, தன் மனைவிக்குக் காட்டி, "என்பால் அன்பு கொண்டு என்னைப் போற்றிப் பேணுவதைப்போலவே, இவனையும் போற்றிக் காப்பாயாக," என்றுகூறி நலம்பல ல்கினான்; அன்றுதொட்டு அவனை நான் மறந்திலேன்; அவனையன்றிப் பிறரை நினைந்து பாராட்டலும் இலேன்," என்று கூறிப் பெருஞ்சாத்தனின் புகழைப் பாராட்டி புள்ளார்:

" தடாரி யோடு
ஆங்குநின்ற எற்கண்டு
சிறிதும் நில்லான், பெரிதும் கூறான்;
அருங்கலம் வரவே அருளினன்; வேண்டி,
ஐயென வுரைத்தன்றி நல்கித் தன்மனைப்
பொன்போன் மடந்தையைக் காட்டி இவனை
என்போல் போற்று என்றோனே; அதற்கொண்டு
அவன் மறவலேனே; பிறர் உள்ளேனே."

(புறம். ௩௯௫)

பின்னர்ப் பகைவர் நாடுகளுள் தான் புகுந்து போரிடலா யினன். ஒருமுறை கொங்குநாடு நோக்கிச் சென்று, வழி யிற் கிடந்த நாடு பலவற்றையும் கைக்கொண்டு இறுதியில் கொங்கரையும் ஓட்டி வெற்றி பெற்றான்; இவ் வெற்றி குறித்து அவன் கூடல்நகரில் விழாவும் கொண்டாடினர்; கொங்கரொடு நடத்திய இப்போரில், பாண்டியர் படைத் தலைவனாகிய அதிகன் என்பான் இறந்தான்; பகைவர் படைத்தலைவன் பட்டான் என்று கேட்டுக் கொங்கர்கள் ஆரவாரமும் செய்தனர். மற்றொருமுறை செழியன் சேர னோடு சென்று, செல்வத்தால் சிறந்த அவன் முசிறித் துறை யை முற்றிச் சேரன் யானைப்படைகளை அழித்து வென்று மீண்டான். இவ்வாறு சேய பல நாடுகளையும் வென்று கொண்ட செழியன், தன் நாட்டின் அணித்தே, நீடூர் என் னும் ஊரில் அரசிருந்த எவ்வி என்பானை வென்று அவனுக் குரிய மிழலைக்கூற்றத்தையும், வேளிர்க்குரிய முத்தூற்றுக் கூற்றத்தையும் தன் ஆட்சிக்குட்படுத்திக் கொண்டான்.

தலையாலங்கானத்தில், நெடுஞ்செழியன் நடத்திய போரைப் பாராட்டியவர் பலராயினும், அக்களத்தில், அவனோடு போரிட்ட பகைவர்கள் யாவர் என்பதைப் பெயர்கூறி விளக்கியவர் நக்கீரர் ஒருவரே:

“கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்,
ஆலங் கானத்து அகன்தலை சிவப்ப,
சேரல், செம்பியன், சினம்கெழு திதியன்,
போர்வல் யானைப் பொலம்பூண் எழினி,
நாரரி நறவின் எருமை யூரன்,
தேங்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மான், இயல்தேர்ப் பொருநன் என்று
எழுவர் நல்வலம் அடங்க, ஒருபகல்
முரசொடு வெண்குடை அகப்படுத்து உரைசெலக்
கொன்று களம் வேட்ட ஞான்று
வென்றிகொள் வீரர் ஆர்ப்பு.” (அகம். ௩௬)

நெடுஞ்செழியன் பெற்ற கன்னிப்போர் வெற்றியாகிய தலையாலங்கானத்துச் செருவினையே யன்றி, அவன்,

ன்னர்ப் பகைவர் நாடுகளுள் தான் புகுந்து போரிடலா னன். ஒருமுறை கொங்குநாடு நோக்கிச் சென்று, வழி ற் கிடந்த நாடு பலவற்றையும் கைக்கொண்டு இறுதியில் காங்கரையும் ஓட்டி வெற்றி பெற்றான்; இவ் வெற்றி றித்து அவன் கூடல்நகரில் விழாவும் கொண்டாடினர்; காங்கரோடு நடத்திய இப்போரில், பாண்டியர் படைத் லைவனாகிய அதிகன் என்பான் இறந்தான்; பகைவர் டைத்தலைவன் பட்டான் என்று கேட்டுக் கொங்கர்கள் ஆரவாரமும் செய்தனர். மற்றொருமுறை செழியன் சேர ாடு சென்று, செல்வத்தால் சிறந்த அவன் முசிறித் துறை ைய முற்றிச் சேரன் யானைப்படைகளை அழித்து வென்று மீண்டான். இவ்வாறு சேய பல நாடுகளையும் வென்று கொண்ட செழியன், தன் நாட்டின் அணித்தே, மிழலை என் னும் ஊரில் அரசிருந்த எவ்வி என்பானை வென்று அவனுக் குரிய மிழலைக்கூற்றத்தையும், வேளிர்க்குரிய முத்தூற்றுக் கூற்றத்தையும் தன் ஆட்சிக்குட்படுத்திக் கொண்டான்.

தலையாலங்கானத்தில், நெடுஞ்செழியன் நடத்திய போரைப் பாராட்டியவர் பலராயினும், அக்களத்தில், அவனோடு போரிட்ட பகைவர்கள் யாவர் என்பதைப் பெயர்கூறி விளக்கியவர் நக்கீரர் ஒருவரே :

“ கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்,
ஆலங் கானத்து அகன்தலை சிவப்ப,
சேரல், செம்பியன், சினம்கெழு திதியன்,
போர்வல் யானைப் பொலம்பூண் எழினி,
நாரரி நறவின் எருமை யூரன்,
தேங்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மான், இயல்தேர்ப் பொருநன் என்று
எழுவர் நல்வலம் அடங்க, ஒருபகல்
முரசொடு வெண்குடை அகப்படுத்து உரைசெலக்
கொன்று களம் வேட்ட ஞான்று
வென்றிகொள் வீரர் ஆர்ப்பு.” (அகம். ௩௬)

நெடுஞ்செழியன் பெற்ற கன்னிப்போர் வெற்றியாகிய தலையாலங்கானத்துச் செருவினையே யன்றி, அவன்,

கொங்குநாட்டுப் படையெடுப்பையும், முசிறி முற்றுகையினையும் நக்கீரர் பாராட்டியுள்ளார்.

“கொங்கர் ஓட்டி
நாடுபல தந்த பசும்பூட் பாண்டியன்
பொன்மலி நெடுநகர் கூடல் ஆடிய
இன்னிசை ஆர்ப்பு.” (அகம். உருங)

“கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
முதுநீர் முன்துறை முசிறி முற்றிக்
களிறுபட எருக்கிய கல்லென் ஞாட்பின்
அரும்புண் உறுநர்.” (அகம். ருஎ)

இவ்வாறு நெடுஞ்செழியன் பெற்ற வெற்றிகள் மூன்றினை விளங்க உரைத்த நக்கீரர், அவன் பாசறையில் போர்வீரர்களோடு வாழும் பாசறைவாழ்க்கையினை விளக்கும் திறம் வியத்தற்குரியதாகும் :

பகைவர் யானைப்படைகளை, அவற்றின் வலிய பெரிய கைகளை வெட்டிவீழ்த்திக் கொன்று அழித்த போரில், நெடுஞ்செழியன் வீரர்களிற் பலர் வாட்புண் பெற்று விட்டனர்; இதை அறிந்தான் அவன்; அறிந்த நேரம், இரவின் நடுயாமம்; குளிர்ந்த வாடைக் காற்று வீசிக்கொண்டிருக்கும் குளிர்காலம்; மழைத்துளிகள் மாறாது வீழ்ந்து கொண்டிருக்கும் மழைக்காலம்; எனினும் காலத்தின் அருமையினை எண்ணினனல்லன்; புண்பட்ட வீரரைக் கண்டு ஆறுதல் உரைத்து அன்புகாட்டி வரவேண்டும் என்ற ஆசை, அக்காலத்தின் கொடுமையை மறக்கச் செய்தது; வாடை வீசுவதால், தெற்கே சாய்ந்து விளங்கும் அழல்களைக் கொண்ட பெரிய பாண்டில் விளக்குகளைப் பலர் ஏந்தி முன்னே சென்றனர்; தலையில் வேப்பந்தாரும், கையில் நெடிய வேலும் கொண்ட படைத்தலைவன் அரசன் முன்னே செல்கின்றான்; மழைத்துளி மன்னன் மீது விழாமை குறித்து வெண்கொற்றக் குடை ஏந்தி ஒருவன் பின்னே வருகிறான்; நெடுஞ்செழியன், காற்றால் அலைப்புண்டு கீழே விழும் மேலாடையினை இடக்கையால் பற்றிக்

கொண்டு, தோளில் தொங்கும் வாள் மீது வைத்த வலக் கையனாய், வழியில் வரிசையாக நிற்கும் குதிரைகள் உதறிய அவற்றின் உடல்மேல் நீர், தன் மேல்படச் சேறு நிறைந்த தெருவிலே நடந்து சென்று, படைத்தலைவன் புண்பெற்ற வீரர்களையும், அவர்கள் பெற்ற புண்களின் நிலையினையும் காட்டிக் கொண்டே முன்னே செல்ல, பின்னே அவ்வீரர்களுக்கு அன்புரை வழங்கிக்கொண்டே செல்கிறான்; இவ்வாறு பேயும் உறங்கும் நடுயாமத்திலும் உறக்கம் ஒழித்துப் போர் மேல் சென்ற எண்ணமும் சூழ்ச்சியும் உடையனாய் வாழும் நெடுஞ்செழியன் பாசறைவாழ்க்கை நன்கு விளக்கப்பட்டுள்ளது:

"பின்னவிர்
ஓடையொடு பொலிந்த வினைநவில் யானை
நீள்திரள் தடக்கை நிலமிசைப் புரள
களிறுகளம் படுத்த பெருஞ்செய் ஆடவர்,
ஒளிறுவாள் விழுப்புண் காணிய புறம்போந்து,
வடந்தைத் தண்வளி எறிதொறும் நுடங்கித்
தெற்கேர்பு இறைஞ்சிய தலைய நற்பல்
பாண்டில் விளக்கில் பரூஉச்சுடர் அழல,
வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகமொடு
முன்னோன் முறைமுறை காட்டப், பின்னர்,
மணிபுறத் திட்ட மாத்தாட் பிடியொடு
பருமம் களையாப் பாய்பரிக் கலிமா,
இருஞ் சேற்றுத் தெருவின் எறிதுளி விதிர்ப்பப்,
புடைவீழ் அந்துகில் இடவயின் தழீஇ,
வாள்தோள் கோத்த வன்கட் காளை,
சுவல்மிசை அமைத்த கையன், முகனமர்ந்து,
நூல்கால் யாத்த மாலை வெண்குடை,
தவ்வென்று அசைஇத் தாதுளி மறைப்ப
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே."

(நெடுநல்வாடை. கசு அ-அ

சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியும், அழுந்தூர் வேள்மகள் ஒருத்தியும் அருந்தவம் பல ஆற்றிப் பெற்ற மகனே கரிகாலன்; பிறப்பதற்குச் சின்னாட்களுக்கு முன்னரே, தந்தையை இழந்துவிட்டான் ஆதலின், பிறக்கும் போதே பேரரசு உரிமை பெற்றுப் பிறந்தான் என்ப. இளமையில், நாடாட்சியில் நாட்டம் கொண்டிருந்த தாயத்தாரால் சிறையுற்றுப் பின்னர்த் தன் வாள் வலியும், அம்மான் இரும்பிடர்த் தலையார் துணையும் பெற்றுப் பகைவர்தம் திண்ணிய காவலை அழித்து வெளிப் போந்தான்; வெளியேறுங்கால், பகைவர் வைத்த தீயால் கால் வெந்துற்றுக் கருகக் கரிகால் என்ற பெயருடையனுயினன். வெளியேறி, விடுதலை பெற்றுத் தன் அரசுரிமையினை அடைந்த பின்னர்ச் சேரமான் பெருஞ்சேரலாதனும், செழியன் ஒருவனும், பதினொரு வேளிரும் கூடி எதிர்க்க, எதிர்த்தாரைக் கோயில் வெண்ணியில் வெற்றி கொண்டு, தாய் பிறந்த ஊரில் அதுகுறித்து விழாக் கொண்டாடி மகிழ்ந்தான். மீண்டும் வாகைப்பறந்தலைக்கண் வந்தெதிர்த்த ஒன்பது மன்னர்களின் குடைகளையும் முரசினையும் கைக்கொண்டு வென்று துரத்தி வீறு கொண்டான். தமிழ்நாட்டில் ஆங்காங்கே வாழ்ந்து வந்த ஒளியர், அருவாளர், பொதுவர் போன்றாரையும், கங்கைக் கரைவாழ் பேரரசுகளாகிய வச்சிரம், மகதம், அவந்தி அரசர்களையும் தன் ஆணை உணருமாறு செய்தான். காவிரிக்குக் கரை அமைத்து நாட்டுவளம் பெருக்கினான்; புகார்ப் பெருந்துறையைப் புதுப்பித்துப் புறநாட்டு வாணிபத்தை வளர்த்துச் செல்வநிலையினைச் செழிப்புறச் செய்தான். கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பட்டினப்பாலை கேட்டுப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்துப் பெருமை கொண்டான்.

இத்தகைய பேரரசன் செய்த அரும்பெரும் செயல் ஒன்றை, நக்கீரர் தாம் பாடிய அகநானூற்றுச் செய்யுள் ஒன்றில் அமைத்துப் பாராட்டியுள்ளார்; எந்த நாட்டில் செல்வநிலைகண்டு பிறநாட்டு மக்கள் எல்லாம்

பிழைப்பு நோக்கி ஆண்டு வரவிரும்புவரோ? அந்நாடே நாடு எனப் போற்றப்படும்; அதற்கு மாறாக, வளம் இழந்து வறுமையுற்ற காரணத்தால், பிழைக்கப் பிறநாடு நோக்கிச் செல்லவேண்டிய நிலையினை விரும்பும் மக்களைக் கொண்ட நாடு நாடெனப்படாது; ஆகவே, நாடாள் அரசர் தம் கடமை, செல்லும் குடிகளின் செல்வநிலையினைச் சீர்செய்து, அவர்களைச் செல்லாவாறு நிறுத்திக் காப்ப தாம்;

"பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பின் புகார்."

என இச்சிறப்பைப் புலவர்களும் போற்றுவர். அத்தகைய பெரும்பணியினை ஆற்றிப் புகழ்பெற்றவன் கரிகாலன்; இவன், தான் ஆட்சிக்கு வருமுன், நாடு பெற்றிருந்த அரசியல் குழப்பத்தால், தம் செல்வநிலை தேய்ந்து சீர் அழிந்து வேற்றிடம் செல்ல விரும்பிய தன் நாட்டுக் குடிகளைப் போகாவாறு போற்றிக்காத்தான். கரிகாலன் கடமை அறிந்து செய்த இவ்வருஞ் செயலை,

"செல்குடி நிறுத்த பெரும்பெயர்க் கரிகால்." (அகம். ௧௪௧)

எனக் கூறிப் பாராட்டியுள்ளார் நம் நக்கீரர்.

சங்க காலத்தில், கரிகாலனுக்குப் பின்வாழ்ந்த சோழ அரசர்களுள் சிறந்து விளங்கிய பேரரசன் கிள்ளிவளவன்; பேராண்மையும் பெரும்புலமையும் பெற்ற பேரரசனாகிய இவன் போர்நிகழ்ச்சிகள் பலவற்றையும் புலவர்பலர் போற்றியுள்ளனர்; கிள்ளிவளவன் என்ற பெயருடையார் பலர் காணப்படுதலாலும், அவன் போர் நிகழ்ச்சிகளாகப் புலவர் கூறுவன ஒன்றற்கொன்று முரண் படுவனவாகத் தோன்றுதலாலும் இவன் வரலாற்றை அறிவதில் அறிஞர்கள் விழிப்புடையராதல் வேண்டும்.

இவனைப் பற்றிய இரு நிகழ்ச்சிகளை நக்கீரர் குறிப் பிட்டுள்ளார்; துளுநாட்டைச் சேர்ந்த கோசர் தமிழ கத்துட் புகுந்து தமிழரசுகளுக்குத் தொல்லைபல விளைத்து

வந்தனர்; அதனால், அக் கோசரை அழித்து ஒழித்தல் வேண்டும் என அக்கால அரசர்கள் அனைவரும் முயன்றுள்ளனர்; அத்தகைய முயற்சியில் கிள்ளிவளவனுக்கும் பங்குண்டு என்கிறார் நக்கீரர்; வாய்மை வழுவா நெறியால் விளங்கும் புகழ்பெற்றுச் செல்வத்தாலும் சிறந்து காணப்பட்ட கோசர்கள், தொல்லைவிளைத்துக் கைப்பற்றிய நாடுகளை, அவர்களின் பெரும்படையைப் பாழ்செய்து கைப்பற்றக் கிள்ளி விரும்பினான் என்று நக்கீரர் கூறுகிறார்:

"வாய் மொழி நிலைஇய சேண்விளங்கு நல்லிசை
வளங்கெழு கோசர் விளங்குபடை நூறி
நிலங்கொள வெஃகிய பொலம்பூட் கிள்ளி." (அகம். ௨0௫)

பழையன் மாறன் என்பான் ஒருவன், பாண்டியர் படைத்தலைவனாய் விளங்கினான்; அவன் படைவலி கண்டு பேரரசர் பலரும் அஞ்சி வாழ்ந்தனர்; கிள்ளிவளவன், வெள்ளம் போல் பரந்த பெரும்படையுடன் பழையன் வாழ்ந்திருந்த கூடல் நகரை அடைந்து ஆங்கே, நெடிய பல தேர்களையும், அணிபல அணிந்து தோன்றும் யானைப் படைகளையும் உடைய பழையனை எதிர்த்துப் போராடிச் சாய்த்து, பகைமன்னரின் ஊரைக் கைப்பற்றிக் கொணர்ந்தான்; தம் குலப் பகைவனாகிய பழையன் பெற்ற இத் தோல்வி கண்டு சேரநாட்டு அரசன் களித்தான் என்ற ஒரு வரலாற்றை நக்கீரர் கூறியுள்ளார்;

"நெடுந்தேர்
இழையணி யானைப் பழையன் மாறன்
மாடமலி மறுகிற் கூட லாங்கண்
வெள்ளத் தானையொடு வேறுபுலத் திறுத்த
கிள்ளி வளவன் நல்லமர் சாஅய்க்
கடும்பரிப் புரவியொடு களிறுபல வவ்வி
ஏதில் மன்னர் ஊர்கொளக்
கோதை மார்பன் உவகையிற் பெரிதே." (அகம். ௩௪௬)

கிள்ளி வளவனைப் பாடிய புலவர் எவரும், அவன் பாண்டி நாட்டை வென்றான் என்று யாண்டும் கூறவில்லை

ஆதலாலும், மாறாக அவன் சேரர்க்குரிய கருவூரை முற்றி அழித்தான் எனப்பலரும் கூறியிருப்பதாலும், கூடல்நகரில் நடைபெற்ற இப்போரில் பெற்ற வெற்றி கண்டு சேரஅரசன் மகிழ்ந்தான் என்று கொள்வதினும், ஆங்கே தன் பகைவன் ஒருவன் பெற்ற பெருந்தோல்வி கண்டே மகிழ்ந்தனன் எனக்கொள்வதே நேரிதாம் ஆதலாலும், பழையன், கிள்ளிவளவன் இருவரில், கிள்ளி வளவனே சேரர்களின் பெரும்பகைவனாய்க் காணப்படு கின்றனன் ஆதலாலும், பழையன் படைத்தலைவனே அன்றிப் பேரரசனல்லன் ஆதலாலும், கிள்ளிவளவன், பழையனைப் போரில் சாய்த்து "மன்னர் ஊர் கொண் டான்" எனக் கூறுவது பொருந்தாது ஆதலாலும், பழையன், தன் தலைநகர் வந்து தங்கிய கிள்ளிவளவனைச் சாய்த்து மன்னனாகிய அவன் ஊரைக் கைக்கொண்டான்; அதுகண்டு, கிள்ளிவளவன் பகைவனாகிய சேரன் மகிழ்ந் தான் எனக்கொள்வது பொருந்துவதாகத் தோன்று வதாலும் அவ்வாறு கொள்வாரும் உளர். அவ்வாறு கொண்டால், அது கிள்ளிவளவன் தோல்வியைக் குறிப்ப தாகும்.

திதன், திதன் வெளியன், மாவண் திதன் என்று அழைக்கப் பெறுவாரொரு குறுநில மன்னன் உறையூரில் வாழ்ந்திருந்தான்; நாள்தோறும் அரசவையில் இருந்து வருவார்க்குப் பொன்னையும் பொருளையும் வாரி வழங்கும் வள்ளன்மை உடையவன்; பெரிய வீரன்; இவனை வெல்லக்கருதி, பாணன் என்ற பெரிய மல்லன் ஒருவனை யும் துணைகொண்டு வந்த கட்டி என்பவன், இவன் நாளோ லக்கச் சிறப்பைக்கேட்டு அஞ்சி ஓடிவிட்டான் என்று திதனின் வெற்றிச்சிறப்பை ஒரு புலவர் விளக்குவார். ஐயை என்ற பெயர் கொண்டு, கற்பும் பொற்பும் பொருந் திய மகள் ஒருத்தியைத் திதன் பெற்றிருந்தான். திதன் உறந்தை காவற்காடுகளால் சூழ்ந்து பெறுதற்கு அருமை உடையது; வெண்ணெல் வயல்களால் சூழ்ந்து வளம் நிறைந்தது; வாய்மை தவறாது, வழக்கறியும் அவையினை

உடையது; இத்தகைய சிறப்புக்குரிய தித்தனையும் அவன் உறந்தை நகரையும் நக்கீரர்,

"பலநல்ல புலன் அணியும்
சீர்சான்ற விழுச்சிறப்பின்
சிறுகண் யானைப் பெறலரும் தித்தன்
செல்லா நல்லிசை உறந்தை." (புறம். ௩௯௫)

எனப் புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

புன்னைமரத்தைக் காவல் மரமாகக் கொண்டு வாழ்ந்த திதியன் என்பானொரு வீரனையும், அவன் புன்னைமரத்தை அழிக்க வேண்டும் என விரும்பும் அன்னி என்பானையும், அவனை அவ்வினையை மேற்கொள்ளாவாறு அறிவுரை கூறித் திருத்த முயன்றவனும், நீடூரில் வாழ்ந்தவனும், வேற்படையால் விழுப்புகழ் உடையவனும், வள்ளலும் ஆகிய எவ்வி என்பானையும் நமக்கு அறிமுகம் செய்வித்து, நக்கீரர் எவ்வியின் அறிவுரை கேளாத அன்னி, திதியனுக்குரிய குறுக்கைப் பறந்தலை என்ற போர்க்களத்தில் அவனோடு போரிட்டு அவன் புன்னை மரத்தையும் அழித்துத் தானும் அழிந்தான் என்ற வரலாற்றையும் அறிவிக்கிறார்:

"பல்வேல் எவ்வி,
நயம்புரி நன்மொழி அடக்கவும் அடங்கான்
பொன்னிணர் நறுமலர்ப் புன்னை வெஃகித்
திதியனொடு பொருத அன்னி போல
விளிகுவை." (அகம். ௧௨௬)

வேங்கட மலைக்குரியவனும், வேற்படை மிக்கவனும், சிந்தை செல்லாச் சேணெடும் தூரம்வரை பரவிய புகழ் உடையவனும், பொற்பூண்பல பூண்டவனும் ஆகிய திரையன் என்பவனையும், பூஞ்சோலை பலவற்றால் பொலிந்து தோன்றும் பவத்திரி என்ற அவன் ஊரையும் நக்கீரர் அறிந்து உணர்த்தியுள்ளார்:

"செல்லா நல்லிசைப் பொலம்பூண் திரையன்
பல்பூங் கானல் பவத்திரி." (அகம். ௩௪௦)

வேங்கட மலைக்கு வடக்கே வாழும் வடுகர் தலைவனும், பகைவரை வென்று அவர்கள் நாட்டுப் பசுநிரைகளைத் தந்து தன் மன்று நிறையுமாறு நிறுத்த வல்லவனும், தனக்கு நிகரான வலியுடையார் எவரையும் பெறமாட்டாப் பெருந்தோள் பெற்றவனும் ஆகிய எருமை என்பானையும், அவனுடைய நாட்டில் பாயும் அயிரி என்னும் ஆற்றினையும் அறிந்து கூறியுள்ளார்; வடுகர் பெருமானாகிய இவ் எருமை என்பானையே அன்றி நெடுஞ்செழியனோடு தலையாலங் கானத்துச் செருவில் போரிட்ட எருமையூரன் என்பான் ஒருவனையும் நக்கீரர் அறிந்துள்ளார்; இருவரும் ஒருவரோ, அன்றி வேறுபட்டவரோ அறிகிலம்:

"கன்றுடைப் பெருநிரை மன்றுநிறை தரூஉம்
நேரா வன்தோள் வடுகர் பெருமகன்
பேரிசை எருமை நன்னாட் டுள்ளதை அயிரியாறு."
(அகம். உருக)

"நாரரி நறவின் எருமை யூரன்." (அகம். ருசு)

வாட்போர் வல்லவனும், தமிழ்நாடு முழுதினையும் வென்று பெற்ற புகழுடையானும், தன்னைப் பாடி வரும் பாணர் முதலியோர்க்கு வரையாது வழங்கும் நாளோலக்கச் சிறப்புடையவனும், தூங்கலோரியார் என்ற புலவர் பெருந் தகையின் பாராட்டைப் பெற்ற சிறப்புடையவனும், போரில் பெண்யானையால் மிதியுண்டு பெற்ற புண் தழும்பு, பெரிய வழுதுணங்காய் அளவு பெரிதாதல் கண்டு மக்கள் இட்டு வழங்கிய வழுதுணைத்தழும்பன் என்ற பெயருடைய வனும் ஆகிய தழும்பனையும் அவனுடைய காவல் செறிந்த ஊணூரையும், அவ் வூணூர்க்கு அப்பால் உள்ள பெருஞ் செல்வம் உடைமையால் பெரும் புகழ்பெற்ற உப்பங்கழி களால் சூழப்பெற்ற மருங்கூர்ப் பட்டினத்தையும் நக்கீரர் அறிந்து பாராட்டியுள்ளார்:

"வாய்வாள்,
தமிழகப் படுத்த இமிழிசை முரசின்
வருநர் வரையாப் பெருநா ளிருக்கைத்
தூங்கல் பாடிய ஓங்குபெரு நல்லிசைப்

அ. நக்கீரரைப்பற்றிக் கூறும் கதைகள்

நக்கீரர் முதலிய சங்கப் புலவர்களின் பிறப்புக் குறித்தும், அவர்கள் சங்கத்தமர்ந்து தமிழாராய்தற்கு வேண்டிய பலகை பெற்றது குறித்தும், இறைவன் களவியல் இயற்றியது குறித்தும், நக்கீரனார்க்கும் இறையனார்க்கும் நடைபெற்ற சொற்போர் குறித்தும், நக்கீரர் திருமுருகாற்றுப் படை பாடுதற்கான காரணம் குறித்தும், வேறு பிற குறித்தும் பல நூல்களில், பல கதைகள் பலவாறு கூறப்படுகின்றன. அவற்றைத் தனித்தனியே எடுத்துக் கூறி ஆராய்ந்து உண்மை காண்பது நன்றாம். சங்கப் புலவர்கள் பிறப்பும், அவர்கள் சங்கப் பலகை பெற்றதும், புலவர்கள் எல்லோர்க்கும் பொதுக்கதை ஆதலின் அவற்றை விரித்துக் காணுது வேண்டிய அளவு கண்டு செல்லலாம்.

களவியல் குறித்த கதை, "களவியலுரை" என்ற தலைப்பின் கீழ் ஆராயப்படும். ஆகவே, அதை ஈண்டுக் கூற வேண்டுவதில்லை. நக்கீரர்க்கும், இறைவற்கும் நிகழ்ந்ததாகக் கூறப்படும் கதைகளே நக்கீரர் வரலாறோடு நெருங்கிய தொடர்புடையதாதலின் அதைச் சிறிது விரித்து உரைத்தல் நன்றாம். ஆகவே, ஈண்டு கண்டு ஆராயப் பெறுவன, சங்கப் புலவர் பிறப்பு, சங்கப் பலகை பெற்றது, நக்கீரர் - இறைவர் வாதம், அவர், முருகாற்றுப்படை பாடிய வரலாறு ஆகிய இக் கதைகளே.

புலவர் பிறப்பினைக் குறித்துக் கூறப்படும் கதைகள் பல நூல்களில் வந்துள்ளன. நக்கீரரைப்பற்றியும், அவர் காலப் புலவர்களைப்பற்றியும் கூறும் நூல்கள் பலவாயினும் அவர்கள் பிறப்புக் குறித்துக் கூறும் நூல்கள் வடமொழி ஆலாஸ்ய மகாத்மியம், அதை முதல் நூலாகக் கொண்டு பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடல் என்ற இரண்டு மட்டுமே ஆம். திருவிளையாடல்களுள் காலத்தால் முற்பட்டுப் பழைய திருவிளையாடல் எனப் பெயர் பெறும் பெரும்பற்றப்புலியூர் நம்பி இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில், புலவர்கள் பிறப்புக்

அ. நக்கீரரைப்பற்றிக் கூறும் கதைகள்

நக்கீரர் முதலிய சங்கப் புலவர்களின் பிறப்புக் குறித்தும், அவர்கள் சங்கத்தமர்ந்து தமிழாராய்தற்கு வேண்டிய பலகை பெற்றது குறித்தும், இறைவன் களவியல் இயற்றியது குறித்தும், நக்கீரனார்க்கும் இறையனார்க்கும் நடைபெற்ற சொற்போர் குறித்தும், நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாடுதற்கான காரணம் குறித்தும், வேறு பிற குறித்தும் பல நூல்களில், பல கதைகள் பலவாறு கூறப்படுகின்றன. அவற்றைத் தனித்தனியே எடுத்துக் கூறி ஆராய்ந்து உண்மை காண்பது நன்றாம். சங்கப் புலவர்கள் பிறப்பும், அவர்கள் சங்கப் பலகை பெற்றதும், புலவர்கள் எல்லோர்க்கும் பொதுக்கதை ஆதலின் அவற்றை விரித்துக் காணாது வேண்டிய அளவு கண்டு செல்லலாம்.

களவியல் குறித்த கதை, "களவியலுரை" என்ற தலைப்பின் கீழ் ஆராயப்படும். ஆகவே, அதை ஈண்டுக் கூற வேண்டுவதில்லை. நக்கீரர்க்கும், இறைவற்கும் நிகழ்ந்ததாகக் கூறப்படும் கதைகளே நக்கீரர் வரலாற்றோடு நெருங்கிய தொடர்புடையதாதலின் அதைச் சிறிது விரித்து உரைத்தல் நன்றாம். ஆகவே, ஈண்டு கண்டு ஆராயப்பெறுவன, சங்கப் புலவர் பிறப்பு, சங்கப் பலகை பெற்றது, நக்கீரர் - இறைவர் வாதம், அவர், முருகாற்றுப்படை பாடிய வரலாறு ஆகிய இக் கதைகளே.

புலவர் பிறப்பினைக் குறித்துக் கூறப்படும் கதைகள் பல நூல்களில் வந்துள்ளன. நக்கீரரைப்பற்றியும், அவர் காலப் புலவர்களைப்பற்றியும் கூறும் நூல்கள் பலவாயினும் அவர்கள் பிறப்புக் குறித்துக் கூறும் நூல்கள் வடமொழி ஆலாஸ்ய மகாத்மியம், அதை முதல் நூலாகக் கொண்டு பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடல் என்ற இரண்டு மட்டுமே ஆம். திருவிளையாடல்களுள் காலத்தால் முற்பட்டுப் பழைய திருவிளையாடல் எனப் பெயர் பெறும் பெரும்பற்றப்புலியூர் நம்பி இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில், புலவர்கள் பிறப்புக்

குறித்து ஏதும் கூறப்படவில்லை. இனி, கதையினை நோக்குவோம்.

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் கூறும் நக்கீரர் முதலாம் புலவர்களின் பிறப்பு :

பாண்டிய நாட்டை வங்கியசேகரன் என்பவன் ஆண்டு வரும் காலத்தில், காசியில், நான்முகன் பத்து அசுவமேத யாகங்கள் செய்து முடித்துவிட்டுக் கங்கையில் நீராட வேண்டித் தம் மனைவியராகிய சரசுவதி, சாவித்திரி, காயத்திரி மூவரையும் உடனழைத்துக்கொண்டு சென்றான்; இடைவழியில், வித்தியாதர மகளொருத்தி பாடிய இன்னிசை கேட்டு மயங்கிய நாமகள் அங்கேயே நின்று விட்டாள். கங்கைக்கரை சேர்ந்த நான்முகன், நாமகள் வாராமை கண்டு, அவள் இன்றியே ஏனைய இருவருடன் நீராடிக் கரை ஏறினான். அந்நிலையில் ஆங்கு வந்து சேர்ந்த நாமகள், அவர் செயல் கண்டு சினந்து, 'நான் இல்லாத போது நீங்கள் மட்டும் நீராடியது எவ்வாறு?' எனக் கேட்டாள்;. செய்த குற்றத்தை மறந்து தன்னைப் பழிக்கும் அவளை நான்முகன் நோக்கி, "குற்றம் நின்னுடையதாகவும் என்னைப் பழித்தனை ஆதலின், இக்குற்றம் நீங்க, நாற்பத் தெட்டுப் பிறவி மக்களாய்ப் பிறந்து மண்மேல் துன்புற்று வாழ்வாயாக," என்று சாபம் கொடுத்தான். சாபம் கேட்டஞ்சிய கலைமகள், கணவனை வணங்கி, "மானிடப் பிறவியில் பிறந்து பெறும் பெருந்துயரை எவ்வாறு ஆற்றுவேன்?," என அழலாயினள். நான்முகன் அவள் பிழை உணர்ந்து வருந்துவது கண்டு, "நின் உடல் உறுப் புக்களென விளங்கும் எழுத்துக்கள் ஐம்பத்தொன்றில் ஆகாரம் முதல் ஹகாரம் ஈறாக உள்ள நாற்பத்தெட்டு எழுத்துக்களும் நாற்பத்தெட்டு புலவர்களாக, அகர வடிவினனான இறைவனும் ஒரு புலவனாய்த் தோன்றி, அப் புலவர் தமக்கு அறிவூட்டும் ஆசிரியனாகுக," என்று கூறிச் சாப விடை தந்தான்.

அவ்வாறே நாற்பத்தெட்டு எழுத்துக்களும் தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நாற்பத்தெட்டு மக்க

ளாய்ப் பிறந்தன. அம் மக்கள், கலை பல அறிந்து கற்றுத் துறைபோய புலவர்மணிகளாயினர்; பின்னர், பல்வேறு இடங்களுக்கும் போய், ஆங்காங்கிருந்த புலவர்களோடு வாதிட்டு வென்று இறுதியில் மதுரை சென்றனர்; ஆங்கே, ஆலவாய்ப்பெருமான், புலவர் உருவில் வந்து அவர்களை வரவேற்று உடன் கூட்டிச் சென்று மறைந்தார்; புலவர்கள் அவர் செயல் கண்டு வியந்து, வெவ்வேறு செய்யுட்களால் பாடிப் பரவுவாராயினர்; பின்னர் ஆங்கிருந்து அரண்மனை அடைந்து பாண்டியன் வங்கிய சேகரனைக் கண்டனர்; அரசன் புலவர்களின் பெருமை அறிந்து, கோயில் வடமேற்கு மூலையில் அவர்கள் இருந்து தமிழாராயத்தக்க சங்க மண்டபம் ஒன்றை அமைத்து, அதில் இருக்குமாறு அவர்களை வேண்டினன்; அவர்களும் அவனளித்த வரிசை பலவற்றோடு ஆண்டுச்சென்று அகமகிழ்ந்து அறிவாராய்ச்சி மேற்கொண்டு இருக்கலாயினர்.

மதுரையில் சொக்கநாதர் நடத்திய திருவிளையாடல்களை அகத்தியர் சில முனிவர்களுக்கு அறிவிக்கும் முறையில் எழுதப்பட்டுள்ள வடமொழி ஆலாஸ்ய மகாத்மியத்தில், நக்கீரர்முதலாம் புலவர்களின் பிறப்பு முறை, பரஞ்சோதியார் திருவிளையாடல் பகரும் முறையினையே முழுதும் ஒத்திருப்பதால் அதை மீண்டும் கூறுதல் தேவையில்லை.

புலவர்கள் சங்கப்பலகை பெற்ற வரலாறு குறித்துக் கூறும் நூல்கள், பழைய திருவிளையாடல் எனப்படும் நம்பி திருவிளையாடல், பரஞ்சோதியார் திருவிளையாடல், வடமொழி ஆலாஸ்ய மகாத்மியம் முதலியனவாம். அவற்றுள், பழைய திருவிளையாடல் கூறும் நிகழ்ச்சி இது:

மதுரைச் சங்கமண்டபத்தே அமர்ந்து தமிழாராய்ந்து வந்த புலவர்கள், தங்கள் புலமையின் தகுதி திறமைகளுக்கேற்ப, வரிசையாக அமர்வதற்கு விரும்பினர்; அதற்கு அவர்கள் அனைவரும் ஒருங்கிருக்கத்தக்க பேராசனம் ஒன்று தேவைப்பட்டது. அதனால், நக்கீரர், கபிலர், பரணர் முதலாம் புலவர்கள் அனைவரும் கோயிலை அடைந்து

ஆலவாய்ப் பெருமான் முன் நின்று, தங்கள் உள்ள விருப்பத்தை உணர்த்தி வணங்கி நின்றனர். இறைவன் அவர்கள் வேண்டுகோட்கிணங்கி, ஒருவர் இருக்கத்தக்க ஒரு முழச் சதுரப் பலகை ஒன்றை அளித்தார்; பலகை கண்ட புலவர்கள்; "அந்தோ, எல்லோரும் இருக்கத்தக்க நெடிய பலகை ஒன்றை நாம் வேண்டினோம்; இறைவன் இதைத் தந்துள்ளான்; இதைக்கொண்டு நாம் என் செய்வோம்?" என உளம் தளர்ந்து உரைத்தனர்; புலவர்தம் தளர்ச்சியறிந்த பெருமான், "புலவர்தம் புலமை அறிந்து, அத்தகையோர் அனைவர்க்கும் அது வளர்ந்து இடம் கொடுக்கும்," என்ற குரல் கொடுத்தனன். அது கேட்ட புலவர்கள் அகம் மகிழ்ந்து பலகையைக் கொண்டுபோய்த் தமிழ் மன்றத்தின் நடுவேயிட்டு, முதலில் நக்கீரர் அதில் அமர்ந்தார். பின்னர், அது மீண்டும் ஒருவர் இருக்கத்தக்க அளவு வளர்ந்தது; அதில் கபிலர் அமர்ந்தார்; அது மேலும் வளர, பரணர் அமர்ந்தார்' அஃது இவ்வாறே வளர வளரப் புலவர்கள் அனைவரும் அமர்ந்து, அகமகிழ்ந்திருந்து தமிழாராய்வாராயினர்.

இனி, புலவர்கள் சங்கப்பலகை பெற்ற வரலாறு குறித்துப் பரஞ்சோதியார் கூறும் கதையினைக் காண்பாம்:

அரசன், புதுப் புலவர்களுக்கு வரிசை பல வழங்கியதைக் கண்ட அந்நாட்டுப் பழம் புலவர்கள் மனம் புழுங்கி, அவர்களுடன் வாதிட்டுத் தோற்றனர்; வேற்றூரில் வாழ் புலவர்களும், அவ்வாறே புதுப்புலவர்களுடன் சொற்போர் நிகழ்த்திச் சோர்ந்தனர்; இவ்வாறு வந்தபுலவர்களோடு இருந்தபுலவர்கள் ஒருவர்பின் ஒருவராய் வாதிடுவதை வழக்கமாகக் கொண்டுவிட்டனர்; நாள்தோறும் வருவார் போவார் எல்லோருடனும் வாதிடவேண்டி வந்ததைக்கண்ட புதுப் புலவர்கள், உள்ளம் தளர்ந்து துயருற்றனர்; பின்னர் தங்கள் துயர்போக்கி உயர்வளிப்போன் உமையொருபாகனும் இறைவனே என உணர்ந்து கோயிலை அடைந்து ஆண்டவனை வணங்கி, "அண்ணலே! எம்மோடு வாதுசெய்ய எல்லோரும் வருகின்றனர்; வருவார்தம்

அறிவினை எளிதில் அளந்து காணத்தக்க அளவுகோல் ஒன்று தேவை; அவ்வாற்றல் வாய்ந்த பலகை யொன்றைத் தந்தருள்வீர்,'' என வேண்டினர்; வேண்டுவார்க்கு வேண்டுவன அளிக்கவல்ல இறைவன், அவர்கள் முன் புலவர் உருக்கொண்டு தோன்றி, ஒரு பலகையைக் காட்டி, "இது இருசாண் நீளமுள்ளது; ஆனல், அறிவிற் சிறந்தது; ஆற்றலிற் பெரியது; நும்போல் புலவர் ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு முழம் வளர்ந்து கொடுத்து இடந்தரும்; எடுத்துச்சென்று அளவுகோலாகக் கொள்ளுங்கள்,'' என்று கூறி அதை அவர் கைக்கொடுத்து மறைந்து சென்ருர். புலவர்கள் பலகையைக் கொண்டு சென்று, மண்டபத்துள் வைத்து, மலரும் மணந்தரு புகையும் காட்டி வழிபட்டு, அவர்களுள் நக்கீரர் முதன்முதலில் ஏறி அமர்ந்தார்; அவரைத் தொடர்ந்து கபிலரும், கபிலரைத் தொடர்ந்து பரணரும், பரணரைத் தொடர்ந்து பிற புலவர்களும் பலகையில் ஏறி இருந்து மகிழ்ந்தனர்.

இவ்வரலாறே சிறிதும் மாறுபாடின்றி, ஆலாஸ்ய மகாத்மியத்தில் கூறப்பட்டுளது; பரஞ்சோதியார் தம் நூலுக்கு ஆலாஸ்ய மகாத்மியத்தையே முதல் நூலாகவும் கொண்டுள்ளார்; ஆகவே அவ்வாலாஸ்ய மகாத்மியம் கூறும் வரலாற்றை ஈண்டு மீண்டும் விரித்துரைத்திலன்.

இனி, நக்கீரர்க்கும், இறையனுர்க்கும் நடைபெற்ற வாதம் குறித்து வழங்கும் கதைகளைக் காண்போம். இக்கதைகளைக் கூறும் நூல்கள் பரஞ்சோதிமுனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணமும், சீகாளத்திப் புராணமும் ஆம். அவற்றுள் திருவிளையாடற் புராணம் கூறுமாறு:

'நக்கீரர் முதலாம் புலவர்கள் நாற்பத்தெண்மரும், ஆலவாயுடையான் அளித்த அறிவு அறியும் பலகை மீதமர்ந்து தமிழ் அறிந்து வருவாராயினர்; இறைவனும் ஒரு புலவராய் அவருடன் கலந்து வாழ்ந்திருந்தான்; அவர்கள் அவ்வாறு வாழ்ந்து வர, மதுரையில் பாண்டிய நாட்டாட்சிப் பொறுப்பை வங்கியசூடாமணி என்னும் சண்பக மாறன் மேற்கொண்டு, அரசோச்சி வரலாயினன்; இள

வேனிற் காலம் வந்துற்றது; இளந்தளிர் விட்டு எழில் மிக விளங்கும் மரங்களையும், மலரிடைப் புகுந்து மணங் கொண்டு வீசும் தென்றலையும், கண்டும் உற்றும் களி கொள்ள விரும்பிய வங்கியசூடாமணி, தன் மனைவியோடும் மலர் வனம் புகுந்து ஆண்டுள்ளதோர் செய்குன்றின் மேல் இருந்து இயற்கையின் எழில் கண்டு மகிழ்ந்திருந்தான்; அக்காலை, தென்றல் பண்டுபோல் கமழாது புதுமணம் கமழ்தலை உணர்ந்தான்; என்றும் இல்லா இம்மணம், தென்றற்கு இன்று எவ்வாறு கிடைத்தது? இம் மணந்தரும் பொருள் யாது? என்று எண்ணி எண்ணிப் பார்ப்பானு யினன்; உற்று நோக்கி வருவான் முன், அதே நறுமணம் தன் மனைவியின் கூந்தலினின்றும் வருவதை உணர்ந்தான்; அறிதோறறியாமை கண்டற்றே போல், தன் மனைவியின் கரு நெறிக் கூந்தலினின்று கமழ்கிறது எனின், இம்மணம் இவள் கூந்தற்கு இயல்பா யமைந்ததோ அன்றி மலரும் மண முடைப் பொருளும் பெற்றுச் செயற்கையானமைந்ததோ என்று ஐயுறலாயினன்; ஐயத்தைத் தன் அறிவால் தெளிந்து கொள்ளமாட்டா வங்கிய சூடாமணி, "என் உளத்துள தாய இவ் ஐயத்தை உணர்ந்து செய்யுள் செய்ய வல் லார் பெறுக ஆயிரம் பொன்," என அறிவித்து, அப் பொன் முடிந்த கிழியைச் சங்க மண்டப முன்னர்த் தூக்கினுன். புலவர்கள் அரசன் ஐயம் யாதாம் என எண்ணி எண்ணிப் பார்த்தும் அஃது அறியமாட்டாராயினர்; அது குறித்து அவர்கள் பாடிய பாட்டொன்றும், அரசன் உட்கருத்து ணர்த்தும் ஆற்றலைப் பெருமை யுணர்ந்து புலவர்கள் பெரி தும் உளங் கவல்வராயினர்.

இஃது இவ்வாருக, ஆதிசைவ மரபிற்ருேன்றி இளம் பருவத்திலேயே இருமுதுகுரவரையும் இழந்து; பிரமசரியம் மேற்கொண்ட தருமி என்னும் அந்தணச் சிறுவன்ஒருவன், ஆலவாய்ப் பெருமான் அடிமுன் வீழ்ந்து, "எந்தையே! அடியேன் தந்தையையும் தாயையும் இளமையிலேயே இழந்தவன்; எவர் துணையும் இன்றி இன்றுவரை துயர் வாழ்வுடையேன்; அதனுல், மணம் செய்துகொள்ளும் மன

முடையேன்; நல்லாள் ஒருத்தியொடு இல்லறம் மேற்கொள்ளா எனக்கு நின்மலரடி அருச்சிக்கும் மாண்பு வராதன்றோ? எல்லாம் அறிந்தவன் நீ; எனக்குத் தந்தையும் நீ; தாயும் நீ; என் மனத்துயர் போக்குதற்கு ஏற்றதோர் சமயம் இது; அரசன் உள்ளக் கருத்தினைத் தெள்ளிதின் உணர்த்தும் செய்யுளொன்று தருக," என இருகை கூப்பி இரந்து வேண்டினன்.

தருமியின் வேண்டுகோட் கிரங்கிய தம்பிரான்,

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!
காமம் செப்பாது கண்டது மொழிமோ;
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறிஎயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீஅறியும் பூவே" (குறுந். உ)

என்னும் செய்யுளை இயற்றித் தந்தருளினன். பெற்ற தருமி பெருமகிழ்வுற்று, அதனைக்கொண்டு போய்ச் சங்கப் புலவர்களிடத்தே கொடுத்தனன்; புலவர்கள், பாட்டு, சொல் வளமும் பொருள்வளமும் செறியத் தோன்றும் பொலிவினைக் கண்டு "நன்று! நன்று!" என வியந்து பாராட்டினர்; பாண்டியன் முன் சென்று பாட்டின் பொருளுரைத்துப் பாராட்டினர்; மன்னன் தன் சிந்தையுறு ஐயம் அறிந்து பாடப் பெற்றுள்ளமை உணர்ந்து உவந்தான். "புலவருடன் சென்று தருமி கிழி பெறுக," என்றனன். அரசன் ஆணைபெற்ற தருமி, சங்க மண்டபம் புகுந்து ஆங்குத் தூக்கிய கிழியை அறுக்கத் துணிந்தான். ஆனால் அந்தோ! அந்நிலையில் அவ்வழிப் போந்த நக்கீரனார் "பாட்டுப் பிழையுடையது! பொற்கிழி பெறும் பேறு பெற்றாய் அல்லை," எனக் கூறிவிட்டனர்.

வேதியன் வருந்தினான்; கோயிலுட் புகுந்து சிவன் திருமுன் செய்யுளை வைத்து விட்டு, "எந்தையே! ஏழைத் தருமி யான் வறுமையின் வாழ்ந்து பழகி விட்டவன்; ஆதலின் பொற்கிழி பெற முடிய வில்லையே என வருந்துகின்றேன் அல்லேன்; சின்னாளும் சிற்றிவும் உடைய புலவர்கள்

பேரறிவும் பிறவா யாக்கையும் உடைய பெருமான் பாட்டில் பிழை காண்பதா? இறைவ! நின்னை, இனியார் மதிப்பர்? நினக்கு இவ் விழிவா? அதுவும் என் பொருட்டு நேர்ந்ததே! என்று என் உள்ளம் ஏங்குகிறது," என்று கூறி நின்றான். உடனே, கோயிற் குடிகொண்ட பெருமான் ஒரு புலவனுத் தோன்றி வெளிப்பட்டுச் சங்கத்தை அடைந்து மண்டபத்தின் நடுவண் நின்று, "என் பாட்டில் பிழை கண்டவன் யாவன்?" என்று வினவினர், "நக்கீரர், "குற்றம் கண்டவன் நானே" என்று இயம்பினர்; இறைவன் "கூறிய குற்றம் யாது?" என்று வினவ; "செய்யுள் சொல்லால் வழுவுடையதன்று; பொருட் குற்றம் உடையது; கூந்தல் மணம் பெறுவது மலர்களால்; இயற்கையில் பெறுவது இல்லை; இஃது உலக உண்மை; அற்றாக, 'அரிவை கூந்தலின் நறியவும் உளவோ?' என்ற இப்பாட்டு, மகளிர் கூந்தற்கு மணம் இயற்கையால் நேர்ந்தது எனக் கூறுகிறது; அவ்வாறு கூறுதல் உலகவழக்கொடு மாறுபடக் கூறலாம். ஆகவே, பொருளால் குற்றம் உடையது" என்று விடையிறுத்தார்; இறைவன், "பத்தினிப் பெண்டிர் கூந்தலும் மணத்தைச் செயற்கையால் பெறுவதாமோ?" என்ன, நக்கீரர் "ஆம்" என்றார்; "வானர மகளிர் கூந்தலுக்கும் மணம் செயற்கைதானே?" என, இறைவன் மீண்டும் வினவ, "அதுவும் அன்னதே" என்றார் நக்கீரர்; இறைவன் மீண்டும் நக்கீரனாரை நோக்கி "நின் வழிபடு கடவுளாகிய காளத்தி நாதன் பாகத்தமர்ந்த ஞானப் பூங்கோதையார் கூந்தலும் அன்னதோ?" என்று வினவ, நக்கீரனார், ஒரு சிறிதும் அஞ்சாது "ஆம்; அதுவும் அத்தன்மைத்தே" என்று கூறினர்.

நக்கீரர் சொற்கேட்ட சிவன், தம் நுதல்விழியினைச் சிறிதே காட்டினர்; ஆனால், அவர் கண் கண்டும் நக்கீரனார் அஞ்சினாரல்லர்; "ஒரு கண் காட்டுவதால் மட்டுமல்ல; நின் உடலெல்லாம் கண் கொண்டு காட்டினும் அஞ்சேன்; நின் பாட்டுப் பிழையுடையது என்பதை மாற்றிக் கொள்ளேன்; இப்போதும் கூறுகிறேன்; நின்பாட்டு குற்றம் குற்

றமே" என்று கூறுவாராயினர்; ஆனால் இதற்குள், எரி விழியின் வெம்மை அவரை வாட்டவே, அதனைப் பொற மாட்டாது பொற்றாமரைக் குளத்துள் வீழ்ந்தார்; புலவர் உருக் கொண்டு போந்த இறைவனும் மறைந்தார்.

நக்கீரனாரை இழந்த புலவர்கள், அரசிழந்து வருந்தும் குடிகளே போல் வருந்தி, அந்தோ! நக்கீரரை இல்லா நம் தமிழ் மன்றம் மெய்யுணர்வில்லான் கல்விபோலவும், மதி யிழந்த வானைப்போலவும், சிறந்த நடுமணி இழந்த வடத் தைப்போலவும் பொலிவு குன்றுமே என ஏங்கினர்; துயர் பொறுக்கலாற்றாப் புலவரெல்லாம், "இறைவனோடு வாது செய்து பிழையுற்றாரும் உய்வரோ? இறைவனை விரும்பி னால் உய்யுமாறு உண்டாம்; பெருமான், பிழை பொறுக் கும் உளமுடையான் அன்றோ? வேண்டுவார்க்கு வேண்டு வன அளிக்கவல்ல அருட்கடலாம் அவனையே சென்று வேண்டுவோம்" என்று எண்ணி, இறைவன் திருமுன் சென்று "ஆலமுண்ட அண்ணலே! பிழையுளன பொறுத் திடுதல் நின் பண்பன்றோ? நக்கீரர் பிழை கண்டு ஒறுத்த நீ, இனி அதைப் பொறுத்து அருள்புரிதலையும் வேண்டு கின்றோம்" என்று கூறிக் குறையிரந்து நின்றனர். அருட் பெருங்கடலாகிய இறைவன், புலவர்தம் வேண்டுகோட் கிரங்கி, அருளுருவாம் அம்மையோடும், பொற்றாமரைத் தடம் அடைந்து, அதில் கிடந்து வருந்தும் நக்கீரனாரைத் தம் அருட்கண்ணால் நோக்கினார்; உடனே நக்கீரர், உள்ள மும் உடலும் தூயராகி ஞானப் பூங்கோதையார் தம் தெய் வக் கூந்தலுக்கும் குறைகூறிய தன் பிழையினைப் பொறுத் தாண்ட பெருங்கருணைத் திறத்தினை நினைந்து நினைந்துருகி, "கைலைபாதி காளத்திபாதி அந்தாதி" பாடித் துதித்தார். இறைவன் நக்கீரனார் கையைத் தம் திருக்கையாற் பற்றிக் குளத்தினின்றும் கரையேற்றி யருளினார். அருவுருவாய் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பெருமான் அருட் கோலம் கொண்டுவந்து கைகொடுத்துக் கரையேற்றும் பேறுபெற்ற புலவர் ஏறாகிய நக்கீரர், 'கோபப் பிரசாதம்,' 'பெருந் தேவபாணி' 'எழுகூற்றிருக்கை' முதலியன பாடிப்

பரமனைப் பரவினர். தருமியும் பொற்கிழிபெற்றுச் சென்றனன். பின்னர்ச் சிலநாட் சென்று, ஆலவாயின் அழல் நிறக்கடவுள் அகத்தியனாரை அழைத்து நக்கீரனார்க்கு இலக்கணம் உபதேசம் செய்வித்தருளினர்.

நம்பி திருவிளையாடல், இதே கதையினைச் சிற்சில வேறுபாடுகளுடன் கூறுகிறது:

"கொங்குதேர் வாழ்க்கை" என்ற தம் செய்யுட்குக் குறை கூறினர் நக்கீரனார் என அறிந்து அவரோடு வாதிட வந்த இறைவன், நக்கீரரை நோக்கி,

"அங்கம் குலுங்க அரிவாளில் நெய்தடவிப்
பங்கம்பட இரண்டு கால்பரப்பிச்—சங்கதனைக்
கீர்கீர் எனஅறுக்கும் கீரனோ என்கவியை
ஆராயும் உள்ளத் தவன்?"

என்று கூறி நக்கீரனார் தம் தொழிலையும், அவர் குலத்தையும் எள்ளி நகையாடினர் என்றும், அதுகேட்ட நக்கீரர்,

"சங்கறுப்பது எங்கள்குலம்; தம்பிராற்கு ஏதுகுலம்?
பங்கமறச் சொன்னால் பழுதாமே—சங்கை
அரிந்துண்டு வாழ்தும் அரனாரைப் போல
இரந்துண்டு வாழ்வ திலை."

என்ற எதிர்ப் பாட்டுப்பாடி பரமனைப் பழித்தார் என்றும் அப்புராணம் கூறுகிறது.

சீகாளத்திப் புராண நக்கீரச் சருக்கம், இறைவர்க்கும் நக்கீரர்க்கும் நிகழ்ந்த இவ் வாத வரலாற்றை விரித்துரைக்கும் முறை:—

புலவர்கள் தமிழ் ஆராய்ந்திருந்த காலத்தில், பாண்டியமன்னன், ஒருநாள், தன் பொன்மாடத்து மேனிலைமேல் தன் ஆருயிர்க் காதலியோடும் அமர்ந்திருந்தான்; அப்போது அங்கு வீசிய இளந்தென்றல் அரசமாதேவியின் குழல் மணத்தைக் கொண்டுவீச, அரசனும், இம்மணம், நம் மனைவியின் குழல் மணமே எனத் துணிந்தான். அவ்

வாறு துணிந்த அவன், தான் கருதிய இதனை அமைத்துச் செய்யுள் செய்ய வல்லார்க்கு ஆயிரம் பொன் அளிப்பேன் என்று கூறி, ஆயிரம் பொன்னையும் கிழியொன்றில் முடிந்து சங்க மண்டபத்தின்முன் தொங்கவிட்டான். புலவர் பலரும் பொன்னைப்பெற வேண்டிப் பாடல் பாடினர்; ஆனால், அவர் பாக்கள், தம் மனத்தின் கருத்தினைக் கொண்டிராமை கண்டு அரசன் அவற்றை மறுத்து விட்டான்; பொற்கிழி பெறுவாரை இன்றிக் கிடந்தது.

இந்நிலையில் பாண்டிநாட்டில் பெரும் பஞ்சம் வந்துற்றது. மதுரை வாழ்மக்கள் வாழ்விடம்தேடி வேறு நாடு செல்வாராயினர்; அப்போது ஆலவாய்ப்பெருமானைப் பூசித்து அருச்சிக்கும் தருமி எனும் அந்தணன், இனியும் இங்கிருப்பின் நாம் உயிர் பிழைத்தல் அரிது; ஆகவே, செல்வமலிந்த நாடு நோக்கிச் செல்வதே செய்ய வேண்டுவது எனத் துணிந்து, இறைவன்பால் விடைபெறச் சென்று, பெருமானே! பஞ்சத்தால் பிழைக்கும் வழியறியேன்; மேலும் இங்கு இருப்பின் சாவேன்; ஆதலின் இப்பஞ்சம் போம்வரை, பிறநாடு புகுந்து வாழ்ந்து பின்னர் வருவேன்; வந்து நின் திருவடி தொழுவேன்; வாழ்த்தி வழியனுப்புக," என்று வேண்டினன். அடிவணங்கும் அவன் துயர் உணர்ந்த ஆண்டவன், "பொருளின்றிப் பிறநாடு செல்லும் நின் எண்ணத்தை விட்டொழிக! மனத்தடக்கிய பொருள் தோன்றப் பாடவல்லார்க்கு வழுதி ஆயிரம்பொன் அளிக்கத் துணிந்துளான். அவன்பால் இச் செய்யுளைக் காட்டி அப்பொருள் பெற்று வாழ்க" என்று கூறி, "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் செய்யுள் அமைந்த ஏட்டினை அந்தணன் கைக் கொடுத்தார்.

தருமி, பாண்டியன் முன் சென்று பாட்டைப் பாடி நின்றான்; பாண்டியன், பாட்டின் பொருள் தன் உள்ளக் கருத்தினை உணர்த்துவதறிந்து மகிழ்ந்து "நன்று நன்று இச்செய்யுள்" எனப் பாராட்டி, புலவர்தம் பாராட்டையும் பெற்றுவருக என அனுப்பினன். தருமி, தமிழ்ப்

புலவர் முன் நின்று, பரமன் பாட்டைப் பாடிக்காட்டினார்; புலவர்கள் எல்லோரும் பாராட்டினர்; ஆனால், அவருள் ஒருவராய்த் தலைமைபெற்று நிற்கும் நக்கீரர், "இப் பா, குற்றமுடைத்து" என்று கூறி மறுத்தனர்; அந்தணன் "ஆண்டவன் பாட்டும் பிழையுடையதா?" என்று எண்ணித் துணுக்குற்றுக் கோயிற்குச் சென்று கடவுளிடத்தில் நடந்தது கூறினன். இறைவன் தமிழ்மன்றம் வந்து, "என் பாட்டில் பிழைகண்டார் யார்?" என்று கேட்க, நக்கீரர், "நான்" என்றார்; இறைவன் "குற்றம் யாது?" என்று வினவ, "பெண்கள் கூந்தலுக்குச் செயற்கை மணம் உண்டே அன்றி, இயற்கை மணம் இல்லை; ஆனால் நின் பாட்டு இயற்கை மணம் உண்டு என உரைக்கிறது; ஆதலின், நின்பாட்டு இல்லதுகூறல் என்னும் குற்றமுடைத்து" என்று கூறினார். இறைவன், "அரம்பையர் குழலுக்கும் மணம் செயற்கையில் உண்டாயதுதானோ?" என, நக்கீரர், "அதுவும் அத்தகையதே" என்றார். பின் இறைவன், "இறைவி கூந்தல் எத்தன்மைத்து?" என, நக்கீரர், "அதுவும் அத்தன்மைத்தே" என்று சிறிதும் தயங்காது கூறினார். உடனே இறைவன் தம் நுதல்விழியினைச் சிறிதே காட்டினார்; ஆனால் நக்கீரனாரோ, அதைக் கண்டும் சிறிதும் அஞ்சாது நின்று, "ஒருகண் அல்ல; உடலெலாம் கண்கொண்டு காட்டினும் அஞ்சேன்; நின் செய்யுள் குற்றம் குற்றமே" என்று கூறினார். சிவபெருமான் சினங் கொண்டு, "என் பாட்டிற்கும் பிழை கண்டு, எம் மனைவி கூந்தலுக்கும் குறை கூறினாய் ஆதலின், குட்டநோய் கொண்டு உலகெலாம் அலைக!" என்று சாபம் தந்தனர். இறைவன் கூறிய வன்சொற் கேட்ட நக்கீரர் உடல் நடுங்கி, "கருணையம் கடலே, அறிவிலேன் கூறிய பொய்யுரையினைப் பொறுத்தருளல் வேண்டும்" என்று பற்பல கூறிப் பலகால் வணங்கினார்; இறைவன், நக்கீரனார் தம் வழிபாடு கண்டு இரங்கி, "இந்நோய் கயிலை காணிற் றீரும்" என்று கூறி மறைந்தார். அரசனும் புலவரும் அவர் திருவிளையாடல் கண்டு வியந்து போற்றினர்; தருமி கிழி பெற்று மகிழ்ந்தான்.

ஆண்டு சில சென்றன; நக்கீரனார்க்குத் தொழுநோய் முதிர்ந்து பெருந்துயர் தந்தது; நக்கீரர், "இதனைக் கயிலை கண்டு ஒழிப்பேன்" எனத் துணிந்து புலவர்கள்பால் வருந்தி விடைபெற்று வையையின் வடகரை அடைந்தார்; அக்கரை நின்று மதுரைமாநகரையும், நகர் உறை இறைவனையும் அரசனையும் புலவர்களையும் நினைந்து, "அந்தோ! புலவர்கள் இனி என்னை மறந்து விடுவார்களோ? அரசன் இனி என்னை நினைப்பனோ? சங்கப்புலவர்கள் நாற்பத்தெழுவரே என உலகம் எண்ணிவிடுமோ?" என்றெல்லால் வாய்விட்டழுதார்.

பின்னர் மழைபெயல் மாறிய கழைதிரங்கு அத்தம் பல கடந்து வேங்கடம் கண்டு வடநாடு சென்று, ஏமகூடம், காசி, கேதாரம் முதலாம் வடநாட்டுச் சிவத்தலங்களைத் தரிசித்து, இமயம் நோக்கிச் செல்வாராயினர்; உள்ளங்கால் வெள்ளெலும்பு தோன்ற நடந்து செல்லும் நக்கீரர், வழியில் கடல்போற் பெரிய குளமொன்றினையும், அக்குளக்கரையில் பந்தர் இட்டாற்போற் றழைத்துப் படர்ந்த பெரிய ஆலினையும் கண்டார்; ஆங்குச் சென்று சிறிது இளைப்பாறினர்; அங்ஙனம் இருப்புழி, அம்மரத்து இலை ஒன்று உதிர்ந்து, ஒருபாதி நீரிலும், ஒருபாதி கரையிலுமாக வீழ்ந்து, பின்னர் அவ்விருபாதியும் முறையே மீனும், பறவையுமாய் உருக்கொண்டு, ஒன்றையொன்று கவ்வி ஈர்த்தன. நக்கீரர், அப்புதுமை கண்டு வியந்துநின்றார்; அந்நிலையில், ஒரு பெரும்பூதம் தோன்றி நக்கீரரைக் கவர்ந்து சென்று மலைக்குகை யொன்றினுள் அடைத்துத் தாழிட்டுச் சென்றது. அக்குகையினுள், அவருக்கு முன்னே அடைபட்டிருந்த தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது மக்களும் நக்கீரனாரை அணுகி, "ஐய! ஆயிரம் மக்களை ஒருங்கு சேர்த்தே உண்ணும் இயல்புடையது இப்பூதம்; நேற்றுவரை நாங்கள் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரே இருந்தோம்; இன்று நீ வந்தமையால் ஆயிரம் நிறைந்துவிட்டது; நீராடச் சென்ற பூதம் வந்து நம்மை எல்லாம் கொன்று விழுங்கும்;

இவ்விடர், இன்று நின்னால் வந்துற்றது'' என்று கூறி வருந்தினர்.

அவர் உரைத்தன கேட்ட நக்கீரர், அவர்க்குத் தம்மால் நேர இருக்கும் இடர்போக்க எண்ணி, முருகக் கடவுளின் திருவடித்தாமரைகளை உள்ளத்தே கொண்டு ஆறு எழுத்தோதி திருமுருகாற்றுப்படையினைப் பாடினர். ஆறுமுகக் கடவுள் அவர் முன் தோன்றி, ஆங்கிருந்தாரை அணுகத் தோன்றிய பூதத்தையும், கதையாலடித்துக் கொன்று அவர்கள் அனைவரையும் விடுவித்தார். பின்னர், முருகன், நக்கீரனார் ஆங்கு வந்த காரணத்தைக் கூறக் கேட்டு, "இறைவன், 'கயிலைகாண' எனப் பொதுவாகக் கூறினர். வடகயிலையினையே காணவேண்டும் என்னும் நியதி இல்லை; தென்கயிலையாம் காளத்தியைக் காணினும் இந் நோய் நீங்கும்'' என்று எண்ணி, நக்கீரரை நோக்கி, "இப் பொய்கையில் மூழ்கினால் கயிலையைக் காண்பை'' எனக்கூறி மறைந்தார். அவரும் அவர் ஆணைமேற்கொண்டு அக்குளத்தில் மூழ்கி எழுந்தார்; எழுந்து நோக்கியவழி, தாம் நிற்கும் இடம் தென் கயிலையாகிய காளத்தி நகராதல் அறிந்தார்; கயிலையும், காளத்தியும் ஒன்று என உணர்த்திய ஆறுமுகப்பெருமான் திருவடிகளைப் போற்றினர்; பின்னர்க் கயிலைநாதனையும், காளத்திநாதனையும் மாறி மாறி வணங்குவோராய்க் "கயிலைபாதி, காளத்திபாதி அந்தாதி'' பாடிப்பரவினர். தம் உடற்பிணி போக்கிய வாறே, உயிர்ப்பிணியும் போக்கி ஆட்கொள்ளுமாறு ஆண்டவனை வேண்டி, வேண்டியவாறே அவர் திருவடி நிழலில் கலந்தருளினர்.

திருப்பரங்கிரிப் புராண நக்கீரர் சருக்கம், நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாடிய சூழ்நிலை குறித்து, காளத்தி புராணத்தில் காணப்பட்ட முறையோடு மாறுபட்ட ஒரு கதையினைக் கூறுகிறது; அது கூறுமாறு:

நக்கீரர், நாள்தோறும் திருப்பரங்குன்றம் சென்று, ஆங்குள்ள சரவணப் பொய்கையில் நீராடிப் பூசை முடித்துச் செல்வது வழக்கம். நக்கீரர், கடவுளரில் சிவனையும்,

மக்களில் செழியனையு மன்றிப் பிறரொருவரையும் பாடுவ தில்லை என்னும் உறுதி உடையாராவர்; நக்கீரர் பாராட் டைப் பெறப் பெரிதும் விரும்பிய முருகன், அவர் உறுதிப் பாட்டினை உணர்வோனாதலின், அவரை அச்சுறுத்தித் தன் எண்ணத்தை ஈடேற்றிக் கொள்ளத் துணிந்தான். உடனே, தன் பால் உள்ள அண்டாபரணன் என்பானை விளித்து, "சரவணப் பொய்கையில் நீராடவரும் நக்கீரரை யாதேனும் குறை கற்பித்து நமது மலையிற் சிறை செய்க" என்று பணித்தனன்.

அவனும் சரவணப் பொய்கை அடைந்து அவர் வருகை நோக்கியிருந்தான்; நக்கீரனார் வழக்கம்போல் வந்து நீராடிக் கரை ஏறி அஞ்செழுத் தோதிக் கொண்டே ஆலமரத்தடியில் அமர்ந்தார்; அந்நிலையில் அண்டாபரணன் அவர் காணுமாறு, ஆலமரத்து இலை யொன்றைக் கிள்ளி இட்டான்; அது கரையிலொருபாதியும், நீரிலொருபாதியு மாக விழுந்தது; கரையில் விழுந்த ஒரு கூறு குருகாயும், நீரிற்படிந்த மற்றொருகூறு கயலாயும் வடிவுற்று ஒன்றை யொன்று ஈர்க்கத் தொடங்கின; அதனைக் கண்டார் நக்கீரர்; அவ்விரு உயிர்கள் மீதும் இரக்கம் கொண்டு அவற்றைப்பற்றி நகத்தினாற் பிரித்து விட்டார்; அவை யிரண்டும் அந்நிலையிலேயே வாய்திறந்து குருதி கக்கி உயிர் துறந்தன. உடனே, அண்டாபரணன் நக்கீரர் முன் தோன்றி, "முருகனுறையும் குன்றில் கொலை புரிந்தனை" எனக்குற்றம் சாட்டி அவரைக் கொண்டுபோய், மலைக்குகை ஒன்றினுள் அடைத்திட்டான்; நக்கீரனார், இவ் விடர்ப்பாடு முருகனைப் பாடாக் குறையால் வந்தது என்று அறிந்து, "உலகம்" என்று தொடங்கி, "கிழவன்" என முடித்துத் திருமுருகாற்றுப்படை பாடிப் பரவினார்; முருகன் அவர் கனவு நிலையிற்றோன்றி, "நம்மைக் கிழவன் என்று பாடினை, நாம் கிழவனாய் வரப் பல்லாண்டு ஆகும்" என்று கூறிச் சென்றான்; உடனே நக்கீரர்,

'குன்றம் எறிந்தாய்; குரைகடலில் சூர்தடிந்தாய்;
புன்தலைய பூதப் பொருபடையாய்;—என்றும்

இளையாய்; அழகியாய்; ஏறூர்ந்தான் ஏறே;
உளையாய்என் உள்ளத் துறை''

என்ற வெண்பாப் பாடி வணங்கினார். இப் பாட்டில் நக்கீரர், தம்மை "இளையாய்" என்று அழைத்திருப்பது கண்ட முருகன், அன்பு கூர்ந்து அவர் முன்தோன்றிச் சிறைவீடு செய்து மகிழ்ந்தான்.

இறைவன், "கொங்குதேர் வாழ்க்கை" என்ற செந்தமிழ்ப்பாடல் பாடித்தந்து தருமிக்குப் பொற்கிழி பெற்றுத் தந்த நிகழ்ச்சி,

"பொதியப் பொருப்பன் மதியக் கருத்திணைக்
கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறிப்
பொற்குவை தருமிக்கு அற்புடன் உதவி''

எனக் கல்லாடத்திலும்,

"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி
நற்கனகக் கிழிதருமிக்கு அருளினேன் காண்''

எனத் திருநாவுக்கரசர் தேவாரத்திலும் கூறப்பட்டுள்ளது.

இனி, இங்கு எடுத்துக் கூறிய கதைகள் ஒன்றோடொன்று மாறுபடும் முறைகளுள் சிலவற்றைக் காண்போம்:

திருவிளையாடற் புராணம், பாண்டியன் பெயர் வங்கிய சூடாமணி என்னும் சண்பகமாறன் என்று கூறுகிறது; காளத்திப் புராணம் பெயர் கூறாது, வழுதே பாண்டியன் என்று கூறுகிறது.

திருவிளையாடற் புராணமுடையார், பாண்டியன் இளவேனிற் காலத்து ஒருநாள் இளமரக்காவிற் புகுந்து மனைவியோடு வைகினான் என்றார்; காளத்திப் புராணமுடையார், பாண்டியன் தன் மாளிகை மேனிலைமேல் மனைவியோடிருந்தான் என்றார்.

திருவிளையாடற் புராணமுடையார், தாய் தந்தையரை இளம்பருவத்தே இழந்த தருமி மணம் கொளற்கு வேண்டும் பொருள் வேண்டி இறைவனை இரந்தான் என்றார்; காளத்திப் புராணமுடையார், பாண்டி நாட்டில் பஞ்சம் தோன்ற வறுமையால் வாடி வேறு நாடு போதற்கு எண்ணித் தன்பால் விடை கேட்க வந்த தருமிக்கு இறைவனே செய்யுள் இயற்றித் தந்தார் என்று கூறுகிறார்.

திருவிளையாடற் புராணமுடையார், செய்யுள் பெற்ற தருமி, அதை முதலில் புலவர்க்குக்காட்ட, அவர்கள் வியந்து அரசனுக்கு உரைப்ப, அவனும் மகிழ்ந்து தருமியைப், 'பொற்கிழி பெற்றுச்செல்க' எனப்பணிப்ப, அவ்வாறே அவனும் போந்து கிழியினை அறுக்கப் புகுங்கால் நக்கீரர் மறுத்தார் என்றார்; காளத்திப்புராணமுடையார் செய்யுளைப் பெற்ற தருமி, முதலில் பாண்டியனிடம் சென்று காட்ட அவனுவந்து, 'புலவர்கள் பாராட்டையும் பெற்றுவருக,' என்ன, அவ்வாறே அவனும் புலவர்க்குக் காட்டியவழி 'நக்கீரர் குற்றம் கண்டார்,' என்று கூறுகிறார்.

திருவிளையாடற் புராணமுடையார், இறைவன், "நீர் வழிபடும் ஞானப்பூங்கோதையர் கூந்தலும் அத்தகையதோ?" என்றார் என்று கூறுகிறார். காளத்திப் புராணமுடையார், வாளா, 'இறைவி கூந்தலும் அத்தகைத்தோ?' என்றார் என்று கூறுகிறார்.

திருவிளையாடற் புராணமுடையார், இறைவன் திறந்த நுதல்விழி வெப்பம் பொறாது நக்கீரனார் பொற்றாமரைக் குளத்தில் விழுந்தார் என்றார்; காளத்திப் புராணமுடையார், இறைவன் நக்கீரனாரைக், 'குட்ட நோய் கொள்க,' என, அதற்கு அஞ்சித் தொழுத நக்கீரனாரைக் 'கயிலை காணின் இது தீரும்,' என்று கூறி மறைந்தார் என்றார்.

காளத்திப் புராணம் உடையார், நக்கீரர், தம் நோய் தீரக் கயிலை நோக்கிச் சென்றபோது இடைவழியில் ஒரு குளக்கரையில் பூதத்தால் சிறைப்பட்டு, ஆங்குத் தமக்கு

முன் அடையுண்டிருந்தாரைக் காத்தற்குத் திருமுருகாற்றுப்படை பாடினார் என்றார்; பரங்கிரிப் புராணமுடையார், தன் பரங்குன்றில் நீராடித் தன்னை வணங்காது செல்லும் நக்கீரனாரின் பாராட்டைப்பெற வேண்டிய முருகன், பரங்குன்றில் சிறை செய்தவழி நக்கீரனார் பாடினார் திருமுருகாற்றுப்படை என்று கூறுகிறார்.

காளத்திப் புராணம், முருகன் மீது நக்கீரர் பாடிய பாட்டாகத் திருமுருகாற்றுப்படை ஒன்றை மட்டுமே குறிப்பிடுகிறது; பரங்கிரிப் புராணம், திருமுருகாற்றுப் படையோடு, "குன்ற மெறிந்தாய்" என்ற வெண் பாவையும் நக்கீரனார் பாடினார் என்று கூறுகிறது.

பரஞ்சோதியார் திருவிளையாடல், நக்கீரர் இயற்றிய வேறு பிரபந்தங்கள் என்ற வரிசையில், கயிலைபாதி காளத்திபாதியந்தாதி, கோபப்பிரசாதம், பெருந்தேவ பாணி, திருவெழு கூற்றிருக்கை என்னும் நான்கு நூலையும் சுட்டுகிறது; நம்பி திருவிளையாடல் அந்தாதியை மட்டும் சுட்டுகிறது.

நக்கீரர்முதலாம் புலவர்களின் பிறப்பு, அவர்கள் சங்கப் பலகைபெற்றது ஆகிய நிகழ்ச்சிகளைக் கூறும் போதும் அந்நூல்கள் பெரிதும் மாறுபடக் காண்கிறோம் பழைய திருவிளையாடல் எனப்படும் நம்பி திருவிளையாடலில் சங்கப்புலவர்களின் முற்பிறப்புக் குறித்து ஒன்றும் கூறப்படவில்லை; சங்கப்புலவர்களோடு பழைய புலவர் பலர் வாதம் புரிந்தனர்; அதனால் மனம் தளர்ந்தே புலவர்கள் பலகை வேண்டினர் என்னும் செய்தியும் நம்பி திருவிளையாடலில் காணப்படவில்லை; எழுத்துக்கள் நாமகளின் உடற்கூறுகளின் அம்சமாம் என்றும், அவ்வெழுத்துக்களே புலவர்களாய்ப் பிறந்தன என்றும் கூறப்படும் புலவர்களின் முற்பிறப்பு வரலாறு வடமொழி ஆலாஸ்ய மகாத்மியத்திலும், அதை முதல் நூலாகக் கொண்ட பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்திலும் மட்டுமே கூறப்பட்டுள்ளன.

இவ்வாறு நக்கீரர் வரலாறு உரைக்கும் நூல்களாகிய, பரஞ்சோதி திருவிளையாடல், நம்பி திருவிளையாடல், காளத்திப் புராணம், பரங்கிரிப் புராணம் ஆகிய நான்கும், ஒரு புராணம் கூறிய வரலாற்றை ஒரு புராணம் கூறாமையும் ஒரு புராணத்தில் ஒரு வகையாற் கூறப்பட்ட நிகழ்ச்சி ஒரு புராணத்தில் முற்றிலும் மாறுபடக் கூறப்பெறுவதும் ஆய இயல்புகள் உடையவாய்க் காணப்படுகின்றன; மேலும், அக் கதைகளின் நிகழ்ச்சிகளைக் காரண காரியம் கொண்டு ஆராயின், அவை அவ் வெல்லைக்குள் அடங்காது விரிந்து செல்லும் இயல்பினவாய்க் காணப்படுதலின், அவற்றின் உண்மை அன்மைகளை அறிதல் அருமையுடையதாம். ஆதலின், அவற்றை அறிவோர், தம் அறிவின் திறம் கொண்டு துணிந்து கொள்வார்களாக.

௬. நக்கீரர் இயற்றிய நூல்கள்

நக்கீரர் இயற்றிய பாக்களாக, எட்டுத்தொகை, பத்துப் பாட்டு நூல்களில் காணப்படுவன முப்பத்தேழு பாடல்களாம். நற்றிணையில் ஏழு; குறுந்தொகையில் எட்டு; அகநானூற்றில் பதினேழு; புறநானூற்றில் மூன்று; பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை ஆகிய இரண்டு.

இவையேயன்றி, பதினோராந் திருமுறையில் காணப்படும் (௧) கைலைபாதி காளத்திபாதி அந்தாதி, (௨) திருவீங்கோய்மலை எழுபது, (௩) திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, (௪) திருவெழு கூற்றிருக்கை, (௫) பெருந்தேவபாணி, (௬) கோபப்பிரசாதம், (௭) காரெட்டு, (௮) போற்றித் திருக்கலி வெண்பா, (௯) திருக்கண்ணப்ப தேவர் திருமறம் ஆகிய ஒன்பது நூல்களும் (௧௦) நக்கீரர் நாலடி நாற்பது என்ற நூலும் ஆகப் பத்து நூல்களையும் இயற்றியவர் நக்கீரரே என்று கூறுவர் சிலர்.

இவைகளுடன், திருமுருகாற்றுப்படைக்குப் பின் வரும் "குன்றமெறிந்தாய்" எனத் தொடங்கும் வெண்பா முதலாம் பத்து வெண்பாக்களையும், "தானே முழு துணர்ந்து" என்ற திருவள்ளுவமாலைச் செய்யுளையும், தன்குடி கூறிப் பழித்த பரமனுக்குப் பதில் கூறும் முகத்தால் பாடிய "சங்கறுப்பது எங்கள் குலம்" என்ற வெண்பாவையும், "ஆரியம் நன்று; தமிழ் தீது" என்றுரைத்த கொண்டான் என்னும் குயவனைச் சாவவும், வாழவும் பாடிய பாக்கள் எனப்படும் "முரணில் பொதியின்," "ஆரியம் நன்று" என்ற வெண்பாக்களையும் பாடிய வரும் நக்கீரரே என்பர். இச் செய்யுட்களே அல்லாமல், இறையனார் இயற்றிய "களவியல்" எனப்படும் அகப் பொருள் நூலுக்கும் நக்கீரனார் உரை எழுதினார் என்ப.

இவற்றுள் களவியல் உரை, நெடுநல்வாடை, திருமுருகாற்றுப்படை ஆகிய நூல்களைப்பற்றிப் பின்னர்த் தனித்தனித் தலைப்புகளின் கீழ் ஆராயப்படும். எட்டுத் தொகை நூல்களில் வரும் நக்கீரர் பாக்களைக் கொண்டே

அவர் வரலாறு, அவர் பாராட்டிய அரசர்கள், அவர் காலம் ஆகியவை ஆராயப்பட்டன. அன்றியும், அப் பாக்களை மீண்டும் எடுத்து ஆராய்தல் தேவை இல்லை ஆதலின், அவை பற்றிய ஆராய்ச்சியினையும் விடுத்து, நக்கீரர் இயற்றிய நூல்கள் எனப் பதினோராந் திருமுறையில் வருவனவற்றையும், பிற தனிப்பாடல்களையும் ஆராய்ந்து நோக்குவோமாக.

அவை பற்றிய ஆராய்ச்சியினை மேற்கொள்வதற்கு முன், அந் நூல்களைப்பற்றி அறிந்து கொள்ளுதல் நன்றாம்.

(க) **கைலைபாதி காளத்திபாதி யந்தாதி**:—கைலை நோக்கிச் சென்ற நக்கீரர், இடைவழியில் முருகன் அருள் பெற்று, அவர் ஆணையால் ஆண்டுள்ளதோர் பொய்கையில் மூழ்கி, காளத்தி நகரில் உள்ள பொன்முகரியில் எழுந்து, கைலையும் காளத்தியும் ஒன்றென உணர்ந்து அவ்விரு இடங்களிலும் அமர்ந்த பெருமானை மாறிமாறிப் பாடியது என இதன் வரலாறு கூறுவர். நூறு நேரிசை வெண்பாக் களைக் கொண்டது. இறுதிப் பாட்டின் இறுதிச் சீர், முதற் பாட்டின் முதற் சீராகக் கொண்டு வருவது.

(உ) **திருவீங்கோய்மலை எழுபது**:—சோழநாட்டில் உள்ள தேவாரம் பெற்ற திருப்பதிகளில் ஈங்கோய்மலை என்பதும் ஒன்று; ஈங்கோய்மலை சிவபிரான் விரும்பி உறையும் மலை—“ஈங்கோயே, பூமயிலி தாதை பொருப்பு” என்ற பொருளமைத்துப் பாடிய எழுபது நேரிசை வெண் பாக்களால் ஆகிய ஒரு நூல் இது. குறிஞ்சி நிலத்தின் இயல்புகளைக் குறைவறக் கூறுவது.

(ங) **திருவலஞ்சுழி மும்மணிக் கோவை**—சோழ நாட்டுத் தேவாரம் பெற்ற திருப்பதிகளில் திருவலஞ் சுழியும் ஒன்று. மூவேறு மணிகளை முறை முறையாகக் கோத்தாற்போல் ஆசிரியம், வெண்பா, கலித்துறை ஆகிய மூவகைப் பாக்களானும் முறைப்படப் பாடப்பட்ட பதினைந்து செய்யுட்களைக் கொண்டதொரு சிறு நூல். அவ்வூர் ஈசன் மீது அன்பு கொண்டு பாடிய பாடல்கள்.

(சு) திருவெழுகூற்றிருக்கை :—இஃது ஒரே செய்யுளைக் கொண்ட ஒரு நூல். இணைக்குறள் ஆசிரியப்பாவால் இயன்றது ; ஒருவகை எண்ணலங்காரம் தோன்றப் பாடப் பெற்ற சித்திரச் செய்யுள்.

(ரு) பெருந்தேவபாணி :—தேவபாணியாவது, தெய்வத்தை முன்னிலைப்படுத்திப் பரவும் ஒருவகைப் பாட்டு. இது தனக்குப் பயன் உண்டாகச் சிவபெருமானை முன்னிலைப்படுத்திப் பாடப்பெற்றுள்ளது.

(சூ) கோபப் பிரசாதம் :—இறைவன், மறக்கருணையும் அறக்கருணையும் ஆய இரு பெரும் குணம் உடையவன்; தீயோரை மறக்கருணை கொண்டு தண்டித்துத் திருத்தி நல்வழிப்படுத்தலும், நல்லோர்க்கு அறக்கருணை காட்டி நன்னிலையில் நிறுத்தலும் செய்வன். இம் முறையினை அடிப்படையாகக் கொண்டு, சிவபெருமான், மறக்கருணையும் அறக்கருணையும் கொண்டு செய்த அருட் செயல்களை அடுத்தடுத்துக் கூறும் ஒரு நூல்; அதனாலேயே "கோபப் (மறக்கருணை) பிரசாதம் (அறக்கருணை)" என்ற பெயர் பெற்றது. இணைக்குறளாசிரியப்பாவால் இயன்றது.

(எ) காரெட்டு :—இறைவன் திருவடிக்கண் அன்பு கொண்டார் இயற்கைக் காட்சிகளை எல்லாம் இறைவன் திருவுருவங்களாகவே கொள்வர் என்ற உண்மையினை உணர்த்துவது. கார் காலத்து முகிலை விளக்கிப் பாடும் எட்டு நேரிசை வெண்பாக்களால் ஆகிய ஒரு சிறு நூல். முகிலின் கருமை நிறமும், மின்னலும் சிவபெருமானின் நீலகண்டம், செஞ்சடை ஆகியவற்றை முறையே ஒத்துள்ளன என்ற பொருள்படப் பாடப்பெற்றுள்ளது.

(அ) போற்றித் திருக்கலி வெண்பா :—கலிவெண்பாவாலாகிப் போற்றி என்னும் வாய்பாடு கொண்டு இறைவனைப் போற்றிப் பரவும் ஒரு சைவ சமயச் சார்புடைய நூல்.

(கூ) திருக்கண்ணப்பதேவர் திருமறம் :—சைவ நாயன்மார்களுள் ஒருவராகிய கண்ணப்ப நாயனார் வரலாற்

றைச் சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல் என்னும் சுவைகள் தோன்றுமாறு கூறும் ஓர் அகவற்பாவால் ஆய தொரு நூல்.

இனி, இந்நூற்கள் நக்கீரரால் பாடப் பெற்றன அல்ல என்பதற்கு ஆதாரமாகக் கூறப்படுபவனவற்றையும், அவற்றை மறுத்து இவை அவராற் பாடப் பட்டனவே என்பதற்கு ஆதாரமாகக் கூறப்படுபவனவற்றையும் முறையே காணல் நன்று; இவை நக்கீரரால் பாடப் பட்டன அல்ல என்பார் கூறுவன :—

(அ.) இப் பாக்களில், கட்டளைக்கலித்துறைச் செய் யுட்கள் கலந்து வருகின்றன. கட்டளைக்கலித்துறை போன்ற பாவினங்களைச் சங்ககாலப் புலவர்கள் வழங்க வில்லை.

(ஆ.) அந்தாதி, மும்மணிக்கோவை போன்ற நூல் களைப் பழந்தமிழ்ப் புலவர்கள் மேற்கொண்டிலர்; இவை போன்ற நூல்களுக்குத் தொல்காப்பியத்தில் இலக்கணம் வகுக்கப்படவில்லை. நக்கீரர் இயற்றியன எனக் கூறப்படும் இந்நூல்கள், அந்தாதியாகவும் மும்மணிக் கோவையாகவும் உள்ளன.

(இ.) எட்டுத் தொகையில் வரும் நக்கீரர் பாடல்கள் அவர் பாடிய திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை ஆகிய சங்கப் பாடல்களுக்கும், இந்நூல்களுக்கும் உள்ள நடைவேற்றுமை மிக மிகப் பெரிது.

(ஈ.) அந்தாதி போன்ற இந்நூல்கள் பிற சமயங் களைப் பழிக்கும் பண்பின ; சங்க நூல் பாடிய நக்கீரர் சமய நெறியில் சமரச உணர்வுடையவர்.

(உ.) சங்கச் செய்யுட்கள் உரையாசிரியர்களால் மேற்கோட் செய்யுட்களாக எடுத்தாளப் பெற்றுள்ளதே போல் இந்நூல்கள் அவரால் ஆளப்பெறவில்லை.

இக்காரணங்கள் பொருந்துவன அல்ல என்பார் கூறு வனவற்றை இனிக் காண்போம் :—

(1) "சீவகசிந்தாமணிப் பாடல்களெல்லாம் கொச்சகமே" என்று நச்சினார்க்கினியர் கூறுவர். ஆகவே, திருவலஞ்சுழி மும்மணிக்கோவையில் காணப்படும் கட்டளைக்கலித்துறைச் செய்யுளைத் தொல்காப்பியர் கூறியவாறு கொச்சக ஒருபோகுயாப்பின் வேறுபட்டு வந்ததாகக் கோடல் அமையும். தொல்காப்பியனாரை ஒழிந்த ஆசிரியர் பதினொருவருட் சிலர் பாவினமும் கொண்டார் ஆகலின், அதனை இனமெனவே கொள்ளினும் அமையும். ஆகவே, பாவினம் என்ற காரணம் காட்டித் தள்ளிவிடுதல் பொருந்தாது.

(2) பிரபந்தங்களும், அந்தாதியும் ஆகியவற்றைப் பிற்காலத்தார் கொள்வதற்குத் தொல்காப்பியர் இடம் வைத்துச் சென்றார்; தொல்காப்பியர்க்கு அவ்வெண்ணம் உண்டு என்பதைப் பேராசிரியரும், நச்சினார்க்கினியரும், "விருந்து" முதலாய செய்யுட்களின் இலக்கணம் கூறும் பகுதிகளுக்குத் தாம் எழுதியுள்ள உரையால் விளக்குவர். ஐங்குறுநூற்றின் நெய்தல் எட்டாம் பத்தும், பதிற்றுப்பத்தின் நான்காம் பத்தும் அந்தாதியாக அமைந்திருத்தலின் பண்டைக்காலத்தில் அந்தாதி முறையில்லை எனல் பொருந்தாது.

(3) நடை வேறுபாடு உண்டு என்பதை மறுக்கவில்லை.

(4) இந்தக் காரணத்தையும் மறுக்கவில்லை. மாறாக இவ்விரு காரணங்களையும் உறுதி செய்வதற்கான ஆதாரங்களை அள்ளித் தந்துள்ளனர். "இவற்றிடை உள்ள நடை வேற்றுமை இறப்பவும் பெரிதே. சங்க நூல்களில் வடசொற்கள் எங்கேனும் ஒன்றிரண்டு அருகியே வழங்கும். இவற்றில் அவ்வாறின்றி வடசொற்கள் மிகப்பல விரவியுள்ளன. சங்கச் செய்யுட்களில் அளபெடைகளும், 'செய்பு' என்னும் வாய்பாட்டுச் சொற்களும் மிக்குள்ளன. திருமுருகாற்றுப்படையின்கண் மட்டும் நாற்பது அளபெடைச் சொற்களும், ஒருபது 'செய்பு' என்னும் வாய்பாட்டு எச்சச் சொற்களும் வந்துள்ளன. இவ்வொன்பது

நூல்களிலும் ஓரளபெடையாதல், ஒரு 'செய்பு' என்னும் எச்சமாதல் கண்டிலம். இன்னும், அவற்றிடை கிறு கின்று ஆநின்று என்னும் இடைநிலைகள் வழங்கவில்லை. இவற்றிடை ஒன்பது இன்னிடைநிலைச் சொற்கள் வந்துள்ளன; இங்ஙனம் பல்லாற்றானும் வேறுபட்ட நடையினையுடைய நூல்களைக் கடைச்சங்கத்திருந்த நக்கீரனாரே இயற்றினாரானவரோ என ஐயுறவுண்டாதல் இயல்பே" என்று அவர்களே கூறியுள்ளனர்.

(5) இக்காரணத்தையும் மறுக்காமல், துணை செய்கின்றனர்: "உரையாளர்கள் எடுத்தாளாமையினாற் போந்த இழுக்கொன்று மில்லையாயினும், இவை சங்கப்புலவர் வாக்கென்பதில் அவர்கட்கும் கருத்தில்லை போலும் எனக் கொள்ளப் படுமன்றே?" என அவர்கள் எழுதுவதும் காண்க.

இனி, இந்நூல்களை இயற்றியவர் நக்கீரனாரே என்பதற்கு ஆதாரமாகக் கூறப்படுவன :—

(1) இவற்றுட் சில நூல்களை விதந்து, அவை சங்கப் புலவராகிய நக்கீரனார் பாடியன என்று புராணங்கள் கூறுகின்றன; புராணக்கதைகட்கு இந்நூல்கள் பொருத்தமுடையனவாகவுமுள்ளன; புராணங்கள் இவற்றை ஆதரித்தல் போன்றே இவற்றிலுள்ள சில பாகங்கள் புராணக்கதைகளை ஆதரித்து நிற்கின்றன.

(2) தருமிக்குப் பொற்கிழி யளித்ததனைத் தேவாரமும் கல்லாடமும் சுட்டிக் கூறுகின்றன.

(3) நம்பியாண்டார் நம்பிகள் இப் பிரபந்தங்களைப் பதினொராந் திருமுறையிற் றொகுத்துள்ளார்.

இனி, இவ்விரு திறத்தார் வாதங்களையும் நுட்பநோக்கி உண்மை காண்பதை நாம் கடமையாகக் கொள்வோமாக.

இப் பாடல்கள், நக்கீரர் பாடியன அல்ல என்பதற்கு ஆதாரமாகக் கூறப்பட்ட காரணங்கள் ஐந்துள், நடை வேற்றுமை உண்டு, பிற சமயப்பழித்தல் காணப்படுகிறது.

உரையாசிரியர்களால் ஆளப்படவில்லை என்பனவே சிறப்புடையன; அவற்றை இப் பாடல்கள் நக்கீரர் பாடியனவே என்பதை ஆதரிக்க முன் வந்தோர் மறுக்கவில்லை; மாறாக ஒப்புக் கொண்டுள்ளனர்.

பாவினமும், பிரபந்தங்களும் பிற்கால நூல்கள் என்ற குற்றச்சாட்டினை மறுப்போர், அவற்றிற்கான ஆதாரங்களை வலிந்து வருவித்துள்ளனர். தொல்காப்பியத்தில் பாவினம் கூறப்படவில்லை என்பதையும், பிரபந்தங்களுக்குத் தொல்காப்பியர் இலக்கணம் கூறிற்றிலர் என்பதையும் அவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

இவற்றால், இவை நக்கீரனார் பாடின அல்ல என்பதற்கான ஆதாரங்களை மறுக்கக் கூறிய காரணங்கள் போதியனவும் அல்ல, பொருத்தமானவையும் அல்ல என்பது உறுதி செய்யப்படும்.

இந் நூல்கள் நக்கீரரால் இயற்றப்பட்டனவே என்பதை ஆதரிக்கக் கூடிய காரணங்களுள் ஒன்று, பாக்களைப் புராணங்கள் சுட்டிக் கூறுகின்றன; புராணக்கதைகளைப் பாக்கள் குறிப்பிடுகின்றன என்பது; புராணங்களின் வன்மை மென்மைகளே இன்னும் உறுதி செய்யப்படவில்லை; இவ்வாறு உறுதி செய்யப் பெறாத ஒன்றைக் கொண்டு, உறுதி செய்யப்படாத பிறிதொன்றை உறுதி செய்ய முற்படுதல், குருடனுக்குக் குருடன் கோல் கொடுத்த கதை போலாம்.

தேவார ஆசிரியர்கள், சங்க காலத்திற்கு எத்தனையோ நூற்றாண்டுகள் கழித்து வந்தவராவர்; அவர்கள் சங்க கால நிகழ்ச்சிகளை நேரில் அறிந்து கூறுபவர் அல்லர்; சொல்வழி வந்த நிகழ்ச்சிகளைக் கேட்டவாறு பாடுபவர்; ஆகவே, அவர்கள் கூறினார்கள் என்பதினாலேயே அவை உண்மையாகி விடும் என்று கொள்ளுதல் கூடாது; தேவார ஆசிரியரும் நக்கீரர் வாழ்க்கையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைத் தான் குறிப்பிட்டுள்ளாரே ஒழிய, நக்கீரனார் பாடினார் இப் பாக்களை என்று கூறினாரல்லர்.

இந் நூல்களை நம்பியாண்டார் நம்பிகள் பதினோராந் திருமுறையில் கோத்தார் என்ப. நம்பியாண்டார் நம்பிகள், தேவார ஆசிரியருக்கும் பிற்பட்டவர். தேவார ஆசிரியர்களின் சான்றே ஒப்புக் கொள்ளப் பெறவில்லை எனின், நம்பியாண்டார் நம்பியின் செயல் அந் நூல்கள் நக்கீரர் இயற்றியன என்பதை உறுதி செய்து விடாது. மேலும், ஆதரவாளர்கள், "நம்பியாண்டார் நம்பிகள் காலத்தின் பின்னரும் சில பிரபந்தங்கள் பதினோராந் திருமுறையிற் சேர்க்கப் பட்டுள்ளன என்பதற்கு ஆதார மிருக்கிறது," என்று கூறுவதும் ஈண்டு நோக்கற் பாலது.

இவ்வாறு, இந் நூல்கள் நக்கீரனாரால் இயற்றப் பட்டன அல்ல என்பதற்குக் காட்டப் பெற்ற காரணங்கள் நன்கு மறுக்கப் படவில்லை; மாறாக அரண் செய்யப் பட்டுள்ளன; அவை அவர் பாடியனவே என்பதற்குக் காட்டப் பெற்ற காரணங்கள் அத்துணை வலியுடையன அல்ல என்பன விளங்குதல் காண்க.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, "இவற்றின்கண் (நக்கீரர் பாடியன எனக் கூறப்படும் நூலின் கண்) 'கற்கொண்டெறிந்த சாக்கியன் அன்பும்,' 'சீர்மலி சிலந்திக்கு இன்னரசளித்'ததும் கூறப்படுதலை நோக்குழி, இவை கடைச்சங்க மழிந்து ஒன்றிரண்டு நூற்றாண்டுகளானபின் இயற்றப் பெற்றவையாகு மெனக் கருதுதலும் கூடும். அவ்வாறாயின், இவையிற்றை ஆக்கியோர் நக்கீரர் என்னும் பெயருடைய வேறுபுலவர் எனக்கொள்ள வேண்டும். அங்ஙனம் கொள்ளின், கதைப்பொருத்தம் பலவும் சிதைந்து சுவைகுன்றுமாகலின் சங்கப்புலவராகிய நக்கீரனாரே இவற்றை ஆக்கியோர் என யாம் கொள்ளுதும்" என ஆதரிப்போர் கூறுவது, அவை நக்கீரரால் இயற்றப் பட்டன அல்ல என்பதைக் குன்றின்மேல் விளக்கென உறுதி செய்தல் காண்க.

இவ்வாறு இந் நூல்கள், நக்கீரனாரால் இயற்றப்பட்டன அல்ல என்பதை உறுதி செய்யப்படுவது போன்றே, பிற

தனிப்பாடல்களும் அவர் இயற்றியன அல்ல என்பது உறுதியாம். அதற்கு ஆதாரமாக, மேற்கூறிய நூல்களை நக்கீரனாரே இயற்றினார் என ஏற்றுக்கொள்ளும் அறிஞர் ஒருவர் கூறுவனவற்றையே எடுத்துக்காட்டுகிறேன்: "இனி, 'குன்றம் எறிந்ததுவும்' என்னும் செய்யுளும், 'குன்றமெறிந்தாய்' என்னும் செய்யுளுமொழிய வேறு எட்டுச் செய்யுட்கள் திருமுருகாற்றுப்படைச் சுவடிகளின் கீழ் எழுதப்பட்டிருக்கின்றன. மற்றிவையும், ஆசிரியர் நக்கீரனாரியற்றியனகொல் என்று ஆராயப் புகுந்தவழி, அச்செய்யுட்களின் 'வீரவேல்,' 'தாரைவேல்,' 'தீரவேல்' என்றற்றொடக்கத்து விரவியற் சொற்றொடர்களும், 'நம்பு கிலேன்' எனும் தொன்னெறிப்பட்டியலாச் சொல் லமைப்பும் 'கோலப்பா,' 'வேலப்பா' முதலிய தொன்று தொட்டு நடவா வழக்கும் பயிலக் காண்டலானும்....அவை பிற்காலத்தாரால் நூற்சிறப்பாக எழுதப்பட்டனவா மென்பது இனிது விளங்கும்."

"காய்தல் உவத்தல் அகற்றி ஆய்தல் அறிவுடையார் கண்ணதே" என்ப; அத்தகைய ஆய்வாளர் உலகத்து அரியர்; அந்நெறி நின்று நோக்குவார்க்கு, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களில் காணப்படுவன ஒழிய உள்ள ஏனைய பாடல்கள் எல்லாம் நக்கீரனார் இயற்றியன அல்ல என்பது புலனாம். இவ்வாறு கூறுவதால், அப் பாக்களைக் குறைகூறுவது நோக்கமல்ல என்றும் உணர்க.

அகத்திணைப் பொருள் உரைக்கும் அறுபது சூத்திரங்களைக் கொண்ட ஒரு நூலை இறைவன் இயற்றித் தந்தான் எனவும், அது இறையனார் அகப்பொருள் என்னும் பெயருடையது எனவும், கூறுவர்; தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு உரைகண்ட பேராசிரியரும், நச்சினார்க்கினியரும், இந்நூலைக் "களவியல்" என்றும் "இறையனார் களவியல்" என்றும் பெயரிட்டு அழைப்பர். இறையனார் இயற்றிய களவியலுக்குக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரைகண்டார் என்றும் அறிஞர்கள் கூறுவர். களவியலுக்கு உரைகண்டவர் கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்பதை, "மதுரை ஆலவாயிற் பெருமானடிகளாற் செய்யப்பட்ட நூற்கு நக்கீரனால் உரைகண்டு, குமாரசுவாமியாற் கேட்கப்பட்டது" என்ற இந்நூல் உரைப்பாயிரமும், "இக் கருத்தானே நக்கீரரும் ஐந்திணையுள்ளும் களவு நிகழும் என்று கொண்டவாறு உணர்க" என்ற நச்சினார்க்கினியர் உரையும், "கடைச் சங்கத்தாருட் களவியற் பொருள் கண்ட கணக்காயனார் மகனார் நக்கீரனார்" என்ற பேராசிரியர் உரையும், "கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரைத்த இறையனார் பொருளுரை" என்ற அடியார்க்குநல்லார் உரையும் உறுதி செய்கின்றன.

களவியல் உரை, கிடைத்துள்ள உரைகளுள் தொன்மை வாய்ந்தது; தமிழ் நூல்களுக்கு உரை கண்ட ஆசிரியர்களாகிய பேராசிரியர், நச்சினார்க்கினியர், அடியார்க்குநல்லார் ஆகியோரால் பாராட்டப்பெறும் பெருமை வாய்ந்தது; தமிழ்மொழி மிகத் தொன்மையான காலத்திலேயே சிறந்த உரைநடையினைப் பெற்றிருந்தது என்ற பெருமையினைத் தருவது; முத்தமிழ் போற்றிய முச்சங்கங்களின் வரலாற்றை விளங்க உரைத்த முதல் நூல் இக் களவியல் உரையே.

களவியலும் அதன் உரையும் தோன்றிய முறை குறித்துக் கதைகள் பல வழங்குகின்றன; கதைகளைக்

கூறும் நூல்களில் களவியல் உரையும், நம்பி திருவிளையாடல், திருவாலவாயுடையார் திருவிளையாடல் என அழைக்கப்பெறும் பழைய திருவிளையாடற் புராணமும் சிறந்தன; அவற்றுள் களவியல் உரை கூறுவன :

"பாண்டியனாடு பன்னிருயாண்டு வற்கடம் சென்றது; செல்லவே, பசி கடுகுதலும், அரசன் சிட்டரை எல்லாம் கூவி, 'வம்மின்; யான் உங்களைப் புறந்தரகில்லேன்; என் தேயம் பெரிதும் வருந்துகின்றது; நீயிர் நுமக்கறிந்தவாறு புக்கும், நாடு நாடாயின ஞான்று என்னை உள்ளிவம்மின்' என்றான் என, அரசனை விடுத்து எல்லாரும் போயின பின்றைக் கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது; கழிந்த பின்னர், நாடு மலிய மழைபெய்தது; பெய்தபின் அரசன், 'இனி, நாடு நாடாயிற்றாகலின், நூல் வல்லாரைக் கொணர்க' என்று எல்லாப்பக்கமும் போக்க, எழுத்ததிகாரமும் பொருளதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலேமென்று வந்தார்; வர, அரசனும் புடைபடக் கவன்று, 'என்னை? எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமேயெனின் இவை பெற்றும் பெற்றிலேம்' எனச் சொல்லாநிற்ப, மதுரை ஆலவாயின் அழுனிறக்கடவுள் சிந்திப்பான்: 'என்னை! பாவம்! அரசர்க்குக் கவற்சி பெரிதாயிற்று; அது தானும் ஞானத்திடையதாகலான், யாம் அதனைத் தீர்க்கற்பாலம்' என்று இவ்வறுபது சூத்திரத்தையுஞ் செய்து, மூன்று செப்பிதழகத்து எழுதிப் பீடத்தின் கீழிட்டான்.

"இட்ட பிற்றை ஞான்று, தேவர்குலம் வழிபடுவான், தேவகோட்டத்தை எங்குந் துடைத்து, நீர் தெளித்துப் பூவிட்டுப் பீடத்தின்கீழ் என்றும் அலகிடான், அன்று தெய்வத் தவக்குறிப்பினான் அலகிடுவனென்று உள்ளங் குளிர அலகிட்டான்; இட்டார்க்கு அலகினோடும் இதழ் போந்தன; போதரக் கொண்டுபோந்து நோக்கினாற்கு வாய்ப்புடைத் தாயிற்றோர் பொருளதிகாரமாய்க் காட்

டிற்று; காட்ட, பிராமணன் சிந்திப்பான்; 'அரசன் பொருளதிகாரம் இன்மையிற் கவல்கின்றானென்பது கேட்டுச் செல்லாநின்றதுணர்ந்து நம்பெருமான் அருளிச்செய்தானாகும்' என்று, தன் அகம் புகுதாதே, கோயிற்றலைக் கடைச்சென்று நின்று, கடைகாப்பார்க்குணர்த்த, கடைகாப்பார் அரசற்குணர்த்த, அரசன் 'புகுதுக' என்று பிராமணனைக்கூவ, சென்று புக்குக் காட்ட, ஏற்றுக்கொண்டு நோக்கி 'பொருளதிகாரம், இதுநம்பெருமான் நமதிடுக்கண் கண்டு அருளிச் செய்தானாகற்பாலது' என்று அத்திசை நோக்கித் தொழுதுகொண்டு நின்று, சங்கத்தாரைக் கூவுவித்து, 'நம்பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச் செய்த பொருளதிகாரம்; இதனைக் கொண்டு போய்ப் பொருள் காண்மின்' என, அவர்கள், அதனைக்கொண்டு போந்து, கனமாப்பலகை ஏறியிருந்தாராய்வுழி, எல்லாரும் தாம்தாம் உரைத்த உரையே நல்லதென்று சிலநாளெல்லாஞ் சென்றன; செல்ல, நாம் இங்ஙனம் எத்துணை உரைப்பினும் ஒருதலைப்படாது; நாம் அரசனுழைச் சென்று, நமக்கோர் காரணிகனைத் தரல் வேண்டுமென்று கொண்டு போந்து அவனாற் பொருளெனப்பட்டது பொருளாய், அன்றெனப் பட்டது அன்றாய் ஒழியக் காண்டுமென, எல்லாரும் ஒருப்பட்டு அரசனுழைச் சென்றார்; அரசனும், எதிர்சென்று, 'என்னை? நூலுக்குப் பொருள் கண்டீரோ?' என, 'அஃது காணுமாறு எமக்கோர் காரணிகனைத் தரல் வேண்டும்' என, 'போமின், நுமக்கோர் காரணிகனை எங்ஙனம் நாடுவேன்? நீயிர் நாற்பத்தொன்பதின்மராயிற்று; நுமக்கு நிகராவர் ஒருவர் இம்மையின்றே' என்று அரசன் சொல்லப் போந்து கனமாப் பலகையின் ஏறியிருந்து, 'அரசனும் இது சொல்லினான்; காரணிகனைப் பெறுமாறு என்னைகொல்?' என்று சிந்திப்புழி, 'சூத்திரம் செய்தான் ஆலவாயில் அவிர்சடைக் கடவுளன்றே! அவனையே காரணிகனைத் தரல் வேண்டுமென்று சென்று வரங்கிடத்தும்' என்று வரங்கிடப்ப, 'இடையாமத்து, இவ்வூர் உப்பூரிகுடி கிழார் மகனாவான் உருத்திரசன்மனென்பான், பைங்கண்ணன், புன்மயிரன், ஐயாட்

டைப்பிராயத்தான், ஒரு மூங்கைப் பிள்ளை உளன்; அவனை அன்னவன் என்று இகழாது, கொண்டு போந்து ஆசன மேலிரீஇக் கீழிருந்து சூத்திரப்பொருள் உரைத்தால், கண்ணீர் வார்த்து மெய்ம்மயிர் சிலிர்க்கும் மெய்யாயின உரை கேட்டவிடத்து; மெய்யல்லா உரை கேட்டவிடத்து வாளா இருக்கும்; அவன் குமார தெய்வம்; அங்கோர் சாபத்தினாற் றோன்றினன்' என முக்காலிசைத்த குரல் எல்லோர்க்கும் உடன்பாடாயிற்றாக, எழுந்திருந்து தேவர் குலத்தை வலங்கொண்டு போந்து, உப்பூரிகுடி கிழாருழைச் சங்கமெல்லாம் சென்று, இவ்வார்த்தை யெல்லாம் சொல்லி, ஐயனுவான் உருத்திரசன்மனைத் தரல் வேண்டு மென்று வேண்டி, கொடு போந்து, வெளியது உடீஇ, வெண்பூச்சூட்டி, வெண்சாந்தணிந்து, கனமாப் பலகை யேற்றிக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைப்ப எல்லாரும் முறையே உரைக்கக் கேட்டு வாளா இருந்து, மதுரை மருதனிளநாகனார் உரைத்தவிடத்து ஒரோவிடத்துக் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் நிறுத்தி, பின்னர்க் கணக்காயனார் மகனார் நக்கீரர் உரைத்தவிடத்துப் பதந்தொறுங் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருந்தான்; இருப்ப, ஆர்ப்பெடுத்து மெய்யுரை பெற்றாம் இந்நூற் கென்றார்."

*   *   *   *

"இனி, உரை நடந்து வந்தவாறு சொல்லுதும்"

"மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார், தம் மகனார் கீரங்கொற்றனார்க் குரைத்தார்; அவர், தேனூர் கிழார்க் குரைத்தார்; அவர், படியங் கொற்றனார்க் குரைத்தார்; அவர், செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனார்க் குரைத்தார்; அவர், மணலூராசிரியர் புளியங்காய்ப் பெருஞ் சேந்தனார்க்குரைத்தார்; அவர், செல்லூராசிரியர் ஆண்டைப் பெருங்குமாரனார்க்குரைத்தார்; அவர், திருக் குன்றத்தாசிரியர்க்குரைத்தார்; அவர், மாதவளனார், இள நாகனார்க்குரைத்தார்; அவர் முசிறியாசிரியர் நீலகண்டனார்க்குரைத்தார்; இங்ஙனம் வருகின்றது உரை."

பழைய திருவிளையாடல், "புலவர்கள், தாங்கள் அவ்வப்போது பாடிவிட்டுச்சென்ற பாடல்கள் பலவாய்ப் பெருகியதைக் கண்டு அவற்றை அவற்றின் தகுதிக்கேற்ப வரிசைப்படுத்த விரும்பினார்; ஆனால், அதை அவர்களால் ஆற்ற முடியவில்லை; தங்கள் ஆற்றாமை கண்டு மனம் நொந்து இருந்த புலவர்கள் முன்னே ஆலவாய்ப்பெருமான் ஒரு புலவராய் வந்து அப் பாடல்களை ஆராய்ந்து ஒழுங்கு படுத்திக் கொடுத்தார்; புலவர்கள், 'புதுப்புலவர் சொக்கர் போலும் எனக் கருதிப் போற்றி வணங்கினர்; அவரும், அவர்களுடன் ஒருவராய் இருந்து தமிழாராய்ந்து வாழ்வாராயினர்.

"ஒருநாள், புலவர்கள் பொருள் இலக்கணப் பொருளறியமாட்டாது மயங்கியிருந்தாராக, புதுப்புலவர் 'அன்பின் ஐந்திணை' என்று தொடங்கி அறுபது சூத்திரங்களைக் கொண்ட அகப்பொருள் நூலை ஆக்கி அவர்களிடம் தந்தார்; புலவர்களெல்லாம், அப் பொருள்இலக்கணத்தோடு பொருந்த நிற்கும் தத்தம் செய்யுட்களைக் கண்டு, அவர் நூலைப் போற்றிப்புகழ்வாராக, நக்கீரர் பொறாமை உடையராய், "என்பாக்களுள் ஐந்தாம் பாட்டுக்கு ஒப்பான பாடல், உங்கள் பாடல்களுள் ஒன்றுமே இல்லை" என்று கூறுவாராயினர்; அது கேட்ட புதுப்புலவர், "பேரவைக்கண்நின்று இவ்வாறு தன்னை வியந்து கூறும் ஒருவன் பெரும்புலவனாகான்" என்றுகூறி நக்கீரர் செருக்கையும் அழிக்க எண்ணி அரும்பொருள் அமைந்த அழகிய பாட்டொன்றைப் பாடிக்காட்டிப் "புலவர்களே! இதற்குப் பொருள் கூறுங்கள்" எனக்கூறி நின்றார்; புலவர்கள் எவரும் ஏதும் கூறினாரல்லர்; ஆனால் நக்கீரர் மட்டும் "பாட்டுப் பிழையுடையது" என்றார். இறைவன், "இவன் பொறாமை உடையவன்; ஆதலின், இவன் குற்றம் என்றால் என் கவி குற்றமுடையதாகிவிடாது; நீங்கள் யாரேனும் கூறுங்கள். என் கவி குற்றமுடையதா?" என்று கேட்டு நின்றார். புலவர்கள் வாய் திறவாது வாளா இருந்தனர். அந்நிலையில், "உங்கள் வழக்கைத்தீர்க்க இறைவனே புதுப்

புலவனும் உங்கள்முன் வந்துளான்; ஆதலின், அறியாமை ஒழிய அவனை வணங்குங்கள்,'' என்ற குரல் கேட்டது; அதனைக் கேட்ட புலவர்கள், அவரை வணங்குவதற்கு முன்னரே, நக்கீரர் வணங்கிப் பிழை பொறுக்க வேண்டினார்; இறைவன், தன் பெயர் மதுரைப் பேராலவாயர் என்றுகூறி மறைந்தார். அவர் செய்த பொருள் நூல் 'இறையனார் பொருள்' என்னும் பெயரில் வழங்கலாயிற்று.

"இறைவன் செய்த களவியலுக்கு உரை எழுதி முடித்த புலவர்கள், தத்தம் உரையே சாலச் சிறந்தது என வாதிடலாயினர்; வாதத்தில் முடிவு காணமாட்டா அவர்கள் தங்கள் உரைகளின் தகுதி தகுதியின்மைகளை அறிந்து கூறுமாறு இறைவன் திருமுன் நின்று முறையிட்டனர்; ஆலவாயின் அவிர்சடைப்பெருமான் புலவர்களை நோக்கி, "இவ்வூர் உப்பூரிகுடி கிழார் மகன், ஊமை உருத்திர சன்மன்முன் உங்கள் உரைகளைக் கூறி அவன் கூறும் முடிவினை ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று கூறினார்; புலவர்கள் ஊமை உரைவளங்காண்பது எங்ஙனம்? என்று உளம் கவன்றனர். அவர் கவலையறிந்த இறைவன், "உங்கள் உரைகளை அவன்முன் படியுங்கள்; எவர் உரை கேட்டுக் கண்ணீர் உகுப்பனோ அவர் உரையே சிறந்ததாம் எனக் கொள்ளுங்கள்'' என்று கூறினார். புலவர்களும் அவ்வாறே. ஊமைமகனை மன்றம் கொணர்ந்து மண்டபத்தே இருத்தி, மலரிட்டு வாழ்த்தி வணங்கித் தத்தம் உரைகளை உரைத்தனர்; ஊமை, நக்கீரர் கபிலர் பரணர் ஆய மூவர் உரைகளைக் கேட்டபோது கண்ணீரும் களித்தலும் உடையனாதல் கண்ட புலவர்கள், அம்மூவர் உரைகளையும் சிறந்தனவாக் கொண்டுமதித்தனர்.'' என்று கூறுகிறது.

களவியல் உரை தோன்றிய வரலாறு குறித்துக் கூறப்படும் இவ்விரு கதைகளையும் நோக்கினால், அவற்றுட் கூறப்படும் பல நிகழ்ச்சிகள் முரண்படுவனவாதல் விளங்கும். களவியல்உரை, பொருள்இலக்கணம் பெற

மாட்டாமல் வருந்திய அரசன் கவலையைப் போக்க இறைவன் களவியல் நூல் செய்தளித்தான் என்று கூறுகிறது; திருவிளையாடல், பொருள் இலக்கணம் அறிய மாட்டாது மயங்கிய புலவர்களுக்காகப் பொருள் நூல் செய்தளித்தான் என்று கூறுகிறது; களவியல் இயற்றிய பொருள் இலக்கணத்தை இறைவன் செப்பேட்டில் எழுதிக் கோயிற் பீடத்தின் கீழ் வைத்தான் என்று கூறுகிறது; திருவிளையாடல், புலவர் மாறுபாடு போக்கப் புலவர் உருக் கொண்டு வந்த இறைவன், பொருள் இலக்கணத்தை ஆக்கிப் புலவர்களிடையே கொடுத்தான் என்று கூறுகிறது. களவியல் ஊமை உருத்திரசன்மன், மதுரை மருதன் இள நாகனார் இயற்றிய உரை கேட்டவழி ஒரோவழிக் கண்ணீர் விட்டான்; நக்கீரர் இயற்றிய உரையை உரைத்தவிடத்துப் பதந்தொறும் கண்ணீர் விட்டான்; ஆகவே, புலவர்கள் நக்கீரர் உரையினையே உண்மை உரை எனக் கொண்டனர் எனக் கூறுகிறது; திருவிளையாடல், உருத்திரசன்மன், நக்கீரர் கபிலர் பரணர் ஆகிய மூவர் உரை கேட்டுக் கண்ணீர் சொரிந்தான்; ஆகவே புலவர்கள் அம் மூவர் உரையினையும் மெய்யுரை எனக்கொண்டு போற்றினர் என்கிறது.

களவியலுக்கு உரை கண்டவர் நக்கீரர் என்பதை ஏற்றுக் கொள்வதற்குத் தடையாய் விளங்கும் சில செய்திகள் அக் களவியல் உரையில் காணப்படுகின்றன. நக்கீரர் சங்க காலப் புலவர்; சங்க காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு என்பர்; ஆகவே, நக்கீரர் இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராவர். களவியல் உரையில் மேற்கோள்களாக வரும் செய்யுட்கள், அரிகேசரி, அரிகேசரி பராங்குசன், வரோதயன் என்ற பெயர்களைக் கொண்ட பாண்டிய அரசன் ஒருவனையும், அவன், வல்லம், கோட்டாறு, நெல்வேலி, பாழி, விழிஞம் முதலிய இடங்களில் பெற்ற வெற்றிகளையும் குறிப்பிடுகின்றன; சங்க காலப் பாண்டியர் பெயர்கள் எல்லாம், அறிவுடை நம்பி, நன்மாறன், மாறன் வழுதி, பெரும்பெயர் வழுதி, முதுகுடுமிப் பெருவழுதி,

நெடுஞ்செழியன் எனக் காணப்படக், களவியல் உரை குறிக்கும் பாண்டியன் பெயர், வடமொழி வாசகங்களாய் விளங்குகின்றன; இத்தகைய வடமொழிப் பெயர்கள், கி. பி. 600-க்குப் பிற்பட்ட காலத்தில் நாடாண்ட பாண்டியர்களுக்கே வழங்கப்பட்டுள்ளன.

களவியல் உரை குறிக்கும் விழிஞப் போர், கி. பி. 765-815-இல் ஆட்சி புரிந்த பராந்தக நெடுஞ்சடையன் காலத்திலேயே முதன்முதலாக நடைபெற்றதாகச் செப்பேடுகளும், கல்வெட்டுக்களும் சான்று பகர்கின்றன. ஆகவே, எட்டாம் நூற்றாண்டு நிகழ்ச்சியாகிய விழிஞப் போரை அறிந்து கூறும் களவியல் உரை, இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தோரால் வரையப்பெற்றது என்பது பொருந்தாமை அறிக. எட்டுத்தொகை, பத்துப்பாட்டாதி சங்க நூல்களுக்குக் காலத்தால் சிறிது பிற்பட்டது எனக் கருதப்படும் சிலப்பதிகாரச் செய்யுட்கள் சில, களவியல் உரையில் மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ளன.

"பகுவாய் வராஅல்" என்ற பாட்டு நக்கீரர் பாடியது; இப் பாட்டில் வரும் "தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது" என்றதொடரை, வருதல் என்ற சொல், தன்மை, முன்னிலை ஆகிய இரு இடத்திலேயே அன்றிப் படர்க்கைக் கண்ணும் வருதற்கு உதாரணமாகக் காட்டி "என்று சொல்லினார் சான்றோர் என்பது" என்று கூறுகிறது அவ் வுரை; அவ் வுரை எழுதினார், நக்கீரனாரேயாயின், அவர் தம் பாடலையே எடுத்துக் காட்டி, அதை யாரோ பாடிய பாடலைக் குறிப்பார்போல், "என்று சொல்லினார் சான்றோர்" என்று கூறார். ஆகவே, அவ்வாறு கூறும் இவ் வுரையாசிரியர், அப் பாட்டின் ஆசிரியராகிய நக்கீரர் ஆகார் எனக் கொள்வாரும் உளர்.

இவ்வாறு களவியல் நூலும், அதன் உரையும் தோன்றிய முறைபற்றிக் கூறும் சான்றுகள் இரண்டும் பெரிதும் முரண்படுவனவாகக் காணப்படுதலாலும், அந் நூலுக்கு உரை எழுதியவர் எனக் கூறப்படும் நக்கீரர்

காலத்திற்கு ஐந்து நூற்றாண்டு பிற்பட்ட நிகழ்ச்சிகளை அவ் வுரை அறிவிக்கிறது என்பதால் கால முரண்பாடும் காணப்படுதலாலும், அவ் வுரையாசிரியரின் வேறுபட்டவர் நக்கீரர் எனத் தோன்றுமாறு அவ்வுரை இருக்கின்றது ஆதலாலும், "உப்பூரிகுடிகிழார் மகனுவான் உருத்திர சன்மன் செய்தது இந் நூற்கு உரை என்பாரும் உளர்; அவர் செய்திலர்; மெய்யுரை கேட்டார் என்க" என்று எழுதி அவ் வுரை எழுதப்பெற்ற அக் காலத்திலேயே அந் நூலுரையாசிரியர் நக்கீரர் ஆகார் என்ற கருத்தும் நிலவி யிருந்தது என்பதை, அவ் வுரையே உறுதி செய்கிறது ஆதலாலும், களவியலுக்கு உரை கண்டார் நக்கீரனாரே என்பதை ஏற்றுக்கொள்வதில் சிறிது ஐயப்பாடும் கொள்ள வேண்டியுளது.

எழுதினார் யாரேயாயினும் களவியல் உரை, தமிழக வரலாற்றினுக்குத் துணைபுரிந்து தமிழ்மொழிக்குச் சிறப் பளிக்கும் தனிப் பேருரையாம் என்பதில் சிறிதும் ஐயமில்லை. தமிழ் வளர்த்த சங்கங்கள் மூன்றின் வரலாற்றினை, விளக்கமாகவும், விரிவாகவும் முதல் முதல் அறிவித்த பெருமை, களவியல் உரைக்கே உரித்து. அது அறிவிக்கும் முச் சங்க வரலாறு இது:

"தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூவகைப்பட்ட சங்கம் இரீஇயினார் பாண்டியர்கள். அவருள் தலைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும், குன்றெறிந்த முருகவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனுமெனை இத் தொடக்கத்தார் ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பதின்மர் என்ப; அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத் தொன்பதின்மர் பாடினாரென்ப. அவர்களாற் பாடப்பட்டன எத்துணையோ பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையுமெனை இத் தொடக்கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கமிருந்தா ரென்ப. அவர்களைச் சங்கமிரீஇயினார், காய்சினவழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக எண்பத்தொன்பதின்மர்

என்ப. அவருட் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியர் என்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை என்ப. அவர்க்கு நூல் அகத்தியம்.

"இனி இடைச்சங்க மிருந்தார் அகத்தியனாரும், தொல்காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழியும், மோசியும், வெள்ளூர்க்காப்பியனும், சிறுபாண்டரங்கனும், திரையன்மாறனும், துவரைக்கோனும், கீரந்தையுமென இத்தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மரென்ப. அவருள்ளிட்டு மூவாயிரத்தெழுநூற்றுவர் பாடினாரென்ப. அவர்களாற் பாடப்பட்டன கலியும் குருகும் வெண்டாளியும் வியாழமாலை யகவலும் என இத் தொடக்கத்தன என்ப. அவர்க்கு நூல், அகத்தியமும், தொல்காப்பியமும், மாபுராணமும், இசை நுணுக்கமும், பூதபுராணமுமென இவையென்ப. அவர், மூவாயிரத்தெழுநூற்றியாண்டு சங்கமிருந்தாரென்ப. அவரைச் சங்கமிரீஇயினார் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறனீறாக ஐம்பத்தொன்பதின்மரென்ப. அவருட் கவியரங்கேறினார் ஐவர் பாண்டியர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்ப. அக்காலத்துப்போலும் பாண்டியனாட்டைக் கடல் கொண்டது.

"இனிக் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறுமேதாவியாரும், சேந்தம்பூதனாரும், அறிவுடையரனாரும், பெருங்குன்றூர்கிழாரும், இளந்திருமாறனும், மதுரையாசிரியர் நல்லந்துவனாரும், மருதனிளநாகனாரும், கணக்காயனார் மகனார் நக்கீரனாரும் என இத் தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மர் என்ப; அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினாரென்ப. அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், நற்றிணைநானூறும், புறநானூறும், ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடலும், கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையுமென்று இத் தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமுமென்ப. அவர் சங்கமிருந்து தமி

ழாராய்ந்தது ஆயிரத்தெண்ணூற்றைம்பதிற்றியாண்டு என்ப. அவர்களைச் சங்கமிரீஇயினார் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக, உக்கிரப் பெருவழுதியீறாக நாற்பத்தொன்பதின்மரென்ப. அவருட் கவியரங்கேறினார் மூவர் பாண்டியரென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தர மதுரை யென்ப."

இவ் வரலாற்றுள், உண்மையெனை ஏற்றுக் கொள்ளத் தகாதன சிலவும் உள எனினும், முச்சங்கத்தையும் முச்சங்கம் இருந்த இடத்தையும், அவற்றில் இருந்து தமிழாராய்ந்த புலவர்களையும், புலவர்களைப் போற்றிச் சங்கத்தைப் பேணிய அரசர்களையும் அறிய, இது நமக்குப் பெருந்துணை புரிதல் காண்க.

களவியல் உரை, இவ்வாறு வரலாற்றுச் சிறப்புடையதாதலே யன்றி இலக்கியச் சிறப்பும் உடையதாம்; உரைநடை, இலக்கியச்செறிவுடைய இனிய நடைவாய்ந்தது; கற்பார்க்குக் கழிபேருவகைதரும் கவினுடையது.

கொழுச்சென்றவழித் துன்னூசி இனிது செல்வதுபோல், ஆவிற்கு இருகோடுபோல், புனலோடுவழிப் புற் சாய்ந்தாற் போல், நாண்வழிக் காசுபோல், நீர்வழி மிதவைபோல, குன்றமுருண்டாற் குன்றி வழியடையாகாவாறு போல், கடல் வெதும்பின் வளாவு நீரில்லது போல என்பன போன்ற அழகிய உவமைகளாலும், "இனியாரொடு தலைப்பெய்த இடங் கண்டாலும் அவ்வினியாரைக் கண்டாலே போல்வது உலகத்துத் தன்மை," "உலகத்தோர் இடுக்கணுற்றால் விதியானே தீருமென்றிரார்; முன்னே தீர்ப்பதற்குச் சுற்றத்தாரையும், நட்டாரையும் நினைப்பர்," "உலகத்து ஒரு பொருண்முடியாதெனக் கவன்று நின்றார் முடிப்பதோர் உபாயங் கண்ட ஞான்று அப் பொருள் எய்தினாரே போல மகிழ்வர்" போன்ற சொற்றொடர்களாலும் நிறைந்து விளங்கும் நீர்மை யுடையது.

௬௬. திருமுருகாற்றுப்படை

புலவர்கள், தலைவன் ஒருவனைப்பாடுங்கால், தலைவர்கள் முன்னின்று ஆடியும் பாடியும் பொருள்பெறும் பண்பின ராகிய கூத்தர் பாணர் பொருநர் விறலி இவர்களுள் ஒருவராகத் தம்மைக்கொண்டு, தாம் அவனைப் பாடிப் பொருள் பெற்று மீண்டு வருங்கால், இடைவழியில் எதிர்ப்பட்ட ஏழை இரவலன் ஒருவன், தாம் பொருள்பெற்ற வழியாது? அப்பொருளைத் தந்தோன் யாவன்? அவனை அடையும் வழி எது? என்று கேட்க, அவனுக்கு அத் தலைவன் சிறப்புக்கள் பலவற்றையும் விளங்க எடுத்துக்கூறி, அவன் இன்னன்; அவன் வாழும் இடம் இது; ஆண்டுச் செல்லும் வழி இது என்று கூறுவதாகப் பாடுவதைப் பண்பெனக் கொண்டுள் ளார்கள்; அத்தகைய ஆற்றுப்படைச் செய்யுட்கள் பத்துப் பாட்டிலும், பிற தொகை நூல்களிலும் காணப்படுகின்றன.

திருமுருகாற்றுப்படை, வீடுபேறு அடைதற்குரிய நல்லூழ் உடையான் ஒருவனை, அவ் வீடுபேற்றினைப் பெற்றான் ஒருவன் 'முருகக் கடவுளிடத்தே செல்க; சென்றால் வீடுபேறு பெறுவை' என ஆற்றுப் படுத்திய தாகப் பாடப்பட்டுளது. பொருநராற்றுப்படை, சிறுபாணாற் றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை முதலி யன எல்லாம், பொருளைப் பெறுவோர் பெயரால் வழங்கப் பட்டுள்ளன; திருமுருகாற்றுப்படை, பொருள் தரும் தலைவன் பெயரால் வழங்கும் சிறப்புடையது. இதற்குப் புலவராற்றுப்படை என்றோர் பெயரும் இருந்தது என்பது, "இதனைப் புலவராற்றுப்படை என்று உய்த்துணர்ந்து பெயர் கூறுவார்க்கு முருகாற்றுப்படை என்னும் பெயரன்றி அப்பெயர் வழங்காமையான் மறுக்க" என்னும் நச்சினார்க்கினியர் உரையால் தெளிவாகும்.

உலகத்து உயிர்கள் எல்லாம் உவந்து மகிழுமாறு நீலக்கடலிடையே தோன்றும் செஞ்ஞாயிறு போன்ற பேரொளியினையும், தன் திருவடிகளைச் சேர்ந்த அன்பர்களை ஆதரித்து, அவர் ஆணவம் முதலாம் மும்மலத்தையும்

அழிக்கவல்ல போராற்றலையும், மாறுபட்டாரை அழித் தொழிக்கவல்ல வலிய பெரிய கைகளையும் உடைய, மறுவில் கற்பினையும் ஒளிவீசும் நுதலினையும் உடைய தெய்வயானை யின் கணவனும், செங்கடம்புமலர்களால் கட்டப்பெற்ற தேர்உருள்போலும் மாலைகிடந்தசையும் மார்பினையும், காந்தள்மலர்களால் ஆய கண்ணியினையும், கடல் கலங்கச் சென்று சூரனைக் கொன்ற—வேலால் மாமரத்தை வெட்டி வீழ்த்திப்பெற்ற—மறனிழுக்கா மானத்தினையும், அளக்க லாகாப் பெரும்புகழினையும் உடைய செவ்வேளும் ஆகிய முருகனுடைய திருவடிகளைச் சென்று அடையும் திருவருளைப் பெறும் விருப்பத்தினை உடைய பேருள்ளங் கொண்டு, அத் திருவடிகளைச் சென்றடையும் செலவினை நீ விரும்புவையாயின், நின் நன்னர் நெஞ்சத்து அவ் இன்னசையினை நீ இன்னே பெறுகுவை.

அதை அடைதற் பொருட்டு அவனைக்காண விரும்பும் நீ, "அவன் யாண்டாண்டு உறைவன்?" என வினவுதி யாயின், அவனுறையும் இடங்களைக் கூறுகின்றேன் கேள்; அவன் திருப்பரங்குன்றத்திலே உளம் விரும்பி இருப்பான்; நாமனூர் அலைவாய் என அழைக்கப்பெறும் திருச்செந் தூரில் சென்று வாழ்தலும் அவனுடைய இயல்பு; பொதினி எனவும், பழனி எனவும், சித்தன்வாழ்வு எனவும் வழங் கப்பெறும் திருவாவினன்குடியில் சின்னாள் வாழ்தலும் உரியன்; மலைநாட்டு ஊர்களில் ஒன்றாகிய திருவேரகத்தில் பெரிதும் உவந்து உறைதலும் உரியன்; கூறிய இவ்விடங் களிலே அல்லாமல் தமிழகத்தின் குன்றுகள்தோறும் ஆடிமகிழ்தலும் அவன் வழக்கமாம்; கோழிக் கொடியினை நட்டு, மறியறுத்து நறுமலரும் சிறுதினையும் பரப்பி ஊர் தோறும் எடுத்த விழாக்களத்தின்கண்ணும், அன்புடை யார் ஏத்திப்பரவும் தன்மனம் விரும்பும் இடங்களிலும், வேலன் வெறியாடு களத்திலும், பெருங்காட்டிலும், இள மரக்காவிலும், ஆறுகளிலும், குளங்களிலும், ஆற்றிடைக் குறைகளிலும் இது போன்ற பல்வேறு இடங்களிலும், முச்சந்தி, நாற்சந்திகளிலும், புதுப்பூ மலர்ந்த கடம்படி

களிலும், மாநகர்மன்றங்களிலும், ஊரம்பலங்களிலும், கந்தழி நின்ற பெருவெளிகளிலும் அவன் உறைவன்; அவன் உறையும் இடங்களாக நான் அறிந்தன இவை; அறிந்தவாறே கூறினேன்; யான் கூறிய இடங்களிலேயாயினும், அன்றி வேறு இடங்களிலாயினும் அவனைக் கண்டால், கண்டபோதே, முகனமர்ந்து ஏத்தி, கைகூப்பி வாழ்த்தி, காலுறவணங்கி, அவன்புகழைப் பரவி வாழ்த்தி, "புரையுநர் இல்லாப் புலமையோய்! நின்னை அளந்து அறிதல் எம் போன்ற சிற்றுயிர்க்கு அருமையாதலின், நின் திருவடி உள்ளி வந்தனென்" என்று எடுத்து நீ கருதிவந்ததை அறிவிக்கும் முன்னரே, அவனைச் சேவித்து நிற்கும் கூளியர் பலரும் சென்று, "பெரும! அறிவுமுதிர்ந்த, வாய்மை வழுவாத இரவலன் ஒருவன் நின்புகழ் நயந்து, இனியவும் நல்லவும் நனிபலஏத்தி வந்து நிற்கின்றான்; அவன் நின்னால் அளிக்கத் தக்கான்காண்" என்று கூற, பழமுதிர்சோலை மலை கிழவோனாகிய முருகன், கண்டார்க்கு அச்சம் அளிக்க வல்ல தன் நெடியவடிவை மறைத்துக் கொண்டு வந்து, தன் மணங்கமழ் தெய்வத்து இளநலங்காட்டி "வீடுபேறு பெற நினைத்து வந்த நின்வரவை யான் முன்னரே அறிவேன்; அவ் வீடுபேறு எய்துமோ எய்தாதோ என அஞ்சும் நின் அச்சம் ஒழிக;" என்பன போன்ற அன்புரைகள் பல அளித்து, கடல் சூழ்ந்த இவ்வுலகில் ஒப்பும் உயர்வும் இன்றி வாழ்வோன் நீ ஒருவனே எனத்தோன்றுமாறு, விழுமிய பெறலரும் பரிசிலாம் வீடுபேற்றினைத் தந்து அருளுவன்.

திருமுருகாற்றுப்படை அளிக்கும் பொருள் இது.

ஆசிரியர் நக்கீரனார், திருமுருகாற்றுப்படையினை, முந்நூற்றுப் பதினேழு அடிகளைக்கொண்ட ஆறு பிரிவாகப் பிரித்துப் பாடியுள்ளார் :

முதற்பிரிவில், வீடு பேறு பெற்றான் ஒருவன், அதைப் பெற விரும்புவான் ஒருவனை நோக்கி, "நீ முருகன் திருவடிகளைப் பெறவிரும்புவையாயின், அவற்றை இன்னே பெறுகுவை; அவற்றைப் பெறுதற்கு அவனைக் காண

விரும்பும் நீ, 'அவன் யாண்டாண்டு உறைவன்?" என வினவுதியாயின், "அவனுறையும் இடங்களைக் கூறுகின்றேன் கேள்!" எனத்தொடங்கி, "அவன் திருப்பரங்குன்றிலே விரும்பி உறைதலும் உண்டு" என்று முடிக்கின்றார்.

இதில், வரையுறையும் சூரர மகளிர்தம் விளையாட்டு வகைகளும், பேய்களின் துணங்கைக் கூத்தின் இயல்பும் விளங்க உரைக்கப்பட்டுள்ளன. மதுரைக்கு மேற்கே இருப்பது திருப்பரங்குன்றம் என்றும், பகைத்துப் போரிடுவார் எவரையும் பெருமையால் போர்நிகழ்ச்சியினைக் கண்டறியா வாயில்களையும், திருமகள் செல்வச் செருக்கோடு வீற்றிருக்கும் குற்றம் தீர்ந்த அங்காடிகளையும், மாடங்கள் மலிந்த மாபெருந் தெருக்களையும் உடையது கூடல் என மதுரையின் வெற்றியும் செல்வமும் விளங்கப் பாடப்பட்டுள்ளன:

"பொருநர்த் தேய்த்த போர் அருவாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடம்மலி மறுகின் கூடல்." (௬௬ - ௭௧)

நன்கு சேறுபட்ட அகன்ற வயல்களில் வளர்ந்து மலர்ந்த தாமரை மலர்களில் இராக்காலத்தே துயில் மேற்கொண்டு, விடியற்காலத்தில் தேன் மணக்கும் நெய்தல் மலர்களில் ஊதிப்படிந்து தேன் உண்டு, ஞாயிறு தோன்றிய உடனே, சுனைகளிலே மலர்ந்து மணங்கமழும், நீலக்கண்கள் போன்ற மலர்களைச் சூழ்ந்து ஒலித்துப் பறக்கும் வண்டுகளின் ஆரவாரம் நிறைந்த திருப்பரங் குன்று என்று கூறும் விடியற்கால இயல்பு வியந்து பாராட்டத்தக்கதாம்:

"இருஞ்சேற்று அகல்வயல் விரிந்து வாயவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி, வைகறைக்
கள்கமழ் நெய்தல் ஊதி, எல்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்
அம்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்று." (௭௨ - ௭)

இரண்டாம் பிரிவில், ஆலவாய் அமர்ந்தருளும் அறுமுகக் கடவுளின் அருட்டிறம் கூறப்பட்டுள்ளது. முருகன் யானைமீதிவர்ந்து துந்துபி ஒலிப்ப, கொம்பு பேரொலி செய்ய, வெண்சங்கு முழங்க, முரசொலியுடனே கோழிக் கொடி அகவ, வானின் வழியே வந்து உலகம் புகழும் ஆலவாயில் அமர்ந்துறைவான் என்று கூறியுள்ளார். இதில், ஆறுமுகமும், பன்னிரு கைகளும் கொண்ட முருகனின் திருவுருவக் காட்சி நன்கு காட்டப்பட்டுள்ளது.

ஒருமுகம், உலகம் பேரிருளின் நீங்கிப் பெருமை தோன்ற விளங்குமாறு பல்கதிர் பரப்பிப் பேரொளிதரும் பெருமை உடையது ;

ஒருமுகம், தன்பால் அன்பு கொண்ட அடியார்கள் தன்முன்னின்று ஏத்த, அதை விரும்பி ஏற்று மகிழ்ந்து அவர் உளம் உவப்ப வேண்டும் பொருள் அளிக்கும் அருட்டிறம் உடையது ;

ஒருமுகம், மந்திர விதிகளின் மரபு சிறிதும் வழுவாத அந்தணர் ஓம்பும் செந்தியினைத் தீங்குவாராவண்ணம் காத்து நிற்கும் ;

ஒருமுகம், வேதங்களாலும், வேறு நூல்களாலும் உணர்த்தலாகாப் பொருள்களையெல்லாம் ஆராய்ந்து, கேட்டார் ஏழுறுமாறு உணர்த்தித் திங்கள்போல் திசையெலாம் விளங்கத் தோன்றும் ;

ஒருமுகம், அறவழிப் போர் ஆற்றுது, அழிப்பதே தொழிலாக் கொண்ட அசுரர் முதலியோரை அழித்துச் செய்யும் களவேள்வியினை மேற்கொள்ளும் ;

ஒருமுகம், குறவர் குலத்து வந்துதித்த வல்லிக் கொடி போலும் வனப்புடையாள் வள்ளியொடு மகிழ்ந்து இருக்கும்.

அவன் ஆறு திருமுகங்களின் அருட்டிறம் இவை.

ஒருகை, ஞாயிற்றின் வெம்மையினை உலக உயிர்கள் தாங்கா என்பதறிந்து, தம் அருளினால், அஞ்ஞாயிறோடு

திரிந்து, அதன் வெம்மையைத் தாம் தாங்கிக் கொள்ளும் முனிவர்க்குப் பாதுகாவலாய் அமைந்தது; அக் கையோடு இணைந்த மற்றொருகை, மருங்கிலே வைக்கப்பட்டிருக்கும். இதனால், இக் கைகள் இரண்டும், மாயிரு ஞாலம் மறுவின்றி விளங்கப் பல்கதிர் விரிக்கும் முதல் முகத்திற்கு ஏற்ற தொழில் புரிவன வாதல் காண்க.

யானை ஏறிவருவாரைப் போன்று, ஒருகை தோட்டியைத் தாங்கி நிற்க, அதற்கு இணையான மற்றொருகை, தொடையின் மீது கிடந்து காட்சி தரும். தன்னை வழிபடுவார் முன்னே யானைமேல் வந்து அருள் செய்தல் அவனியல்பாதலின், இவ்விருகைகளும், காதலின் உவந்து வரங்கொடுக்கும் இரண்டாம் முகத்திற்கு ஏற்ற தொழில் புரிவனவாதல் காண்க.

இருகைகள், பரிசையும், வேலையும் வலமாகச் சுழற்றும் இயல்பினவாம். வேள்வியைக் கெடுக்கவரும் அசுரரை அழிக்க இவை வேண்டப்படுதலின், அவற்றைத் தாங்கிய இக் கைகள், வேள்வி ஓர்க்கும் முகத்திற்கு ஏற்ற தொழில் புரிவனவாதல் காண்க.

ஒருகை, முனிவர்களுக்குத் தத்துவப் பொருளை உணர்த்த, மார்போடு பொருந்தி நிற்க, மற்றொருகை, மார்பில் தவழும் மாலையோடு கிடந்து மாண்புறும். இக் காட்சி, மோன முத்திரையினை உடைய ஆசிரியன் நிலையினை நினைப்பூட்டு மாதலின், இவ்விரு கைகளும், எஞ்சிய பொருள்களை ஏமுறவிளக்கும் முகத்திற்கு ஏற்றனவாதல் காண்க.

ஒருகை, மேலோங்கி நின்று சுழல, மற்றொருகை மணியினை ஆட்டி ஒலி எழுப்பும். இவ்விரு கைகளும் களவேள்வி வேட்கும் முகத்திற்கு ஏற்றவனவாதல் காண்க.

ஒருகை, மழை பெய்விக்கும்; மற்றொருகை தெய்வமகளிர்க்கு மணமாலை சூட்டி மகிழும். முருகன் வள்ளியொடு நகையமர்தல், உலகிற்கு இல்வாழ்க்கையின் இயல்பினை எடுத்துக்காட்டுதற்காம் என்ப; அவ் இல்வாழ்க்கை

இனிது நடைபெற மழை வேண்டும்; இல்வாழ்க்கையின் இயல்பினை எடுத்துக் காட்டும் மணமாலை; ஆதலின் இவ்விருகைகளும் வள்ளியொடு நகையமர்ந்த முகத்திற்குத் துணையான தொழில் மேற்கொண்டனவாதல் காண்க.

ஆறு திருமுகங்களுக்கும் ஏற்புடைய பன்னிரு திருக் கைகளின் பண்புகள் இவை.

மூன்றாம் பிரிவில், அசுரரைக் கொன்று தேவரைக் காத்த முருகனுக்குக் கைம்மாருக இந்திரன் தன் மகள் தெய்வயானையாரை மணம் செய்து கொடுத்தான். அப் போது முருகன், "நமக்கு இதுபோன்ற சிறப்பெல்லாம் தந்தது இவ்வேல்" என்று தன் கைவேலைப் புகழ்ந்தான்; அவ்வழி ஆண்டிருந்த நான்முகன், "இவ் வேலிற்கு அவ் வாற்றல் வந்தது என்னலன்றோ" என்றான்; உடனே முருகன், "என் கைவேலிற்கு நீ அளிக்கவல்ல ஆற்றலும் ஒன்று உண்டோ" என்று சினந்து, "இவ்வாறு தகாதன கூறிய நீ மண்ணிடைச் சென்று உழல்வாயாக" எனச் சாபந்தந்தான். அவனும் அவ்வாறே மண்ணிடைத் தோன்றி மயக்கமுற்றான்; அதனால் முத்தொழில்களும் நடைபெறாது தடையுற்றன; அயன் அரி அரன் ஆகிய மூவரும், ஆக்கல் அளித்தல் அழித்தல் ஆகிய தொழில் களாற்றிப் பெறும் தலைமையினைத் தேவர்கள் விரும்பினர்; அதற்கு நான்முகன், பண்டுபோல் தன் படைத்தற் றொழிலாற்றுதல் வேண்டும் என்பதறிந்தனர்; அதன் பொருட்டுக் கருடக் கொடியோனாகிய திருமாலும், வெள் ளேற்றுக் கொடியோனும் உமையினை ஒரு பாகத்தே கொண்டோனும், இமையா முக்கண்ணும் முப்புரத்தை அழித்த மிகுவலியும் உடையோனும் ஆகிய சிவனும், பத்துநூறு கண்கள் உடையோனும், நூறு பல் வேள்வி இயற்றியோனும் ஆகிய இந்திரனும், முப்பத்து மூவரும், பதினெண்கணங்களும் ஒன்றுக்கூடிக் கந்தருவர் இனிய யாழ் இசைத்து வரவும், முனிவர்கள் முன்னே செல்லவும், வந்து காணுமாறு தெய்வயானையாருடன், முருகன் ஆவினன்குடியிலே சிலநாள் வாழ்தலும் உரியன் என்று

கூறி முருகன் அருட்டிரு விளையாடல் ஒன்றை அழகாக எடுத்துக் கூறியுள்ளார்.

இதில், முப்பத்து மூவரும், பதினெண் கணங்களும் கலந்திருந்த காட்சியினை "மீன்பூத்தன்ன தோன்றலர்" என்ற தொடராலும், அவர்கள் செல்லும் செலவின் விரைவினை, "வளிகிளர்ந்தன்ன செலவினர்" என்ற தொடராலும், அவர்கள் தம் பேராற்றலை "வளியிடைத் தீயெழுந்தன்ன திறலினர்" என்ற தொடராலும், அச்சந் தரும் அவர் தம் பெருங்குரலினை "தீப்பட உரும் இடித் தன்ன குரலினர்" என்ற தொடராலும் உவமை நயம் தோன்ற உணர்த்திய திறம் உள்ளுதொறும் உவகை பயப்பதாம்.

மகளிரைப் பற்றிக் கூறுங்கால், "நோயின்றி இயன்ற யாக்கையர், அவிர் தளிர் புரையும் மேனியர்" எனக்கூறும் தொடர்களால், பண்டைக்காலத் தமிழகத்தில் வாழ்ந்த மகளிர் தம் உடல் வனப்பும், வலிமையும் விளங்கித் தோன்றுவதும் காண்க.

மரவுரி ஆடை, வலம்புரிச் சங்கு போலும் வெண்நரை, அழுக்கற விளங்கும் வடிவம், மான் தோல் அசையும் மார்பு, உள்ளொளிப் பெருக்கினை உணர்த்தவல்ல மார்பு எலும்புகள் தோன்றுமாறு ஊண் ஒழித்து மெலிந்த யாக்கை ஆகியவற்றை உடைய முனிவர்கள், பல நாள் உணவின்றி மேற்கொண்ட நோன்பும், இகலும் மாறுபாடும் இல்லா மனமும், பல கற்றோராலும் அறியப்படா அறிவும், முற்றும் கற்றுத்துறைபோய்க் கற்றோர் பலர்க்கும் தலை வராம் தகுதியும், காமமும் கடுஞ்சினமும் கடிந்த காட்சியும் இடும்பை என எதையும் கொள்ளாத் திண்மையும், எப் பொருள்பாலும் வெறுப்பினைக் கொள்ளாத் தெளிவும் உடையராவர் எனக்கூறும் முனிவர்களின் இயல்புகள், எல்லோராலும் அறிந்து மேற்கொள்ள வேண்டிய பண்பு களாம்.

“சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர் ;
மாசுஅற இமைக்கும் உருவினர் ; மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்பெழுந்து இயங்கும் யாக்கையர் ; நன்பகல்
பலவுடன் கழிந்த உண்டியர் ; இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் ; யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் ; கற்றோர்க்குத்
தாம் வரம்பாகிய தலைமையர் ; காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர் ; இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் ; மேவரத்
துனிஇல் காட்சி முனிவர்.” (கஉகூ - ௲எ)

நான்காம் பிரிவில், அந்தணர் இருபிறப்பாளர் என அழைக்கப் பெறுவர் ; ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் ஆறு தொழில்களில் வழுவாதவர் ; உலகத்தார் புகழ்ந்த உயர்குடியில் வந்த தந்தைதாய் உடையவர் ; இளமைக் காலத்து நாற்பத்தெட்டியாண்டுகளை வேதம் கூறும் நல்வழியில் வாழ்ந்து கழித்தவர் ; எப்போதும் அறங்கூறும் இயல்பினர் ; முத்தீயினைச் செல்வமாகக் கொண்டவர் எனச் செந்தண்மை பூண்ட அந்தணராவார்தம் இலக்கணம் கூறி, அவர்கள் நீராடி, நீராடுங்கால் தோய்த்த ஈர ஆடையினை உடுத்து, தலை மேல் வைத்த கையினராய்த் துதித்து, ஆறு எழுத்தான் இயன்ற அறுமுகன் மந்திரத்தை நாப்புடை பெயருமாறு உச்சரித்து வழிபடும் காலம் அறிந்து வாழ்த்தி வழிபட, முருகன் அவர்கள் வழிபாடு கண்டு பெரிதும் மகிழ்ந்து ஏரகத்தில் இருப்பான் என்று கூறப்பட்டுள்ளது.

ஒருவர் பிறந்த குடி, “கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்தகுடி” எனப் பழமை உடையதாதலே அன்றி, வலம்புரியன்ன வழுவில் குடியாதலும் வேண்டும் என்பர் ; இதை மனத்திற் கொண்டு, ஒருவர் தாயும் தந்தையும் பிறந்த குடி, உலகத்தாரால் உயர்ந்த குடி எனப் புகழ்ந்த குடியாதல் வேண்டும்.

"இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி" என்று கூறிய உண்மை உணரற்பாலதாம்.

ஐந்தாம் பிரிவில், கிளையோடு கள்ளுண்டு மகிழ்ந்த கானவர், தொண்டகச் சிறுபறை முழக்கிக் கொண்டே குரவைக் கூத்தாடத் தொடங்கினர்; அவர் ஆடலைக்கண்ட அவர் மகளிரும் தாமும் குரவை ஆடி மகிழ்வாராயினர். அவர் ஆடல் கண்ட முருகன், அக் குரவையினைத் தாமும் ஆடவிரும்பி, வேலன் தக்கோலத்தைக் கலந்து, சாதிக் காயை நடுவேயிட்டு, காட்டு மல்லிகையுடன் வெண்டாளி மலரையும் விரவிக் கட்டிய கண்ணியினைச் சூடிச், செவ்வாடை உடுத்து, அசோகந்தளிரைக் காதில் அணி பெற அணிந்து, கச்சை கட்டி, கழல் அணிந்து, வெட்சி சூடி, குழல் கோடு வேறு பலவியங்கள் இவற்றின் இசையினை எழுப்பித் தகர்மீதும் மயில் மீதும் ஏறிக், கோழிக் கொடியை உயர்த்தித், தன்னைச் சேவித்துப் பாடும் மகளிரோடும், சேவிக்கும் மகளிரோடும் தமிழகத்து மலைகள் தோறும் சென்று ஆடி மகிழ்வன் என்று கூறப்பட்டுளது.

இந்தப் பகுதியில், காட்டு வாழ் கானவர் வாழ்க்கை, அவர் சிறுகுடி, அவர்தம் கிளை, ஆடவர் பெண்டிர் ஆடை அணி வகைகள், அவர்கள் ஆடல் பாடல், அந்நாட்டு இசைக் கருவிகள் அவ்வளவும் அழகாக எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

ஆறும் பிரிவில், முருகன் முற்கூறிய இடங்களிலேயே அல்லாமல், ஊர் தோறும் விழாக் களத்தின் கண்ணும், அன்புடையார் ஏத்திப் பரவும் இடங்களிலும், காட்டிலும், காவிலும், ஆற்றிலும், குளத்திலும், ஆற்றிடைக் குறையிலும், முச்சந்தியிலும், நாற்சந்தியிலும், கடம்படிகளிலும், மன்றங்களிலும், அம்பலங்களிலும், கந்தழி நின்ற வெளிகளிலும் உறைவான்; அவன் உறையும் இடங்களாக நான் அறிந்தன இவை; இவ்விடங்களிலாயினும், வேறு இடங்களிலாயினும் அவனைக் கண்டால், முகனமர்ந்து ஏத்தி, கைகூப்பி வாழ்த்தி, காலுற வணங்கி, அவன் புகழைப்

பரவி, நீ கருதி வந்ததை அறிவிக்கு முன்னரே, அவனைச் சேவித்து நிற்போர், நின் வருகையினை அவனுக்கு அறிவிக்க, பழமுதிர்சோலை மலை கிழவோனாகிய அவன், தன் இளநலம் காட்டி, "நின் வரவினை அறிவேன்; நின் அச்சம் ஒழிக" என அன்புரை பலகூறி வீடு பேற்றினைத் தருவன் என்று முடிக்கப் பெற்றுளது.

இப் பகுதியில், கோழிக் கொடி நட்டு, மறியறுத்து, விழாக் கொண்டாடும் வழக்கமும், குறக்குல மகளிர் முருக வேளை அழைக்க மேற்கொள்ளும் வெறியாடு முறையும் விளங்க விரிவாக உரைக்கப்பட்டுள்ளன. இதன் ஈற்றில் வரும் அருவியின் இயற்கைக் காட்சி, இன்பம் தரும் இலக்கியமாம்.

"நெடும்பெரும் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறு அமர் செல்வ!
ஆல்கெழு கடவுள் புதல்வ! மால்வரை
மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ!
இழையணி சிறப்பின் பழையோள் குழவி!
வானோர் வணங்குவில் தானைத் தலைவ!
மாலை மார்ப! நூலறி புலவ!
செருவில் ஒருவ! பொருவிறல் மள்ள!
அந்தணர் வெறுக்கை! அறிந்தோர் சொல்மலை!
மங்கையர் கணவ! மைந்தர் ஏறே!
வேல்கெழு தடக்கைச் சால்பெரும் செல்வ!
குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ!
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே!
அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக!
நசையுநர்க்கு ஆர்த்தும் இசைபே ராள!
அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்!
மண்டமர் கடந்த நின் வென்றடு அகலத்துப்

பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள்!
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்!
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி!
போர்மிகு பொருந! குரிசில்!” (௨௬௫ - ௭௬)

என்ற பகுதி, முருகன் வரலாறு பலவும் அமைந்த முன்னிலைப் பரவலாய், அவன் அருள் வேண்டி நிற்கும் அடியார் அவன்முன் நின்று பாடிப் பரவுதற்காம் பாராயணப்பாடலாய் அமைந்து காணப்படுதல் காண்க.

திருமுருகாற்றுப்படையின் இடையிடையே வரும், “கோபத்தன்ன தோயாப் பூந்துகில்,” “கைபுனைந் தியற்றாக் கவின் பெறு வனப்பு,” “புகைமுகந் தன்ன மாசில் தூவுடை,” “மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கம்” முதலிய அருந்தொடர்கள் கற்றோர்க்குக் கழிபேருவகைதரும் இயல்பினவாம். திருமுருகாற்றுப்படையினை வரிவரியாக ஆராய்ந்து நோக்குவதாயின், அது ஒரு தனி நூலாய் முடியுமாதலின், அதன் சிறப்பெலாம் உணர விரும்புவோர், முழுநூலினையும் கண்டு களிப்பாராக என விடுத்தனம்.

கஉ. நெடுநல்வாடை

இது, தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாராட்டிய பாட்டு. நெடுஞ்செழியன், தலையாலங்கானத்துச் செருவில்,

"சேரல், செம்பியன், சினங்கெழு திதியன்,
போர்வல் யானைப் பொலம்பூண் எழினி,
நாரரி நறவின் எருமை யூரன்,
தேங்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மா, இயல்தேர்ப் பொருநன்."

ஆகிய எழுவரையும் ஒரு பகலில் வென்றான் என விளங்கப் பாராட்டிய நக்கீரர், படைவீரர்பால் பரிவு காட்டும் அவன் பண்புடைமையினை இதிற் பாராட்டியுள்ளார். பகைவயிற் பிரிந்து சென்று பாசறைக்கண் தங்கியிருக்கும் தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவியின் துயர்தீர, "பகை வென்று, அவன் விரைவில் மீள்க" எனத் தலைவியின்மாட்டு அன்புடையாள் ஒருத்தி, வெற்றிக் கடவுளாகிய கொற்றவையைப் பரவுவதாகப் பாடப் பெற்றுளது.

வாடைக் காற்று, ஐப்பசி, கார்த்திகைத் திங்கள்களில் தமிழ்நாட்டில் வீசும் வடகிழக்குப் பருவக் காற்றைக் குறிக்கும். "கார்காலத் தொடக்கத்தே மீண்டு வருவேன்" எனக் கூறிச் சென்ற தலைவன், கார்காலமும்போய்க் கூதிர்க் காலம் வந்தும் வாரானாக, அவன் வரவு நோக்கி வருந்தியிருக்கும் தலைவிக்கு ஒருநாள் ஒரூழிபோல் தோன்றுமாதலின், அவள் ஆற்றியிருக்கும் வாடைவீசும் கூதிர்க்காலம் நெடுமை உடையது எனக் கூறப்பட்டது; கூதிர்க்காலம் பிரிந்திருப்பவர்க்குப் பெருந்துயர் தரும் இயல்புடையது எனினும், 'போகம் வேண்டுவோர், புகழ்ச்சொல் பெறார்' என உணர்ந்த தலைவன், வினைமேற் சென்ற வேட்கையால் காமத்தை வென்று பாசறைக்கண் இருத்தலான் நன்மை உள்ள வாடை என்றும் கூறப்பட்டது. அன்றியும், வாடைக்காற்று, குளிர் மிகுந்து கொடுமை செய்யுமேனும்,

அதன் வரவு, பல்வேறு உணவுப் பொருள்கள் விளையத் துணை புரியுமாதலின் நன்மை உடையதாயிற்று ; இக் கருத்தினாலும், அது 'நல்வாடை' என அழைக்கப்பெற்றது எனினும் பொருந்தும்.

இதன்கண், கூதிர்காலக் காட்சிகளும், மாறும் தட்ப வெப்ப நிலைகளுக்கேற்ப மக்கள் தங்கள் வாழ்விடங்களையும் வாழும் வகைகளையும் மாற்றிக்கொள்ளும் இயல்பும், தமிழ் நாட்டுப் பண்டைக்கால நாகரிகச் சிறப்பை நனிவிளக்கும் நகர் அமைப்புக்களும் அந் நகர்வாழ் மக்களின் செல்வ வாழ்வும், தலைவனைப் பிரிந்து தனித்துத் துயர் உறும தலைவியின் துன்பநிலைகளும், நள்ளென் யாமத்தும் உறங்காது, படைவீரர்க்கு ஊக்கம் ஊட்டும் அன்புரை வழங்கிக் கொண்டு பாசறைக்கண் இருக்கும் பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் இயல்பும் இனிது விளக்கப்பட்டுள்ளன.

பருவந்தோறும் பொய்யாது பெய்யும் மேகம் புது மழை பெய்யத் தொடங்கி விட்டது; வெள்ளம் பாயும் பள்ள இடங்களில் இருப்பின், தங்கள் ஆடு மாடுகளுக்கு ஆகாது என்பதறிந்த ஆயர்கள், தங்கள் ஆனிரைகளொடு மேட்டு நிலமாகிய முல்லை நிலத்தே சென்று தங்குவாராயினர் ; ஊருக்கு அருகே மேய்த்து ஊரிலேயே தங்கி வாழ்ந்து பழகிய அவர்கள், இனி அவ்வாறு ஊரில் வாழ்வதற்கு இல்லையே என்ற வருத்தம் ஒருபால் வருத்த, குளிர்க் கொடுமை ஒருபால் வருத்த வாழலாயினர் ; இவ்வாறு துயர்உறும் அவர்கள், பற்பறை கொட்டும் தங்கள் குளிரைப் போக்குமாறு மூட்டிய நெருப்பிலே தங்கள் கைகளைக் காட்டிக் காட்டிக் கன்னங்களில் வைத்துச் சூடு உண்டாக்கிக் கொண்டு ஆண்டு வாழலாயினர். விலங்குகள் எல்லாம் குளிரின் கொடுமைக்கு அஞ்சி, மேய்தலாகிய தம் தொழிலையும் மறந்துவிட்டன ; குரங்குகள், குளிரின் கொடுமையால் உடல் குன்றித் துன்புறலாயின ; மரங்களில் வாழும் பறவைகளும், குளிர்காற்றால் அலைப்புண்டு நிலத்தே வீழ்ந்து வருந்தின ; கறவைப் பசுக்கள், பால்

உண்ணவரும் தம் கன்றுகளுக்கும் பால் கொடாது உதைக்கலாயின.

பீர்க்கும் பிறவும் பூக்கத் தொடங்கின; மழையால் வருந்திய கொக்குகள், மழை சிறிது விட்டவுடனே, பறந்து சென்று, ஓடிவரும் நீரை எதிர்த்துச் செல்லும் சிறு மீன்களை நாரைகளோடு கூடி உண்ணலாயின; பெருமழை பெய்து ஓய்ந்துவிட்டதாயினும், சிறு சிறு துவலைகள் சிதறிக்கொண்டே இருந்தன. அகன்ற வயல்களில் நிறைந்த நீர்பெற்று வளம்பெற வளர்ந்த நெற்கதிர்கள் முற்றி வளையலாயின; கமுகு, நீர் நிறைந்து பருத்து முற்றிய காய்களை உடையவாயின; பூக்களால் நிறைந்து பொலிவு பெறத் தோன்றும் மரங்கள், மழை பெய்தலால் ஏற்றிக் கொண்ட நீர்த்துளிகள் இடைவிடாது விழுந்து கொண்டே யிருந்தன; பருத்துத் திரண்ட தோள்களையும் முறுக்கேறிய உடம்பினையும் உடைய மிலேச்சர்கள், மதுவை உண்டு மழைத்துளிகளுக்கும் அஞ்சாது, ஆறுபோல் அகன்ற தெருவிலே, ஆடைகளால் தம் உடலைப் போர்த்திக் கொள்ளாமலே அங்கும் இங்குமாய் அலைந்து திரிவாராயினர். மேகங்களால் மறைப்புண்டு ஞாயிறு தோன்றாமையால், பொழுது அறிய மாட்டாமல் மயங்கிய மகளிர், மலர்கள் மணங்கமழ மலர்தலைக்கண்டு மாலைக்காலமாயிற்று என உணர்ந்து, இரும்பால் இயன்ற விளக்கிலே நெய் வார்த்துப் பெற்ற திரிகளைக் கொளுத்தி நெல்லும் மலரும் தூவி வணங்கி, வளங்கொழிக்கும் வணிகத் தெருக்களில் மாலைக் காலத்தைக் கொண்டாடினர்; ஞாயிறு தோன்றாமையால், இரவு இது பகல் இது என அறியமாட்டாமையால், தம் பெடையோடு கூடி வெளியே சென்று இரைதேடி உண்ணுவ தொழித்து வீடுகளிலேயே வாழும் ஆண்புறாக்கள், இருந்த இடத்திலேயே இருப்பதால் கடுக்கும் தம் கால்களின் வலியினை ஆற்றிக்கொள்ள கால்கள் மாறி மாறி நிற்கலாயின.

வீடுகளில், அவ் வீட்டில் வாழும் குற்றேவல் மகளிர், குளிர் போக்கிச் சூடுண்டாக்கும் கத்தூரி முதலியவற்றை

அம்மியிலிட்டு அரைக்கலாயினர். குளிர்காலமாதலின், சந்தனம் பூசுவாரின்மையால், சந்தனக்கல்லும் கட்டையும் பயனுறுதல் இன்றி, ஒருபால் போடப்பட்டுள்ளன. மகளிர் தம் கூந்தல் உலர அகிற்புகை ஊட்டுவாராயினர்; கோடையின் வெம்மை போக்கப் பயனுற்ற விசிறிகள், குளிர்காலத்தே பயனுறுதல் இல்லாமையால், நன்கு உறையிடப் பெற்றுச் சிலந்தி நூல்களால் சூழப்பெற்றுக் கைப்படாக் கோல்களில் தொங்கலாயின; மாடங்களில் வேனிற்காலத்தே தென்றல் உலாவுமாறு அமைத்த சாலேகங்களில் கதவுகள் எல்லாம் நன்கு மூடப்பெற்று விட்டன; வாடை, சிறுசிறு மழைத்துளிகளை வாரிவாரி இறைத்துக்கொண்டே வீசுவதால், வாய் குவிந்த கலத்து நீர் குடித்தால் குளிர் மிகும் என அஞ்சி அதை எவரும் உண்ணாது, வாயகன்ற சட்டிகளில் நெருப்பிட்டு அதன் அருகே அமர்ந்து குளிர் போக்கி வெப்பம் பெற்று வாழலாயினர்; இவ்வரும் பெரும் காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் உடையதாய்க் கூதிர்க்காலம் பிறந்துவிட்டது.

சிற்ப நூல் வல்லார், சித்திரைத் திங்களின் இடைப்பட்ட பத்துநாட்களில் யாதேனும் ஒருநாளில் பதினைந்தாம் நாழிகையில் நாற்றிசைக் கடவுளரையும் கைதொழுது தொழில் தொடங்கி, பேரரசர் வாழ்தற்கேற்ற பெருமை உடையவாய்ச் செய்து முடித்த மனைகளையும் வாயில்களையும் மண்டபங்களையும் சேர வளைத்துக்கொண்டு உயர்ந்த மதிலின்கண் உள்ள, இரும்பால் இயன்ற ஆணிகளும் பட்டங்களும் பொருத்தப்பெற்று, சாதிலிங்கம் வழிக்கப்பெற்றுத் தாழோடும் கூடிச் செய்யப்பெற்ற இரு கதவுகளையும், இடையே திருமகளையும், இருபாலும் குவளை மலர்களோடு யானைகளையும் உடைய சித்திரம் அமையப் பெற்ற உத்தரத்தில் செருகப்பெற்ற தொழில்வல்ல தச்சன் இடைவெளி சிறிதும் இன்றிக் கடாவிய பல மரங்களால் ஆகிய நெடுநிலையினையும், வெற்றிக்கொடி யேந்திய வீரர்களை மேலேற்றிக்கொண்ட யானைகளும் செல்லுமாறு, உயர்ந்த உயர்ச்சியினையும் உடைய மலையை, இடையே குடைந்தாற்

போன்ற வாயில்களையும், கவரிமான் ஏறுகளும் அன்னப் புட்களும் தாவித் திரியும் முன் வாசலையும், புது மணல் பரந்த முற்றத்தையும், திருமகள் தங்கிய சிறப்பினையும் உடைய குதிரைகள் புல் உணவைக் குதட்டுங்கால் எழும் ஒலியும், அரசன் நிலாப் பயன் துய்க்கும் நிலா முற்றத்தில் உள்ள அருவிநீர் விழும் ஒலியும், ஆங்கே அசைந்து இயலும் மயில்கள் எழுப்பும் இன்னோசையும் கூடி, மலைகளில் எழும் ஓசைபோல் ஒலிவிடும் கோயிலின் பெருமையும் சிறப்பும் மிக்க பாண்டியன் அல்லது பிற ஆடவர் எவரும் அணுகலாகா அரிய காவலை உடைய கட்டுக்களின், நீலமணியினைக் கடைந்தெடுத்தாற்போன்ற கரிய திண்ணிய தூண்களை உடையவாய், செம்பினைற் செய்தாற் போன்ற சித்திர வேலைகள் நிறைந்த நெடிய சுவரில் வெள்ளிய சாந்தைப் பூசி, பல இடங்களிலும் அழகிய பல பூக்களைக் கொண்ட ஒரு கொடியை எழுதி, மலைகளைக் கண்டாற் போன்ற உயர்ச்சியை உடையவாய், மலைகளைச் சார்ந்து வான வில் கிடந்தாற் போன்ற பல கொடிகளை உடையவாய், இருள் நீங்குமாறு யவனர் செய்து தந்த பாவைவிளக்கிலே நெய் வார்த்துப் பெரிய திரியிட்டு ஏற்றிய சுடரை நெய் வற்றுந்தோறும் வார்த்தும் ஒளி மழுங்குந்தோறும் தூண்டியும் காட்சிக் கினிமை உடையவாய்த் தோன்றும் நல்ல இல்லில்,

நாற்பது ஆண்டிற்கு மேற்பட்டுத் தானே வீழ்ந்த யானைத் தந்தங்களைக்கொண்டு சிற்பம் பல அமைத்துச் செய்த வட்டக் கட்டிலைச் சூழ, முத்து வடம் நாற்றி, கட்டிலின்மீது மெல்லிய படுக்கை விரித்து, அதன்மீது அன்னச் சேவலின் மயிர்களைப் பரப்பி, அதன்மீது அணைகளை அமைத்து, அவற்றின்மீது மாசு போகக் கழுவி, கஞ்சியிடப்பெற்ற தூய ஆடைகளை மடித்துப் போட்டு, அதன்மீது மலர் இதழ்களைத் தூவிச் செய்த படுக்கைமீது,

அரசன் பிரிந்து சென்றுளான் ஆதலின், அவனில்லாக் காலத்தில் ஒப்பனைசெய்து கொள்ளுதல் உயர்குல மகளிர்க்கு மாண்பன்று என்னும் எண்ணமுடையளாய்,

மூன் முத்தாரம் தாழ்ந்த தன் மார்பிலே, மங்கல நாண் ஒன்றுமட்டுமே தாழ, பொற்றொடி இருந்து பொலிவு பெற்ற முன்கைகளில் அவற்றிற்குப் பதிலாகச் சங்கால் இயன்ற சிறு வளையல் அணிந்து காப்பு நாணையும் கட்டி, பூத்தொழிலால் பொலிவுற்ற சிறந்த துகிலை நீக்கிவிட்டு, மாசேறிய நூல் ஆடையை அணிந்து, எண்ணெய் இட்டுக் கோதி முடியாமையால் நெற்றியில் வீழ்ந்தலையும் தலை மயிரையும், மகரக் குழை கிடந்து மாண்புற்ற இடத்தில் சிறு தாளுருவியைப்பெற்ற காதுகளையும், வாளை மீனின் பிளந்த வாயைப் போன்ற மோதிரத்திற்குப் பதிலாக முடக் கென்னும் சிறு மோதிரம் கிடக்கும் விரலினையும் உடைய ளாகி, நரை திரை உற்று நல்லறிவு பெற்று விளங்கும் செவிலித் தாய்மார்கள் அவள்பால் வந்து ஏதோ காரணம் கூறி, "நின் இன் துணையோர் இன்னே வருகுவர்" என்று இனிய வார்த்தைகள் உரைப்பவும், அவற்றைக் கேளாது மிகவும் கலங்கி, கட்டிலின் மேல்விதானத்தில் மெழுகு படாத்தில் எழுதியுள்ள திங்களின் பக்கத்திருக்கும் உரோ கிணியைப் பார்த்து, "நாமும் உரோகிணியைப் போன்று தலைவரைப் பிரியாமல் ஒன்றியிருக்கப் பெற்றிலோமே" என்று சிந்தித்துப் பெருமூச்செறிந்து, கண்களினின்றும் ததும்புகின்ற நீரைத் தனது சிவந்த விரலால் எடுத்துத் தெறித்துத் தோழியர் உறக்கம் உண்டாகுமாறு அடிகளைத் தடவிக் கொடுக்கவும், உறங்காது, ஓவியம்போல் அசை வின்றித் தனித்துத் துயர் உற்றுத் தவிக்கும் அன்பாற் சிறந்த அரிவைக்கு, அவள் பிரிவுத் துயர் தீருமாறு,

பகையரசர்களுடைய யானைப் படைகளைக் கொன்று அழித்துப் பின் அப் பகையரசர் வாட்களால் போழப்பட்ட விழுப்புண் பெற்ற வீரர்களைக்கண்டு அன்புரைகூறி ஆற்றிச் செல்லும் பொருட்டு, விளக்குகள் குளிர்ந்த வாடைக்காற்று அடிக்குந்தோறும் அசைந்து தெற்கு நோக்கி எழுந்து சாய்ந்து எரிய, தலையில் வேப்பந் தாரையும், தோளில் வேற்படையினையும் உடைய படைத் தலைவன், புண்பட்ட வீரரைக் காட்டிக் கொண்டே முன்

செல்ல, வழியில் சேற்றிலே வரிசையாக நிற்கும் குதிரைகள் உதறுகிற துளிகள் தன்மீது தெறிப்பவும், இடத்தோளி னின்றும் நழுவி வீழ்கின்ற தன் மேலாடையினை இடப் பக்கத்தே அணைத்துக்கொண்டு, வலக்கையினை, வாளெடுப் பான்வேண்டித் தோள்மீது வைத்துக்கொண்டே வெண் கொற்றக் குடை தன்மீது விழும் மழைத்துளிகளை மறைக்க நடந்து சென்று, புண்பட்ட வீரர்களுக்கு மனம் மகிழும்படி முகமலர்ந்து இன்னுரை பல கூறி அவர்களைப் போர்த் தொழில் ஒழிந்து இனிதிருக்குமாறு செய்து, நள்ளென்னும் ஓசை மிகும் நடுயாமத்திலும் உறக்கம் கொள்ளாது பாசறையினைச் சுற்றிச்சுற்றி வரும் வேந்தன், சேரன் செம்பியன் முதலாய பலரோடு மாறுபட்டு மேற் கொண்ட போர்த் தொழில் அவனுக்கு வெற்றியைத் தந்து இப்பொழுதே முடிவதாக! அதையே நான் விரும்பு கிறேன்,'' என்று வெற்றி மங்கையாம் கொற்றவையைப் பரவினள்.

நெடுநல்வாடை அளிக்கும் பொருள் இது.

இதில், கூதிர்காலத்துக் குளிரின் கொடுமை கண்டு, கோவலர் கொள்ளும் வருத்தமும், குளிரின் கொடுமை கண்டு அஞ்சுவதினும், பிறந்த ஊரைவிட்டு வேற்றூர் செல்ல வேண்டுமே என அஞ்சும் அவர்கள் உள்ளத்தின் ஊர்ப்பற்றும் உணர்த்தப்பட்டுள்ளன: குளிர் மிகுதியால், கன்றுக்கும் பால் கொடாது கடிய உதைக்கும் கறவை களின் இயல்பு, எத்துணைத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன காணுங்கள்!

பருஏர் எறுழ் திணி தோள் முடலையாக்கை முழுவலி மாக்கள் என்ற தொடர், ஒலிப்பளவிலேயே அம் மக்கள் எத்துணை அச்சந்தரும் யாக்கையர் என்பதை உணர்த்தும் அழகையும் காணுங்கள்!

கோடைக்கு ஆரம்; கூதிர்க்குக் கஸ்தூரி; கோடைக்கு விசிறி, கூதிர்க்கு அகிற்புகை; கோடைக்குத் தொகுவாய்க் கரகத்துக் குளிர்நீர்; கூதிர்க்குப் பகுவாய்த் தடவில் செந்

நெருப்பு: எனக் காலங்களின் தட்ப வெப்ப நிலைக்கேற்ற வாறு வாழும் பழந்தமிழர் வாழ்க்கையின் சிறப்பினையும் காணுங்கள்!

கைவல்கம்மியன் கவின்பெறப் புனைந்த செங்கேழ்வட்டம், தொகுவாய்க் கன்னல், பகுவாய்த்தடவு, யவனர் இயற்றிய வினைமாண் பாவை, புதுவதியன்ற மெழுகுசெய் படம் முத லாயின அக்காலச் செல்வச் சிறப்பையும் தொழிலின் நுட்பத் தையும் உணர்த்துமாறும் காணுங்கள்!

கணவனைப் பிரிந்த மகளிர் கோலங் கொள்ளுதல் கூடாது; மாலையில் விளக்கேற்றி மலர்தூவி வணங்கல் மகளிர்க்கு அழகு என்ற மகளிர்தம் மாண்புகளும் உரைக்கப்பட்டுள்ளன.

வென்றெழு கொடியோடு வேழம் சென்று புகும் குன்று குயின்றன்ன ஓங்குநிலை வாயிலும், நிலவுப் பயன் கொள்ளும் நெடுவெண் முற்றமும், ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பும், ஆறுகிடந்தன்ன அகல் நெடுந்தெருவும், வானுற நிவந்த மேனிலை மருங்கின் வேனிற் பள்ளித் தென்வளி தரூஉம் நேர் வாய்க் கட்டளையும் அக்கால மக்களின் கட்டடச் சிறப்பை உணர்த்துவனவாம்.

'புண்பட்ட வீரர் போருக்குச் செல்லுதல் வேண்டா' என்று அன்புரைகூறி அவர்களோடு நள்ளென் யாமத்தும் உறங்காதுஉறையும் பழந்தமிழ் அரசர்களின் பண்பு எத்துணைச் சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டுளது!

மலர்விரிதல் கண்டு மாலைப்போதினை உணரும் மகளிர் தம் அறிவும் அழகாகக் கூறப்பட்டுளது.

ஆயர்தம் ஆனிரைகளைக் கூறுங்கால், "ஏறுடை இன நிரை" என்று கூறிய சிறப்பு உணர்தற் பாலது; நாட்டில் நல்ல கால் நடைகள் வேண்டுமானால், அவற்றைத் தோற்று விக்க நல்ல காளைகள் தேவை; அதை அரசியலார் உணர்ந்து ஆங்காங்கு அத்தகைய காளைகளைப் பேணி வளர்த்து வருகின்றனர்; இந்த உண்மையைப் பழந்தமிழர்

களும் உணர்ந்திருந்தனர்; காளைமாடுகளைப் பேணி வளர்த்தனர்; அதற்காகவே காளைவிடு விழா, ஏறு தழுவுதல் போன்ற விழாக்களையும் மேற்கொண்டனர்; அவர்களின் இப் பண்பின் விளைவாகவே சிற்றூர் தோறும் இன்றும் காளை மாடுகள், 'கோயில் மாடுகள்' 'பெருமாள் மாடுகள்' என்ற பெயர்களில் ஊர்மக்களால் வளர்க்கப்பட்டு வருகின்றன; இந்த உண்மை அறிந்தவர் தமிழர் ஆதலின், மந்தைகள் தோறும், காளைமாடுகளைக் கொண்டு சென்றனர்; அதனை நன்கு உணர்ந்து "ஏறுகளை உடைய ஆனிரைகள்" என்று கூறிய நக்கீரனார்தம் நுண் மாண் நுழைபுலம் நம்மால் அறிந்து மகிழத்தக்க மாண்புடைய தாமன்றோ!

P

கழக வெளியீடு: சூசக

பதிப்பாளர்:
திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட்.,
1/140, பிராட்வே, சென்னை-1.

தலைமை நிலையம்:
98, கீழைத் தேர்த்தெரு, திருநெல்வேலி-6.

விலை ரூ. 1-75.

அப்பர் அச்சகம், சென்னை-1.